பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள் ஓர் ஆய்வு

முனைவர் நே. சோசப்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் ஓர் ஆய்வு

முனைவர் நே. ஜோசப்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-289-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 229

திருவள்ளுவராண்டு 2032 ஆனி - சூலை 2001

நூல்	:	பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள் ஓர் ஆய்வு
ஆசிரியர்	:	முனைவர் நே. ஜோசப்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மருத்துவம்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	(viii + 148) 156
தாள்	:	டி.என்.பி.எல். கிரீம்வூவ் 16 கே.ஜி.
அளவு	:	1/8 டெம்மி
நூற்கட்டுமானம்	:	சாதாரணக்கட்டு
விலை	.	உரூ. **90/-**
படிகள்	:	500
அச்சுப் பதிவம்	:	வசந்தம் கம்ப்யூட்டர்ஸ், தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

தமிழகத்தில் தொன்றுதொட்டுத் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம் இருந்து வருவதை எவரும் மறுக்கவியலாது. மேனாட்டாரின் ஆதிக்கம் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட பிறகு அவர்களின் பழக்க வழக்கம், பண்பாடு போன்றவற்றின் தாக்கம் தமிழக மக்களையும் விட்டு வைக்கவில்லை. இந்த வகையில் மேலைநாட்டு மருத்துவ முறைகளும் இச்சமுதாயத்தில் வேரூன்றத் தொடங்கின. எளிதாக நோயைத் தீர்த்த காரணத்தினால் அனைத்து மக்களாலும் மேலை நாட்டு மருத்துவ முறை மீது ஆர்வம் ஏற்பட்டு மிக வேகமாகப் பரவியது.

மேலை நாட்டு மருத்துவ முறைகளை எளிதில் தமிழக மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அறிஞர் பலர் தமிழில் மொழி பெயர்த்தும், ஆங்கில முறையைத் தழுவியும் எழுதலாயினர். இம்முயற்சியில் கிறித்தவப் பாதிரிமார்களின் பணி குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தது.

இவற்றையெல்லாம் 'பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் ஓர் ஆய்வு' என்ற இந்நூலில் முனைவர் நே. ஜோசப் சிறந்த முறையில் ஆய்வு செய்துள்ளமை பாராட்டுக்குரியது. சான்றுக்குத் தமிழில் வெளிவந்துள்ள நூல்களில் பத்தைத் தெரிவு

செய்து அவற்றில் அமைந்துள்ள மொழிநடை, பத்தி அமைப்பு, எழுதும் முறை, கலைச்சொல் பயன்பாடு, உத்திகள் போன்ற தலைப்புகளில் ஆய்வு செய்துள்ளார்.

பொதுமக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பயன் நல்கும் விதத்தில் இதுவரை தமிழில் 1865ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரை வெளிவந்துள்ள மருத்துவ நூல்களின் விரிவான பட்டியலை இணைப்பாகத் தந்துள்ளமை போற்றுதலுக்குரியது.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்நூலை உருவாக்கிய நே.ஜோசப் அவர்கள் பாராட்டுக்குரியவர். அன்னாருக்கு என் வாழ்த்துக்கள்!

நாள்:20-06-2001

(கதிர். மகாதேவன்)

நன்றியுரை

அறிவியல் மயமான இன்றைய காலச் சூழலில் மக்கள் சார்ந்த அறிவியல் குறித்த முன் முயற்சிகளை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். அறிவியலின் முதன்மைப் பிரிவான மருத்துவம் பொதுமக்கள் வாழ்வில் அன்றாடம் இயைந்து செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவத்தின் பல்வேறு நுணுக்கங்களையும் அனைத்துத் தரப்பு மக்களும் அறிவது பயனுடையதாகும். இக் கருதுகோளின் அடிப்படையில் மேற்கொள்ளப் பெற்ற முயற்சிகளை வரலாற்று நிலையிலும் மொழி நடை அமைப்பு நிலையிலும் ஆராய்ந்தறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்விற்கு அனுமதி நல்கிய மாண்பமை முன்னைத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கட்கு என் நன்றி.

இவ்வாய்வினை நூலாக்கம் செய்ய அனைத்து நிலையிலும் ஆவன செய்து இந்நூலுக்காக அரியதோர் அணிந்துரையும் நல்கி என் ஆய்வுப் பணிகளுக்கெல்லாம் ஊக்கமளித்து வருகின்ற மாண்பமை துணைவேந்தர் **முனைவர் கதிர்மகாதேவன்** அவர்கட்கு என் நன்றி உரியது.

இவ்வாய்வு நடைபெற்ற காலத்தில் ஊக்கமூட்டிய முன்னை அறிவியல் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம.சுந்தரம் அவர்கட்கும் என் நன்றி.

இவ்வாய்விற்குப் பல நிலையிலும் உதவி புரிந்த நண்பர்கள் முனைவர் க.இரவீந்திரன் அவர்கட்கும் தா.ஈசுவரப்பிள்ளை அவர்கட்கும் என் நன்றி.

இவ்வாய்விற்கு உதவிய பதிவாளர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் என் நன்றி.

இவ்வாய்வை நூலாக்கம் செய்வதில் உதவி புரிந்த பதிப்புத்துறை இயக்குநர்(பொறுப்பு) முதுமுனைவர் ம.சா.அறிவுடைநம்பி அவர்கட்கும் அச்சகம் மற்றும் பதிப்புத்துறை நண்பர்களுக்கும் நன்றி. மேலும் நூலாக்கத்திற்குத் துணை நின்ற முனைவர் அர. கமலதியாகராசன் அவர்கட்கும் என் நன்றி.

நே. ஜோசப்

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	01
2.	மருத்துவத் தமிழாக்க முயற்சிகள்	04
3.	பொதுமக்களுக்கான மருத்துவ நூல்களில் உரைக்கட்டு'	11
4.	பொதுமக்களுக்கான மருத்துவ நூல் எழுதுதல் - மேம்படுத்தும் வழிமுறைகள்	53
5.	முடிவுரை	83
	துணைநூற்பட்டியல்	86

இணைப்பு

1.	மருத்துவ நூல்கள் வளர்ச்சிப் போக்குகள்	89
2.	முக்கிய வெளியீடுகளும் மருத்துவநூல்களும்	139

1.2 ஆய்வுப்பரப்பு

மேனாட்டாரின் ஆதிக்கம் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட பிறகு மேற்கத்தியப் பண்பாடு எந்த அளவிற்கு ஆதிக்கம் பெற்றதோ அது போலவே மருத்துவத்துறையிலும் மேல்நாட்டு மருத்துவ முறைகள் ஆதிக்கம் பெறத் தொடங்கின. பல காலமாகக் கையாண்டு வரப்பெற்ற சித்த மருத்துவமுறை இருந்த போதிலும் மேல்நாட்டு மருத்துவமுறை நோயை எளிதாகக் குணப்படுத்துவதாக இருந்தமையால் அனைத்துத் தரப்பி னருக்கும் அது குறித்து அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்பட்டது. இது மக்களிடையே அம்மருத்துவ முறைகள் வேகமாகப் பரவு தலுக்கும் காரணமாக அமைந்தது. மேல்நாட்டு மருத்துவமுறை அறிமுகத்திற்கு முக்கிய காரணகர்த்தாவாக அமைந்தவர்கள் மேனாட்டு மதத்தொண்டர்களும் ஆட்சியாளர்களுமே எனலாம். அவர்கள் மக்களுக்கு நோயற்ற வாழ்வு அளிக்கப் பெரிய முயற்சி எடுத்தார்கள். அம்முயற்சியின் ஒரு பகுதியே தமிழில் மேல்நாட்டு மருத்துவ நூல்கள் முதன்முதலில் தோன்றக் காரணமாயின. தமிழ்ச் சமுதாயமும் நாளடைவில் அவற்றைத் தேவை கருதி ஏற்றுக்கொண்டது. இத்தகைய ஊக்கத்தின் அடிப் படையில் மேல் நாட்டு மருத்துவம் மேலும் வளமுறும் வண்ணமும் மக்கள் அம் முறையில் தெளிவு பெறும் வண்ணமும் மருத்துவக் கருத்துக்கள் பல கட்டுரைகள், இதழ்கள் மற்றும் நூல்கள் வாயிலாக வெளிக் கொணரப்பெற்றன. இம்முயற்சியின் தோற்றம், தமிழாக்க முயற்சிகள் குறித்து இவ்வாய்வு அமைகிறது. மேலும் நூலாசிரி யர்கள் மக்களிடையே பரப்ப விரும்பும் கருத்துக்களைத் தெரிவு செய்து அவற்றை வெளிப்படுத் துவதில் தங்களுக்கெனத் தனிப் பாணிகளை வகுத்துக் கொண்டு நூலாக்கியுள்ளார்கள். இந்த வகையில் தமிழில் வெளி வந்த வெவ்வேறு நூலாசிரியர்களின் மருத்துவ நூல்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றின் உரைக்கட்டு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை மையமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

1.3 ஆய்வின் இன்றியமையாமை

பொதுமக்களுக்காக எழுதப்பெறும் மருத்துவ நூல்களின் தன்மையை மேலும் மேம்படுத்திட வழிசெய்யும் ஆய்வாக இது அமையும்.

1.4 ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வு முக்கியமாகப் பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1) தமிழில் மருத்துவ நூலாக்க முயற்சிகளை அறிதல்.
2) தமிழில் மருத்துவ நூல்களின் உரைக்கட்டு குறித்துப் பொதுவாக அறிதல்.
3) தமிழில் மருத்துவ நூல்களின் தன்மையை மேலும் மேம்படுத்திட வழிவகை காணல்.

1.5 இயல் பாகுபாடு

'பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள்' எனும் தலைப்பிலான இவ்வாய்வு கீழ்க்காணும் ஐந்து இயல்களாகப் பிரித்து நோக்கப்பட்டுள்ளது.

அ) இயல் பாகுபாடுகள்

1) முன்னுரை
2) மருத்துவத் தமிழாக்க முயற்சிகள்
3) மருத்துவ நூலாசிரியர்கள் கையாண்டுள்ள உரைக்கட்டு
4) பொதுமக்களுக்கான மருத்துவரால் எழுதும் முறையை மேம்படுத்தும் வழிமுறைகள்
5) முடிவுரை

1.6 இயல் செய்திகள்

1.6.1 இயல் ஒன்று :

இவ்வியல் முன்னுரையாக அமைகிறது. ஆய்வுப்பரப்பு, நோக்கம் போன்றவை இதில் அடங்கும்.

1.6.2 இயல் இரண்டு :

மருத்துவத் தமிழாக்க முயற்சிகளைக் கூறும் இயலாக இது அமைகிறது. மருத்துவ நூல்கள், இதழ்கள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றின் அறிமுகம், ஆசிரியர் முதலிய செய்திகளைக் கூறும் இயலாக இது அமைகிறது.

1.6.3 இயல் மூன்று :

மருத்துவ நூல்களில் காணப்பெறும் உரைக்கட்டு பற்றி இந்த இயல் ஆய்கிறது. பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட பத்து மருத்துவ நூல்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த ஆய்விற் காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.6.4 இயல் நான்கு :

பொது மக்களின் இயல்புகள் மற்றும் பிரிவுகள் போன்றவை இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் விளக்கங்கள், உரைக்கட்டின் தன்மைகள், உரைக்கட்டு எவ்வாறு அமையப்பெறவேண்டும் என்பன பற்றி விளக்கும் இயலாகவும் இது அமைகிறது.

1.6.5 இயல் ஐந்து :

இது முடிவுரையாகும். இயல்களில் கூறப்பட்ட கருத்துக்களின் சுருக்கங்கள், தெளிவு செய்யப்பட்ட கருத்துக்கள் மற்றும் புதிய உண்மைகள் ஆகியவற்றைக் கொண்டதாக இந்த இயல் அமைகிறது.

2. மருத்துவத் தமிழாக்க முயற்சிகள்

2.0 மக்களைச் சென்றடையும்படி நவீன கருத்தமைப்புச் செய்திகளைத் தந்து மருத்துவம் குறித்த தெளிவுகளைப் பெறும் சிந்தனை மேனாட்டாரின் வருகைக்குப் பின்பே உருவாயிற்று. இதில் குறிப்பாக ஆங்கில மதத் தொண்டர்கள் தமிழ்நாட்டில் சமூகச் சேவையில் பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள். *இவர்கள்* மக்களை எல்லா வகையிலும் மேம்படுத்த விரும்பினார்கள். நோயற்ற வாழ்வு அளிக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பல வழிகளில் முயன்றார்கள். இச்சமுதாயப் பணியின் தாக்கத்தால் தமிழ்மொழியும் வளர்ச்சியடையத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்றனவே இந்தத் தமிழாக்க முயற்சிகள். அப்பணி இன்றும் தொடர்கிறது.

2.1 நூல்கள்

தமிழில் மருத்துவ நூல்கள் அறிமுகம் பெற்ற நிலையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் இலங்கையில் முதன்முதலாக மருத்துவப் பயிற்சிக் கூடம் ஒன்று தொடங்கப் பெற்றது. அதில் தமிழிலேயே மருத்துவப்பயிற்சி அளிக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன. சாமுவேல் பிஷ்கீறின் என்னும் ஆங்கிலேய மதத்தொண்டர் இம்மருத்துவக்கல்லூரியில் பணி செய்வதற்காக இலங்கை வந்தார். அன்னாரின் பெரும் முயற்சியில் மருத்துவத் தமிழாக்கப்பணி தொடக்கப் பெற்றது. முதன் முதலில் வேதியியலையும் மருத்துவத்தையும் தமிழில் கற்பிக்கும் முயற்சி முக்கியமாகக் கொள்ளப்பெற்றது. தொடர்ந்து பல மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவரத் தொடங்கின.

1857இல் பெண் நோயை விவரிக்கும் மருத்துவ வைத்தியம் (Mid-wifery), 1872 இல் மனுஷ அங்காதிபாதம் (Human anatomy), வைத்தியாகரம் (The Principles & Practices of Medicine), இரண வைத்தியம் (The science & Art of surgery) மனுஷ சுகாரணம் (HumanPsychology) முதலிய நூல்கள் வெளிவந்தன. 1884இல் வந்த பதார்த்த சாரம் (Parmacopodia India) வைத்தியம் (Practice of Medicine) ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களையும் இவ்வளவில் கூறலாம். கிரீன் என்பவர் 1852 இல் அங்காதிபாத சுகரண உற்பாவண நூல் (Anatomy, Physiology & Hygine) என்ற நூலை

மொழிபெயர்த்தார். கிரீனால் கலைச்சொல் தொகுதிகளும் வெளியிடப் பெற்றுள்ளன. 1888ஆம் ஆண்டில் கிரீன் மதுரை பசுமலைக் கல்லூரியில் 'மானிட மர்ம சாஸ்திரம்' என்ற தலைப்பில் தமிழில் சொற்பொழிவாற்றியுள்ளார். 1865இல் ஜெகந்நாதம் நாயுடு 'சரீர வினாவிடை' (A Catechism of Human Anatomy & Physiology) என்ற மருத்துவ நூலை எழுதி வெளியிட்டார். 1890 இல் முனிசாமி முதலியார் 'மானிட ரகசியமென்னும் சரீர சாஸ்திரம்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1902இல் இலங்கை மதத்தொண்டர்களால் 'Grays Anatomy' என்ற ஆங்கில நூல் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1904இல் வெங்கடஇரமண ஐயரின் 'தேகத்துவ சாஸ்திரம்' என்ற நூல் ரங்கூனில் வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூல் பொது மக்களுக்குத் தேவையான உடற்கூறு தொடர்பான அடிப்படை மருத்துவச்செய்திகள் கொண்டதாகும்.

மேல் நாட்டு மருத்துவ முறைகளைத் தமிழில் சுருக்கமாக வெளியிடும் முயற்சியாக 1909இல் 'A Compendium of English Medical Science' என்ற நூலின் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் உடற்கூற்றியல் மட்டுமன்றி மருத்துவம் குறித்த பொதுவான பல விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கலைச்சொல்லாக்க முயற்சிகளும் இந்நூலின் வழி மேற் கொள்ளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இதே ஆண்டில் 'இங்கிலிஷ் மருத்துவ சாஸ்திரம்' என்னும் நூல் மேனாட்டு மருத்துவ முறை கூறும் நூலாக வெளிவந்துள்ளது. 1911இல் என்.ஆர். கிருஷ்ணாஐயங்கார் எழுதிய பிளேக் நோயைப் பற்றிய வரலாறு மற்றும் 'மெட்டீரியா மெடிக்கா' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவையாக விளங்கின. நோய்களின் தன்மைகளை விளக்கும் நிலைக்கு மாறாக மருந்துகளின் தன்மைகள் குறித்து மட்டுமே விளக்கும் நூலாக 'மெட்டீரியா மெடிக்கா' அமைந்துள்ளது. மருந்தின் அலகுகள், மருந்தின் ஆற்றல், மருந்து கொடுக்கப்பட வேண்டிய நோய்கள் மற்றும் மருந்தின் அளவுகள் அதிகமானால் ஏற்படும் தீயவிளைவுகள் யாவும் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன.

1912 இல் 'ஜீரணம்– இரத்த ஓட்டம்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. 1915இல் 'சரீர சாஸ்திரம்' என்னும் உடற்கூற்றியல் நூலைச் சீதா இராமய்யர் எழுதி வெளியிட்டார். 1919ஆம் ஆண்டில் இராமராவ் எழுதிய 'ஆரோக்கியமும் அசௌகரியமும்' என்ற மருத்துவ நூல் வெளிவந்துள்ளது. கொசுக்களின் கொடுமையை உணர்த்தும் நூலாக 'கொசுக்களும் மலேரியா ஜுரமும்' என்ற நூல் இதே காலகட்டத்தில் வெளிவந்துள்ளது.

காலம் செல்லச்செல்ல வெளிவந்த மருத்துவ நூல்கள் பெரும்பாலும் நோய்களைப் பற்றியும் மருத்துவ முறைகள் பற்றியும் விரிவாக விளக்குவனவாக அமைந்துள்ளன. 1924இல் புதிய ஆரோக்கியம் என்ற நூல் வெளியிடப்பட்டது.

இதன் ஆசிரியர் பில்ப். எல்.நெல்சன் ஆவார். கடுமையான நோய்கள், உடற்கூறு இயல், நோய்களும் அதன் தீர்வுகளும் போன்ற வகையிலான செய்திகள் விரிவாகத் தரப்பட்டுள்ளதோடு மனித உடற்கூறு குறித்த பல வண்ணப்படமும் இடம் பெற்றுள்ளது. மேலும் சிறந்த கலைச் சொல்லாக்க முயற்சியும் இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1926இல் சிவராமலிங்கப் பிள்ளை "சுகாதார சம்பந்தமான கேள்விகளும் அவற்றின் விடைகளும்" என்னும் நூலையும் தாமோதரன் பிள்ளை 'சுகவழி' என்னும் நூலையும் ஆக்கியுள்ளனர். 1927இல் கே.ஏ. இராஜா எழுதிய கண்ணோய் என்னும் நூலும் இரத்தினம் எழுதிய 'முதலுதவி வீட்டு மருத்துவம்' என்னும் நூலும் சுப்பாராவ் எழுதிய 'நீராகாரத் தெளிவு நீரின் ரகசியம்' என்ற நூலும் வெளிவந்துள்ளன.

மேலும் "ஈ என்னும் கொலைகாரன்", "நவீன நலவியல் நூல்" ஆகிய நூல்கள் கே.ஏ. இராஜாவை ஆசிரியராகக் கொண்டும் "கண்வலி" என்னும் நூல் கஸ்தூரி ரங்க அய்யங்காரை ஆசிரியராகக் கொண்டும் 'விஞ்ஞான பாஸ்கரன்' என்னும் நூல் பொன்னையாவை ஆசிரியராகக் கொண்டும் வெளியிடப் பெற்றுள்ளன. மீண்டும் உடற் கூற்றியல் தொடர்பான நூலாக ஏகாம்பரநாதன் எழுதிய சரீர சாஸ்திரம் 1930இல் வெளிவந்தது.

இக்கால கட்டத்திற்குப் பின் சில ஆண்டுகள் தமிழில் மருத்துவ நூல் களின் வருகை அருகியே காணப்பட்டுள்ளது. 1933இல் முருகேச முதலியார் எழுதிய 'நச்சு நூல்' என்னும் நூல் மட்டுமே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தொடர்ந்து 1942ஆம் ஆண்டில் "ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா" என்னும் நூல் சென்னையில் வெளிடப்பெற்றுள்ளது. சுந்தரம் எழுதிய ஆரோக்கிய உணவு என்னும் நூல் 1948இல் வெளியானது. 1949இல் சின்னத்தம்பி எழுதிய 'அயனாந்த தேக நோய்கள்' என்னும் நூலும் கிருஷ்ண மூர்த்தி எழுதிய 'நூறாண்டு வாழ முடியுமா?' என்ற நூலும் இராஜன் எழுதிய " வீட்டு வைத்தியர்" என்ற நூலும் வெளிவந்தன. இவற்றுள் ' வீட்டு வைத்தியர் ' என்ற நூலில் டாக்டர் இல்லா நேரத்தில் நோயாளிகளுக்குப் பயன்படும் குறிப்புகள் காணப்படுகின்றன.

இவற்றைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பல பதிப்பகங்கள் மருத்துவ நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டன. மணிமேகலைப் பிரசுரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ்ப் புத்தகலாயம், வானதி பதிப்பகம், பாரி நிலையம், பூம்புகார் பதிப்பகம், கிரியா போன்றவை குறிப்பிடத்தக்கன. தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள அறிவியல் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறையும் இம்முயற்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்து வருகிறது. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் 35 மருத்துவ நூல்களையும் மணிமேகலை 40 மருத்துவ நூல்களையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள் மருத்துவர்களாலும், பிறராலும் எழுதப்பெறுகின்றன. மருத்துவ நூலாசிரியர் வரிசையில் டாக்டர் எஸ்.இராஜா, டாக்டர் ரெக்ஸ், டாக்டர் கதிரேசன், டாக்டர் லோகமுத்து கிருஷ்ணன் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். ஏனையோரில் தமிழ்வாணன், அன்புதாசன், முத்தையா, வி.என். சாமி, டாக்டர். இராம. சுந்தரம் போன்றோர் முக்கியமானவராவர்.

பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்னும் இலக்கை இலக்கணமாகக் கொண்டு எழுதிய சிறப்பு தமிழ் வாணனையே சாரும். அதுபோலவே மொழிபெயர்ப்பு நூலாகிய டேவிட் வெர்னர் எழுதிய ' டாக்டர் இல்லாத இடத்தில் ' என்ற நூலும், டாக்டர் இராம.சுந்தரம் எழுதிய 'உடல்நலம்' என்ற நூலும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இதழ்கள்

2.2 தமிழில் அறிவியல் மற்றும் மருத்துவக் கருத்துக்களை வெளிக் கொணரும் பணி 'தமிழ்ப் பத்திரிக்கை' என்ற மாத இதழ் மூலம் 1831இல் தொடங்கியது. இதன் ஆசிரியர் ஈஸ்வர் சந்தர்சத் என்பவர் ஆவார். எனினும் மூன்றாண்டுகளுக்கு மேல் இந்த முயற்சி நடைபெறவில்லை. மேலும் தினவர்த்தமானி (1855), ஞானவிநோதினி(1877), விவேக சிந்தாமணி(1892) ஞானபானு (1894) போன்ற இதழ்கள் மருத்துவ அறிவியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. ஞானபோதினி, மஞ்சரி ஆகிய இதழ்களும் இதே காலகட்டத்தில் வந்தவையாகும். 1897இல் இருமாத இதழ்கள் மக்களுக்கு அறிவு நலத்தை முற்றிலும் சிறந்த முறையில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வெளிவந்தன. அவற்றுள் 'ஞான போதினி' பூர்ணலிங்கம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டும் 'சித்தாந்த தீபிகை' கல்யாண சுந்தர நாடான் என்பவரை ஆசிரியராகக் கொண்டும் வெளிவந்தன.

இருபதாம் நூற்றாண்டில், அதாவது 1901இல் வெளிவந்த முதல் இதழ் 'ஆரோக்கிய வழி' ஆகும். இதைத் தொடர்ந்து நல்வழி, தமிழர் நேசன், செந்தமிழ் போன்ற இதழ்கள் அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் ஆர்வம் செலுத்தியுள்ளன. 1916இல் இராஜகோபாலச்சாரி அவர்களால் தொடங்கப்பெற்ற 'சாஸ்திர பரிபாஷா' என்ற இதழ் கலைச்சொற்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

1923இல் மூன்று மருத்துவ இதழ்கள் தொடங்கப் பெற்றன. முதலாவது சென்னை ஆயுர்வேதக் கல்லூரியின் சார்பில் வெளியிடப்பெற்ற 'தன்வந்திரி' என்னும் மாதம் இருமுறை இதழ். இதில் நோயைப் பற்றிய கட்டுரைகளும் மருந்து முறைகளும் காணப்பட்டன. இரண்டாவது ஆயுர்வேதம் என்ற மாத

இதழ். இது சீராமலே தாஸ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பெற்றது ஆகும். மூன்றாவதாக 'ஆரோக்கியமும் சிசுக்களின் சுகவாழ்வும்' என்ற மாத இதழ் தொடங்கப்பெற்றது. இதன் ஆசிரியர் டாக்டர் அன்னா தாமஸ் அம்மை யார் ஆவார். இது திருநெல்வேலியிலிருந்து வெளியானது. இது குழந்தை களின் நல்வாழ்விற்கான வழிமுறைகளையும் உடல் நலப் பாதுகாப்பிற்கான வழி களையும் கூறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

1926இல் தொடங்கப்பெற்ற 'ஜஸ்டீஸ்' பத்திரிக்கை அறிவியல் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இதில் பல கலைச்சொற்கள் இடம் பெற்றன. 1928இல் 'மருத்துவன்' என்ற பத்திரிக்கையும் 1929இல் 'விஞ்ஞான பாஸ்கரன்', 'வைத்திய களஞ்சியம்' என்ற பத்திரிக்கைகளும் 1930இல் 'ஆரோக்கிய சிந்தாமணி' என்ற இதழும் வெளிவந்தன. ஆரோக்கிய சிந்தா மணியில் பிள்ளைப்பேறு, குழந்தை வளர்ப்பு, நோய்த்தடுப்பு முறைகள் போன்றவற்றைப் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்பெற்றன. 1933இல் வெளி வந்த 'தமிழ்க்கடல்' பொதுமக்களுக்கு இன்றியமையாத அறிவியல் செய்திகளை வெளியிட்டது. 1941இல் மாங்காடு வடிவேலு முதலியார் 'தமிழ் மருத்துவப் பொழில்' என்ற இதழை வெளியிட்டார். 1948ஆம் ஆண்டு கலைக்கதிர் என்ற மாத இதழ் ஜி.ஆர். தாமோதரன் தலைமையில் வெளிவரத் தொடங்கியது. 1953இல் வெளிவரத் தொடங்கிய 'விஞ்ஞானி' என்ற இதழும் அறிவியல் கருத்துக்களை வழங்கியது.

1965இல் 'இளம் விஞ்ஞானி' என்ற இதழ் தொடங்கப்பெற்றது. 1967இல் 'கூரியர்' இதழினை ஐ.நா. நிறுவனம் சார்பாகத் தமிழில் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியிட்டது.

1974இல் 'விஞ்ஞானச்சுடர்' என்ற மாத இதழ் கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி சார்பில் வெளியிடப்பட்டது.

இவை தவிர, தினமலர், தினகரன் போன்ற நாள் இதழ்களும் மருத்துவக் கட்டுரைகளை வெளியிடுகின்றன. தினமணியில் வாரம் ஒருமுறை 'தினமணிச்சுடர்' என்ற தலைப்பில் பல அறிவியல் கட்டுரைகள் முன்பு வெளி வந்தன. இப்போது வெள்ளிமணி என்னும் தலைப்பில் பல பயனுள்ள மருத்துவக் கட்டுரைகள் வெளியாகின்றன. மேலும் மருத்துவமலர் என்னும் தலைப்பில் ஆண்டுதோறும் தனி நூலையும் தினமணி வெளியிடுகிறது.

மாத இதழ்களான கலைக்கதிர், கூரியர், விஞ்ஞானச்சுடர், நல்வழி போன்றவை தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கட்டுரைகள்

2.3 மருத்துவக் கட்டுரைகளும் பல இதழ்களில் வெளிவரத் தொடங்கின. 'அங்க சேதன சாஸ்திரம்' மற்றும் 'பாலமுது' என்ற கட்டுரைகள் மதுரை தமிழ்ச் சங்கத்தாரால் வெளிடப்படும் செந்தமிழ்ப் பத்திரிக்கையில் 1904இல் வெளிவந்துள்ளன. இவை இராஜகோபாலச்சாரியால் எழுதப் பெற்றவையாகும். இவற்றைத் தொடர்ந்து 'இருதய இயந்திரம்', 'வாந்திபேதி' என்ற தலைப்புக்களில் அளவற்ற கட்டுரைகள் அப்புசாமி ஐயர் அவர்களால் 1919இல் தமிழர் நேசன் பத்திரிக்கையில் எழுதப்பெற்றன. கிருஷ்ணமூர்த்தி நாயுடு எழுதிய 'ஸடரப்டோ மைசீன்' குப்பு ரத்தினம் எழுதிய 'கூந்தல்' கேப்டன் சேஷாத்திரிநாதன் எழுதிய 'தூக்கம்' லட்சுமி எழுதிய 'புற்றுநோய்' ஜகநாதன் எழுதிய 'க்ஷயரோகம்' போன்றவை 1950இல் கலைக்கதிரில் வெளிவந்த மருத்துவக் கட்டுரைகளாகும். 1951ஆம் ஆண்டில் இராசமாணிக்கம் எழுதிய இரத்தக் குழாயில் 'இரண சிகிட்சை', இளங்கணத்தான் எழுதிய 'விடாய் ஆற்றுதல்' மற்றும் 'சுண்ணாம்புச் சத்து', சிவசுப்பிரமணியம் எழுதிய 'பென்சிலின் காளான்' நாகராசன் எழுதிய 'ஒரு மாய மருந்து' ஆகிய கட்டுரைகளும் வெளிவந்தன. தொடர்ந்து பல மருத்துவக் கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவரத் தொடங்கின. (இணைப்பு)

இயல் மூன்று

பொது மக்களுக்கான மருத்துவ நூல்களில் 'உரைக்கட்டு'

பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள் பல தமிழில் எழுதப் பெற்றுள்ளன. அந்நூல்களில் கையாளப் பெற்றுள்ள உரைக்கட்டுகளில் ஒப்புமை காணப்படவில்லை. இதற்குக் காரணம் நூலாக்கத்தில் ஒவ்வொரு நூலாசிரியரும் தமக்கென ஒரு பாணியைக் கையாள்வதேயாகும். தாம் வெளிப் படுத்த நினைக்கும் கருத்துக்கள் குழப்பமின்றி மக்களைச் சென்று சேர வேண்டுமென்ற நோக்கில் உரைக்கட்டினை அமைத்துச் செல்லும்போது ஆசிரியரின் தனித்துவம் அதிகமான தாக்கத்தினை ஏற்படுத்திக் கருத்து வெளிப்பாட்டில் தனித்தன்மை கொண்டிருப்பதைக் காண இயலும். இது குறித்து ஆராய்வதே இவ்வியலின் நோக்கம்.

இந்த ஆய்விற்காகப் பத்து வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதிய பத்து மருத்துவ நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றில் எட்டு நூல்கள் மேனாட்டு மருத்துவம் பயின்ற மருத்துவர்களால் எழுதப்பட்டனவாகும். ஏனையவை தமிழ் மொழியில் சிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்டவையாகும். ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பத்து நூல்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

வ எண்	ஆசிரியர்கள்	நூல்கள்
1.	டாக்டர் எஸ். இராஜா	- சர்க்கரை நோயால் சங்கடமா?
2	டாக்டர் பி எம். ரெக்ஸ்	- டாக்டர் பேசுகிறார்
3	டாக்டர் அ கதிரேசன்	- க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்
4.	டாக்டர் வ. நம்பி	- நோயற்ற வாழ்வுக்கு
5.	டாக்டர் இராசமாணிக்கம்	- எலும்பு பாதுகாப்பு
6	டாக்டர் கா ரா கிருட்டிணன்	- சேய் நலம்
7.	டாக்டர் ஞா. இராசராசேசுவரி	- மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்
8	டாக்டர் கே என். இராஜன்	- தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்
9	தமிழ்வாணன்	- நீரிழிவு
10	வி.என் சாமி	- புகையும் புற்று நோயும்

மேற்கூறிய நூல்கள் கீழ்வரும் தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன. அவை :

1) மொழிநடை
2) பத்தி அமைப்பு
3) தலைப்புப் பயன்பாடு
4) எழுதும் முறை
5) கலைச்சொல் பயன்பாடு
6) உள்ளடக்கம்
7) புரிதிறன்
8) உத்திகள்

என்பனவாகும்.

3.1 மொழிநடை

'சர்க்கரை நோயால் சங்கடமா?' என்ற நூலில் மொழி நடை பல்வேறு வகைகளில் காணப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் மேற்கொண்டுள்ள மொழி நடை சில இடங்களில் பொதுவானதாகவும், சில இடங்களில் இலக்கிய நயம் மிகுந்த கவிதை போலவும் அமைந்துள்ளது. இவ்வகை நடை நூலைப் படிக்கத் தூண்டுவதாய் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா) இருதயத்திலிருந்து நம்முடைய பல்வேறு உடல் உறுப்புகளுக்கு வினியோகிக்கின்ற இரத்தக் குழாய்களைத்தான் 'தமனி' (Artery) என்போம். இந்தத் தமனிகளின் உள் சுற்றளவு சுருங்கி குறைந்து போவதையே 'தமனிநாளச்சுருக்கம்' என்று சொல்லுவோம் (பக்.53)

உண்டு உண்டு, குண்டாக இருப்போரைக் கண்டால் இந்நீரிழிவுக்குக் கொண்டாட்டமாம். அவர்களை அணுகி அவர்களோடு சங்கமித்து விடும். (பக். 23)

இளம் பெண்களைக் கண்டால் கிழங்களுக்கும் காதலும் ஆசையும் உண்டாகும் என்பார்கள். ஆனால் நம் கதாநாயகன் நீரிழிவிற்கு இளைஞர்களைக் கண்டால் தான் ஆசை பொங்கும் போலும் அதனால் தானே என்னவோ அவர்களைத் தான் அதிகமாகத் தாக்குகிறது இந்நோய். (பக்.24)

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் ஆசிரியர் கையாளும் வேறுபட்ட மொழி நடைகளுக்குச் சான்றுகளாகும். முதலில் இடம் பெறும் கருத்து பொதுவான நடையாக அமைகிறது. பின்னர் வருபவை ஓசைநயம் மிக்கனவாகவும், உவமை நயம் மிக்கதாகவும், நகைச்சுவை நிரம்பியனவாகவும் அமையக் காணலாம்.

வாக்கிய அமைப்பிலும் மாற்றங்கள் உள்ளன. தனி வாக்கிய அமைப்பும் கூட்டு வாக்கிய அமைப்பும் மாறி மாறி வருகின்றன. ஆசிரியர் தனி வாக்கிய அமைப்பையே விரும்பிப் பயன்படுத்தியிருப்பினும் தவிர்க்க முடியாமல் கூட்டு வாக்கிய அமைப்பையும் பயன்படுத்தியுள்ள நிலையைக் காணமுடிகின்றது.

(எ.கா) பரம்பரையாக அல்லது வம்சா வழியாக இந்நோய் வரலாம். பெற்றோர்க்கு நோயிருப்பின் குழந்தைகளுக்கு வரலாம். (பக். 22)

நாவைக் கட்டுப்படுத்தாது தேவைக்கதிகமாக உண்ணுகின்ற, உடற்பயிற்சியே இல்லாதிருக்கின்ற நடுத்தர வயதினரோடும், வயது முதிர்ந்தோரோடும் இந்நீரிழிவு இணைந்து தன் பயணத்தைத்

தொடருமாம் ! (பக். 24)

என வருவனவற்றைக் கூட்டு வாக்கிய அமைப்புக்குச் சான்றுகளாகக் கூறலாம்.

நூலாசிரியர் வழக்கிலுள்ள சொற்களையே பெரும்பாலும் பயன் படுத்தியுள்ளார். இருப்பினும் தேவை கருதிச் சில கடினமான சொற்களையும் கையாண்டுள்ளார். இவை வேற்றுமொழிச் சொற்களாகவும் உள்ளன.

(எ.கா) நீரழிவின் நிர்ணயம் (பக். 81)

உடல் உறுப்புகளுக்கு வினியோகிக்கின்ற
இரத்த குழாய்களைத் தமனி என்போம் (பக். 53).

இவண் நிர்ணயம், வினியோகம் என்ற பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தல் சுட்டத்தக்கது.

3.1.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலில் மொழிநடை சீராக அமைய வில்லை. கருத்துக்களின் தன்மைக்கேற்பத் தனித்தனியே பிரித்து விளக்கிக் கூறும் முறையை ஆசிரியர் கடைப்பிடித்துள்ளார். இருப்பினும் கூட்டு மற்றும் கலப்பு வாக்கிய அமைப்புகள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இதனால் சீரான போக்கு எல்லா இடங்களிலும் அமையவில்லை.

(எ.கா) இந்த இரத்த நாளங்களின் உள்ளே உள்ள இரத்தம்
உறைந்து கட்டி போல ஆகிவிடுவதால், இரத்த
ஓட்டத்திற்குத் தடை ஏற்படுத்தி விடுவதால்
இதயத்தின் தசைகளுக்கு இரத்த பட்டுவாடா
ஏற்படாமல் போய்விடுகிறது. (பக். 75)

இதயத் தசையின் இடது இரத்த நாளத்தின்
கிளைகள், இதயத் தசையின் வலது இரத்த
நாளத்தின் கிளைகள் பல இடங்களில்
ஒன்றினையொன்று சந்தித்து, இணைந்து
பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. (பக். 72)

இந்நூலில் சாதாரண சொற்களையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். தொடக்கம் முதல் இறுதி வரையிலும் இந்நிலை சீராக அமைந்துள்ளது.

(எ.கா) இதயம் என்பது ஒரு கெட்டியான தசைத்திரள்.
இதயத்தை ஒரு விசைக்குழாய் என்பர். இதயம்
இரத்தத்தை ஒரு விசைக்குழாய் போன்று
உந்தித்தள்ளுவதற்குப் பயன்படுகின்ற இதயத்தின்
தசைகளுக்கு தேவையான சக்தியும், ஊட்டசத்தும்,
தொடர்ச்சியாகத் தடைபடாது இடைவிடாது
கிடைக்க வேண்டியது மிகமிக இன்றியமையாத
ஒன்றாகும். (பக். 71)

கலைச்சொல் அல்லாத நிலையில் பயன்படுத்தப்படும் சொற்கள் பயன் பாட்டில் காணப்பெறும் பொதுவான சொற்களாகும். இதனால், வாக்கிய அமைப்புகள் சற்றுக் கடினமாகத் தென்பட்டாலும் எளிமையான சொல் பயன் பாடு படிப்பவருக்குச் சாதகமாகும்.

3.1.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்னும் நூலில் காணப்படும் மொழி நடை நேரடி மொழிபெயர்ப்பாகவே காணப்படுகிறது. பிறிதொரு மொழி யிலுள்ள கருத்துக்களின் கருத்தமைப்புக்கேற்றவாறு மொழிநடை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்ற மொழிஅமைப்பு உரைக் கட்டில் முழுமையாகக் காணப்படினும் ஆசிரியரின் தனி நடையும் பல இடங்களில் காணப்படுகிறது.

(எ.கா) வியாதி மிகவும் முற்றியபோது குருத்து எலும்பு வெளிப்புற அழற்சி தோன்றுகிறது. நோயாளியின் பொது உடல் நலத்தையும் நுரையீரல்களில் ஏற்பட்ட நைவுகளையும் பொறுத்தே நோயின் போக்கு அமைகிறது. ஆனால் பொதுவாக நோயின் போக்கு நாள்பட்டதே. எபிதீலிய அழிவின்போது புண்பட்ட வகை ஏற்பட்டு மணல் வடிவத்தில் உண்டாகிறது. (பக். 72)

மனிதனின் எதிர்ப்புச்சக்தி என்பது ஒவ்வொருவருடைய தனிப்பண்பு. ஆரோக்கியமான மனிதனுக்குச் சக்தி அதிகம். குழந்தைக்கு எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவு. (பக். 18)

ஆசிரியர் வழக்குச் சொற்களைப் பல இடங்களில் கையாளவில்லை. இது சாதாரண மக்களுக்குப் புரிந்து கொள்ளக் கடினமாகவே இருக்கும். மேலும் அமைப்பு எளிமையாக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் சொற்கள் எளிமையாக அமையவில்லை.

(எ.கா) மனிதன் தனக்கு நோய் கண்டவுடன் மருத்துவரை அணுகுகிறான். (பக். 18)

அன்னக்குழல் வழியாகக் கிருமி உடலினுள் நுழைவதும் சாத்யமே. (பக். 18)

மேற்கூறிய எடுத்துக்காட்டில் மருத்துவர், அணுகு, அன்னக்குழல், சாத்யம் முதலிய சொற்கள் வழக்கில் இல்லாத சொற்களாகும். இவ்வகைச் சொற்களின் பயன்பாடு இந்நூலின் மொழி நடையைக் கடினப்படுத்துவதாக அமைகின்றது.

கூட்டு வாக்கிய அமைப்பு இந்நூலில் காணப்படுகின்றது. இதனால் இந்த நூலின் மொழிநடை எளிமையாக அமையவில்லை. இதற்குக் கீழ்வரும் வாக்கியம் நல்ல சான்றாகும்.

(எ.கா) நோய்க்கிருமிகள் உடலில் நுழைந்து துரிதமாகப் பெருகி நோய் உண்டாக்குவதைத் தடுக்கும் மனிதனின் சக்தியை நாம் எதிர்ப்புச் சக்தி என்கிறோம். (பக். 18)

3.1.4. நம்பியின் 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் மொழி நடை மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளது. அறிவியல் கருத்துக்களை வெளிப்படுத்தக் கையாளப்படும் கடுமையான அறிவியல் மொழிநடை இங்குக் காணப்படவில்லை. கருத்துக்களை எளிமையாகச் சொல்லும் ஒரு நடை இந்நூலில் அமைந்துள்ளது. வாக்கிய அமைப்புகள் தனி வாக்கிய அமைப்பைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. படிப்பவருக்கு எந்த இடத்திலும் தடங்கல் ஏற்படாதவாறு மொழி நடை அமைக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா) நமது உணவில் மூன்று வகையான சத்துக்கள் அடங்கியுள்ளன. அவை மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து என்பனவாகும். இவற்றில் மாவுச்சத்தை ஜீரணிப்பதற்கு இன்சுலின் தேவைப்படுகிறது. உடல் உறுப்பான கணையத்திலிருந்து இன்சுலின் சுரக்கிறது. (பக். 23)

வழக்கத்திலுள்ள சொற்களையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். புதிய சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டிய தேவைவரினும் அவற்றை வலிந்து மேற் கொள்ளாமையை அறியமுடிகிறது. இதனால் உரைக்கட்டை விரிவுபடுத்தாமல் எளிய சொற்களுக்கேற்ப அமைத்துக் கொண்டதை இந்நூலின் குறிப்பிடத் தக்க கூறாகக் கொள்ளலாம். எனினும் பிற மொழிச்சொற்களின் பயன்பாடு முற்றிலுமாகக் களையப் பெற்ற நிலையை இங்குக் காண இயலவில்லை.

3.1.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற நூலின் மொழிநடை மிகவும் தெளிவாகவும் எளிமையாகவும் உள்ளது. தனி வாக்கிய அமைப்பையே பெரும் பாலும் எல்லா இடங்களிலும் கையாண்டுள்ளார். ஆசிரியர் வாசகர்களும் தம்மோடு கூட இருப்பதாகக் கருதி முன்நிறுத்தி அமைக்கப்பெற்ற உரைக்கட்டாக இது காணப்படுகிறது.

(எ.கா) நம்மில் பலர் நினைப்பதுபோல் எலும்பானது ஒரு உயிரற்ற திடப்பொருளன்று. அது உயிர் அணுக்கூட்டங்களால் ஆன உயிர் உள்ள பொருள் திசு ஆகும். எலும்பு ஒன்றின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை ஆற்றல் மிக்க மின்னணு உருப்பெருக்கி (electromicroscope) மூலம் பார்ப்போமானால் இவ்வுண்மை தெரியும். (பக். 9)

வழக்கத்திலுள்ள சொற்களையே எல்லா இடங்களிலும்

கையாண்டுள்ளார். இதனால் இவரது மொழிநடை மேலும் எளிமையாக்கப் பட்டுள்ளது.

(எ.கா) எலும்புகளை நோய்க்கிருமிகள் எப்படி தாக்கி அழிக்கின்றனவோ அதுபோலவே மூட்டுகளையும் தாக்கி அழிக்கின்றன. சீழ்க் கிருமிகள், எலும்புருக்கி நோய்க்கிருமிகள் போன்றவை மூட்டுகளையும் தாக்கி எலும்பு நுனியிலுள்ள குருத்தெலும்பு, பந்தகக்கட்டுகள் போன்றவற்றை அழிக்கின்றன. இதனால் மூட்டு விலகுகின்றது. தோலில் சீழ்த்துளைகளும் (Sinus) ஏற்படுகின்றன. இதனால் நோயாளிக்குப் பொறுக்க முடியாத வலி, காய்ச்சல், மூட்டு வீக்கம் ஆகியவை ஏற்படுகின்றன. (பக். .61)

3.1.6. 'சேய் நலம்' என்ற நூலில் காணப்படும் மொழிநடை தெளிவாக அமையவில்லை. இதற்கு முக்கிய காரணம் சுருங்கக்கூறி விளங்க வைக்கும் முறையைக் கடைப்பிடிக்கவில்லை. இதனால் தேவையின்றிப் பெரிய கூட்டு வாக்கியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா) இருபது ஆண்டுகட்கு முன் மாட்டுப்பாலைத் தாய்ப்பாலுக்கு நிகரான விகிதத்திற்கு மாற்ற எண்ணிச் சிக்கலான கணக்குகள் வகுத்து வந்தார்கள். (பக்.16)

இந்நூலின் மொழி நடை மேலும் தெளிவு பெறாமைக்கு மற்றொரு காரணம் வழக்கத்திலுள்ள சொற்களைப் பல இடங்களில் கையாளவில்லை என்பதுமாகும்.

(எ.கா) பிற்காலத்தில் உணவு சமச்சீராகவோ (Balanced) மிகையாகவோ அமைந்த போதிலும், யாக்கை இயல்புக்கேற்ப (constitution of the body) முழு வளர்ச்சியையும் (potential growth) பெற முடியவில்லை. அறிவாற்றலுக்கும் (intelligance) குந்தகம் விளையும் (பக். 5).

மேற்கூறிய எடுத்துக்காட்டில் பயன்படுத்தப்படும் 'சமச்சீர்', 'யாக்கை', 'மிகை' முதலிய சொற்களைச் சாதாரண மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் நோக்கத்திற்காகத் தவிர்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

3.1.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் மொழி நடை ஒருங்கமைந்து சீராகக் காணப்படுகிறது. தனி வாக்கிய அமைப்பையே ஆசிரியர் கடைப்பிடித்துள்ளார். தொடக்கம் முதல் இறுதி வரையிலும் மொழி நடையில் எந்தவித ஏற்றத்தாழ்வும் காணப்படவில்லை. இதனால் படிப்பவருக்கு எந்தத் தடங்கலுமின்றி மிகவும் தெள்ளத் தெளிவு ஏற்படுத்துவதாக உரைக்கட்டு அமைந்துள்ளது.

(எ.கா) குழந்தை சுகமாக இருந்தால் குளிக்க வைக்கலாம். உண்மையில் சில குழந்தைகள் குளிப்பாட்டுவதை மிகவும் விரும்புவார்கள். கால்களில் குழந்தையைப் படுக்க விட்டுக்கொண்டு குளிப்பாட்டுவது நல்ல பழக்கம் ஆகும் சிலருக்கு தவறவிட்டுவிடுவோம் என்ற பயம் இருக்கிறது இவர்கள் 'பிள்ளைப் பலகை'யில் போட்டு குளிப்பாட்டலாம். தலைப்புறம் உயர்வாகவும் எதிர்புறம் தாழ்வாக நீர் வடிய ஏதுவாகவும் இருக்கும் வண்ண வண்ண பிளாஸ்டிக் தொட்டிகளும் கடையில் கிடைக்கின்றன. (பக். 49)

3.1.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் மொழி நடை சீராக அமையப்பெறவில்லை. 'தனி வாக்கிய அமைப்பு' மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. பெரும்பாலும் கலப்பு வாக்கிய அமைப்பையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். இதனால் கடின நடையும் எளிய நடையும் கொண்ட அமைப்பு அவரது உரைக்கட்டில் காணப்படுகிறது.

(எ கா.) ஒரு கன அளவு மி.மீ.காற்றில் சுமார் 0.5 முதல் 5 விட்டமுள்ள 1000 நிலக்கரித் துகள்கள் கலந்துள்ள சூழ்நிலையில் ஒரு சுரங்கத் தொழிலாளியினால் சுமார் 150 கிராம் நிலக்கரித்துகள்கள் ஒரு வருடத்தில் சுவாசிக்கப்படுவதாகவும் அவற்றில் 1.5 முதல்15 கிராம் அளவு நிலக்கரித்துகள் நுரையீரல் காற்றறைகளை வந்தடைவதாகவும், இவற்றில் 0.5 கிராம் அளவு நிலக்கரித்துகள்கள் அவனது நுரையீரல் காற்றறைகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவதாகவும் அறிவியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். (பக். 40)

நேரடி மொழி பெயர்ப்பின் தாக்கத்தினால் மொழி நடையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

(எ கா.) காளான் கலந்த வைக்கோலினால் மாசுபடுத்தப்பட்ட காற்றினைச் சுவாசிப்பதன் மூலம் விளையும் இந்நோய் கண்டவர்கள் இந்நோய் வாய்ப்பு சூழ்நிலையிலிருந்து விடுபட்ட ஒரு வாரத்திற்குப் பிறகும், நோயாளியின் நுரையீரல் காற்றறைகளில் ஒவ்வாமையைத் தூண்டுவிக்கக் கூடிய சுமார் 7 இலட்சம் தெர்மொ. பாலிஸ்போரா, பாலிஸ்போரா காளான்களின் சிதல் விதைகள் காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. (பக். 123)

ஆசிரியர் மொழியில் புலமை மிக்கவர் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கடினச்சொற்கள் மற்றும் கடினச்சொற்றொடர் அமைந்திருக்கின்ற

தன்மையும் அறிந்துகொள்ள முடிகிறது.

(எ.கா.) பெரிலியத் துகள்களால் மாசுபடுத்தப்பட்ட
காற்றினைச் சுவாசித்த சில வாரங்களிலேயே இது
நுரையீரல் அழற்சியாகப் பரிணமிக்கிறது (பக். 84)

மூச்சு உள்ளிழுக்கும்போது மார்பு கூட்டு
உள்எதிர்மறை அழுத்தம் அதிகமாகின்றது. (பக். 37)

3.1.9. 'நீரிழிவு' என்ற நூலில் ஆசிரியரின் மொழி நடை ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தனி வாக்கிய அமைப்பையே மையமாகக் கொண்டிருந்தாலும் தவிர்க்க முடியாத இடங்களில் கூட்டு வாக்கிய அமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவருடைய நடை வாசகர்களுடன் நேரடியாகப் பேசுவது போன்ற ஒரு பாணியைக் கொண்டதாகக் காணப் படுகிறது. சுருங்கக் கூறி விளங்க வைக்கும் தன்மையும் இவரது நடையின் சிறப்பு .

(எ.கா.) பசி எடுக்கும்போது நாம் உணவு உட்கொள்கிறோம்
உடனே பசி தீர்ந்து விடுகிறது. தீர்ந்த பசி சில மணி
நேரத்தில் மீண்டும் தோன்றுகிறது அப்போது நாம்
மீண்டும் உணவருந்த வேண்டியதிருக்கிறது
இல்லையா? (பக். 28)

ஒரு மனிதனுக்கு அவன் உயிருள்ள வரையில்
பசிப்பிணி எப்படி இருந்து கொண்டிருக்குமோ,
அப்படியே நீரிழிவு நோயும் தன் ஆயுள் உள்ள வரையில்
இருந்து கொண்டு தான் இருக்கும் என்ற முடிவுக்கு
நோயாளி வந்துவிடவேண்டும் (பக். 28)

வழக்கில் உள்ள சொற்கள் மட்டுமே கையாளப்பட்டுள்ளன. கடினச் சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இலக்கிய நயம் அல்லது ஆசிரியரின் மொழித் தேர்ச்சி போன்றவற்றை வலிந்து காட்டும் தன்மை இம்மொழிநடையில் காணப் படவில்லை. மேலும் ஆசிரியர் தாம் அறிந்த கருத்துக்களை அவரது சாதாரண பேச்சு நடையில் அப்படியே கூறுவது இந்த நடையின் சிறப்பு .

(எ.கா.) உடம்பில் எந்த இடத்தில் புண் வந்தாலும் அது
சாமான்யமாக ஆறாது. (பக் 54)

அடிக்கடி பசி எடுக்கும் பசி தாங்கமுடியாத அளவுக்கு
இருக்கும். (பக். 5)

3.1.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலின் மொழி நடை சீராகக் காணப்படுகிறது. முக்கியமாகத் தனி வாக்கிய அமைப்பையே கடைப் பிடித்துள்ளார். இவரது நடை மிகவும் தெளிவாக உள்ளது. சுருங்கக் கூறி விளங்க வைக்கும் தன்மை சிறப்பாக அமைந்துள்ளது.

(எ.கா) புற்றுநோய் தொடங்கி சில மாதங்கள் கடந்ததும் பசி மிகக் குறைந்து போகின்றது. நோயாளியின் உடல் வரவர இளைத்துக்கொண்டே போகின்றது. உடலின் எடை வரவரக் குறைகின்றது. மார்பு வலியும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அடிக்கடி நீர்க்கோவை உண்டாகிறது. இருமலும் அதிகமாகிறது. இருமும் போது இரத்தம் கட்டிகட்டியாக விழத் தொடங்குகின்றது. மூச்சு விடுவதற்கே திணறல் ஏற்படுகின்றது. (பக். 61)

ஆசிரியர் பொதுவாகத் தனி வாக்கிய அமைப்பையே கையாண்டிருப்பினும் சில இடங்களில் கூட்டு வாக்கிய அமைப்பும் காணக் கிடக்கின்றது. இது போன்ற வாக்கிய அமைப்பு ஓரிடத்தில் மட்டுமே காணப்படுகின்றது.

(எ.கா.) அதிகமாகப் புகைக்கும் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே ஹார்மோன் விருத்தி தடைப்பட்டு, படிப்படியாக மலட்டுத்தன்மை அடைவதுடன், நரம்புக்கோளாறுகளும் வந்தடைந்து, அதனால் பற்பல நோய்களுக்கும் இலக்காகி இறுதியில் தங்கள் விலைமதிப்பற்ற, மகத்தான தாய்மை பேற்றையே அவர்கள் இழந்துவிடுகின்றனர். (பக். 468)

கடினமான சொற்கள் பயன்படுத்தப்படவில்லை. நூலின் முழு உரைக் கட்டிலும் நடைமுறையில் பயன்பாட்டிலுள்ள சொற்களே காணப்படுகின்றன.

3.2. பத்தி அமைப்பு

'சர்க்கரை நோயால் சங்கடமா' என்ற நூலில் பத்தி அமைப்பு மிகவும் எளிய முறையில் அமைந்துள்ளது. மருத்துவக் கருத்துக்களின் கோவையாகப் பத்தி அமையவில்லை. பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட கருத்துக்களாகப் பெரும்பான்மையான கருத்துக்கள் காணப்படுகின்றன.

(எ.கா) இந்நோயால் கால்களில், கால் தசைகளைத் தொட்டாலேயே வலி, கால்களின் பலவீனம், கால் தசைகள் மெலிந்து போதல், மாறுபட்ட உணர்ச்சிகள் இவையெல்லாம் இருக்கும்.

வயதான பாட்டி அவர்... ஏழ்மையின் ஏகாதிபத்தியத்தில் உழல்பவர்... ஒரு நாள் என்னிடம் அவரை அழைத்து வந்தார்.

கை கால்கள் எல்லாம் குடையுது. உடம்பில் எல்லாம் எரிச்சல் எடுக்கிறது டாக்டர் எனப் புலம்பினார் அப்பாட்டி.

அப்பாட்டியைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவர்

நீரிழிவால் சேரழிகிறார் என்பது எனக்குப் புரிந்தது
(பக். 52)

பத்திகள் பெரும்பாலும் பல பத்திகளால் ஆன கருத்துநிலைப் பத்திகளாகவே காணப்படுகின்றன.

(எ.கா) கர்ப்ப கால நீரிழிவு நோயாளிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு சிலர், இளமை தொட்டே இளமை கால நீரிழிவாளராக இருந்து, திருமணம் செய்து கொண்டு கர்ப்பமுறுவர்.

கர்ப்பமான பின்னரே நீரிழிவு தலைதூக்கும்... இவர்கள் மற்றொரு வகையினர். இவர்களுக்குக் குழந்தை பிறந்தவுடன் நீரிழிவு மறைந்துவிடும். (பக். 56)

பழமொழியோடு தொடர்புபடுத்திப் பத்திகளை உருவாக்கியுள்ள தன்மையும் இந்நூலில் உள்ளது.

(எ.கா.) ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் அது போல ஒரு தாய் கர்ப்பமுற்றால் இந்நீரிழிவுக்குக் கொண்டாட்டம் தான். தன்னால் இயன்ற கைங்கர்யத்தைச் செய்துவிட்டுஅடுத்த கர்ப்பத்திற்குச் சந்திக்கிறேன் எனச்சொல்லி மறைந்துவிடும். (பக். 56)

3.2.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலின் முழு உரைக்கட்டையும் கண்ணோக்கும்போது சில இடங்களில் பத்தி அமைப்பு தொடர்ச்சியாக அமையவில்லை. கருத்துக்கள் பல இடங்களில் துணுக்குகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இதனால் முக்கியக் கருத்துக்கள் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டன வாய்க் காணப்படுகின்றன.

கருத்துக்களை மட்டும் கூறுவது ஆசிரியரின் நோக்கமாக உள்ளது. இதனால் மருத்துவக் கருத்துக்களுக்கு மட்டும் ஆசிரியர் அதிக முக்கியத் துவம் கொடுத்துள்ளார். இதனால் நடைமுறைச் செயல்பாடுகளோடு தொடர்பு படுத்திக் கூறும் முறை இங்குக் கையாளப்படவில்லை.

(எ.கா.) மிதமான இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் பெரும்பாலும் இந்த நோய் ஏற்பட்டுச் சில ஆண்டுகள் வரை அந்த நோயின் தீயவிளைவுகளுக்கு ஆளாவதில்லை. இதயம் சுருங்கும் நிலை, டையஸ்டாலிக் பிளட்பிரஷர் 88 முதல் 92 வரை இருக்கும் நோயாளிகளில் 36% பேர் இரத்தக்கொதிப்பு ஆரம்பித்து 20 ஆண்டுகளில் இறப்புக்கு ஆளாகின்றனர். (பக். 48)

இரண்டு வகைப் பத்தி அமைப்புகளைக் கையாண்டுள்ளார். பல

பத்திகள் கொண்ட கருத்துநிலைப் பத்திகளும் இவ் உரைக்கட்டில் காணப் படுகின்றன. முக்கியமான சில கருத்துக்களை விளக்கும்போது ஒரு பத்தியாலான கருத்துநிலைப் பத்தியைக் கையாண்டுள்ளார். இவ்வித மாற்றங்களினால் படிப்பவருக்கு எளிமையாகத் தோன்றினாலும் பெரிய பத்திகளைப் படிப்பதற்குச் சிறிது கடினம் இருப்பதைக் காணலாம். ஆசிரியர் முதன்மைக் கருத்துக்களைப் பத்தியின் தொடக்கத்தில் கூறும் முறையைக் கடைப்பிடித்துள்ளார்.

(எ கா) மனிதன் உயிர் வாழ மிக இன்றியமையாத உறுப்பாக
விளங்குவது இதயம் ஆகும் இந்த இதயம்
தசைகளால் ஆனது. இந்த இதயத் தசைகளில்
அவற்றுக்குச் சக்தி ஊட்டச் சத்துக்கள் வழங்குகின்ற
பிரத்தியேக இரத்த நாளங்களில், சில காரணங்களால்,
சில நேரங்களில் இரத்தம் உறைந்துவிடுகிறது
இந்த இரத்த நாளங்களின் உள்ளே உள்ள
இரத்தம் உறைந்து கட்டி போல ஆகிவிடுவதால்,
இரத்த ஓட்டத்திற்குத் தடை ஏற்படுத்தி விடுவதால்
இதயத்தின் தசைகளுக்கு இரத்தப்பட்டுவாடா
ஏற்படாமல் போய்விடுகின்றது (பக். 75)

3.2.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் பத்தி அமைப்பு எளிமையாக அமையவில்லை. முக்கியமாக, ஒரு தோற்றநிலைப் பத்தி கொண்ட கருத்துநிலைப் பத்தியே பெரும்பாலும் காணப்படுகிறது. இதனால் கருத்துக்கள் வகைவகையாகப் பிரிக்கப்படாவண்ணம் பல இடங்களில் குவிந்து கிடப்பன போன்று காணப்படுகின்றன. ஆசிரியர் தமக்குத் தெரிந்த அனைத்துக் கருத்துக்களையும் ஒருங்கே வெளிப்படுத்த் வேண்டுமென்ற இயல்போடு அமைத்துள்ளமை தெரிகிறது.

(எ.கா) நோய் அதிகரிக்க அதிகரிக்கக் காயச்சலும் நீடிக்கிறது
24 மணி நேரமும் காய்ச்சல் இருக்கிறது அப்போது
காலை உடல் உஷ்ணத்திற்கும் மாலை உடல்
உஷ்ணத்திற்கும் சிறிது வேறுபாடு இருக்கும்.
இடைவிடாது அதிக அளவில் காய்ச்சல்
இருந்தால் நோய் மிகவும் தீவிரமாகப் பரவி வருகிறது
என்று பொருள். சில சமயங்களில் காய்ச்சல் விட்டு
விட்டு வரலாம். இரண்டு நாட்கள் காய்ச்சல் இல்லாத
நிலை. இவ்விதம் காய்ச்சல் பல ரூபங்களில்
தோன்றும் இந்நிலை பல மாதங்களுக்கு நீடிக்கலாம்.
க்ஷய நோயின் ரணக்குழி உண்டான நிலையில் மிகவும்
அதிக அளவு தீவிரமான காய்ச்சல் நேரலாம்.
நார்ப்பொருள். நுரையீரல் விஷயத்தில் உடல்

உஷ்ணம் சாதாரண நிலையில் இருக்கலாம் ட்யூபர்க் லோமாவிலும் இதுபோன்றே. (பக். 31)

3.2.4. 'நோயற்ற வாழ்வு' என்ற நூலில் பத்திகளை ஆசிரியர் சுருக்கமாக அமைத்துள்ளார். பல தோற்றநிலைப் பத்திகளாலான கருத்து நிலைப்பத்திகள் இவரது உரைக்கட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன.

(எ.கா.) இந்நோயானது பெரும்பாலும் நாற்பது வயது மேற்பட்டவர்களுக்கு வருகிறது. இவர்கள் உடல் பருமனாக இருக்கக்கூடும்.

அளவுக்கு மீறிய சிறுநீர், அதிக தாகம், எடை குறைந்து போதல், மிகுந்த களைப்பு, உடல் அரிப்பு இவை நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகளாகும்.

சில சமயங்களில் வேறுவி ்மாக இந்நோய் காணப்படுவதுண்டு. அவை கண் பார்வை மங்குதல், அடிக்கடித் தோல் வியாதிகள் வருதல், தலைவலி மயக்கம் முதலியனவாகும்.

சிலருக்கு எந்தவொரு மாற்றமும் இல்லாமல் வருடக்கணக்கில் இந்நோய் உடன் இருப்பதும் உண்டு. (பக். 24)

கருத்தமைப்பு சீராகக் காணப்படுகின்றது. சில இடங்களில் முக்கியக் கருத்துக்களை ஒப்புமைப்படுத்தி அந்தக் கருத்துக்களின் கூட்டாகப் பத்தி அமைந்திருப்பதும் குறிப்படத்தக்கதாகும்.

(எ.கா.) நீரிழிவு நோய்க்கு இரத்தக்கொதிப்பு ஒருவகை உறவுமுறை என நாம் கருதலாம். இந்த இரண்டும் நம்முடைய குழந்தைகள் போல. அவை நம்முடன் வளரும். கட்டுப்பாட்டுடன் வளராத குழந்தைகள் எவ்வாறு நம் பேச்சை கேட்பதில்லையோ, அது போலவே கவனியாமல் விடப்பட்ட நீரிழிவு நோயும், இரத்தக் கொதிப்பும் முற்றி மருத்துவரின் சிகிச்சைக்கு எளிதாக அடங்குவதில்லை. (பக். 25)

3.2.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற நூலில் பெரிய பத்திகள் பயன்படுத்தப் படவில்லை. பல தோற்றநிலைப் பத்திகள் கொண்ட கருத்து நிலைப்பத்தியே இதன் உரைக்கட்டில் காணப்படுகின்றது. பல கருத்துக்கள் ஒன்றோடொன்று திணிக்கப்படவில்லை. ஆசிரியர் ஒரு கருத்தை ஒரு பத்தியில் தெளிவாக அமைக்கும் முறையைக் கையாண்டுள்ளார். இதனால் இவரது உரைக்கட்டு மிகவும் தெளிவுறக் காணப்படுகிறது எனலாம்.

(எ.கா.) கீறல் முறிவுகளை மாவுக்கட்டினால் குணப்படுத்தலாம். விலகிய முறிவு எனில்

> நோயாளிக்கு மயக்கம் உண்டுபண்ணி, வலி
> தெரியாமல் விலகிய எலும்புகளைப் பொருத்தி
> மாவுக்கட்டு போடலாம்.

திறப்பு எலும்பு முறிவுகளையும், சிக்கலான எலும்பு முறிவுகளையும் அறுவை மருத்துவத்தின் மூலமே குணப்படுத்த வேண்டும். (பக். 38)

பல இடங்களில் ஒரு கருத்தைக் கூறிய பின் எடுத்துக்காட்டு மூலம் அதனை மேலும் விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்குறிப்பிட்ட அமைப்பில் பல பத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன.

> (எ.கா.) எலும்புக்கூடு (Skeleton) நம்முடைய முக்கியமான
> சில உறுப்புகளைப் பாதுகாக்கிறது.
> எடுத்துக்காட்டாக மண்டையோடு மூளையையும்
> மார்புக்கூடு இதயத்தையும், நுரையீரல்களையும்,
> இடுப்பெலும்பு அடிவயிறு உறுப்புகளையும்
> பாதுகாத்து வருவதைக் கூறலாம் (பக். 11)

3.2.6. 'சேய் நலம்' என்ற நூலில் பத்தி அமைப்பு முறை எளிமையாக அமையவில்லை. ஒரு தோற்ற நிலையாலான கருத்துநிலைப் பத்தியே இவரது உரைக்கட்டில் காணப்படுகின்றது. பத்திகள் பெரும்பாலும் நீளமானவையே. முதன்மைக் கருத்து பத்தியின் தொடக்கத்திலும் சார்புக் கருத்துக்கள் அதனைத் தொடர்ந்தும் வருமாறு அமைக்கப்பெற்றுள்ளன. கருத்தமைப்பு சீராகக் காணப்படுகிறது.

> (எ கா) குழந்தைக்குப் பல் முளைத்தல், கலப்புணவு ஆகாரம்
> அருந்தத் தகுதி என்பதற்கு அறிகுறி. ஆகையால்
> ஆறு மாதத்திலிருந்து பாலை மறக்கடிக்க முயல
> வேண்டும். திடீரென்று பாலை நிறுத்திவிட முடியாது.
> அப்படிச்செய்தால் குழந்தைக்கு சீரணக் கோளாறுகள்
> ஏற்படும். சிறுக சிறுக ஒவ்வொரு தவணையாகத்
> தவிர்த்து அதற்குப் பதில் கலப்புணவு Mixed Diet
> கஞ்சி, கூழ் வகைகள் பெரியவர்கள் சாப்பிடும்
> உணவு, காய் பழ வகைகளை கொடுக்க வேண்டும்.
> கலப்புணவு விவரம் பிறிதொரு கட்டுரையில்
> வெளிவரும். குழந்தை 1 வயது நிரம்புங்கால்
> மற்றப்பாலர்களைப் போல முற்றிலும் கலப்புணவு
> அருந்தும் நிலைக்கு மாற்ற வேண்டும் (பக். 4)

3.2.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் உரைக்கட்டு வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் காணப்படுகிறது. சில வினாக்களுக்கு வரும் விடைகளில் மட்டும் பத்தி அமைப்பு காணப்படுகிறது. வினா – விடை அமைப்பில் காணப்படும் கருத்துக்கள் சில இடங்களில்

கேள்விக்குத் தொடர்பில்லா. .. காணப்படுகின்றன.

(எ.கா) பானுமதி : ஊருக்குப் போவதென்றால் பஸ்ஸில் போகலாமா?

டாக்டர் . கருவுற்ற முதல் மூன்று மாதங்களிலும் கடைசி சில வாரங்களிலும் பிரயாணம் செய்வதைத் தவிர்த்துவிடு. சாதாரணமான வீட்டு வேலைகள் செய்யலாம். மாலை நேரங்களில் காலார நடந்து செல்வதும், எளிதான உடற்பயிற்சியும் உடலுக்கு நல்லது. மிகக் களைப்புறச் செய்யும் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி தேவை இல்லை. கடைசியாக ஒன்று தினமும் குளிக்கும் போது மார்பு காம்புகளை நன்கு இழுத்து விரல்களுக்கு இடையில் தேய்த்துவிட வேண்டும். இது குழந்தை நன்றாக பாலை உறிஞ்சிக் குடிப்பதற்குச் சுலபமாக இருக்கும். (பக். 18)

சில இடங்களில் பழமொழிகளைப் பயன்படுத்திக் கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா.) மனம் இருந்தால் மார்க்கமுண்டு (பக். 66)

3.2.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் பெரிய பத்திகளும், சிறிய பத்திகளும் உரைக்கட்டில் காணப்படுகின்றன. பத்தி அமைப்பில் வரும் கருத்துக்கள் சீராகக் காணப்படுகின்றன. பெரும்பாலான பத்திகள் கூட்டு வாக்கிய அமைப்பில் பெரிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்நூலின் உரைக்கட்டு தெளிவாக அமையவில்லை.

(எ.கா) பணிக்குத் தொழிலாளரைத் தேர்ந்தெடுக்குமுன் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளைத் தவிர, அவர்களை அளவான காலகட்டங்களில் சீரிய மருத்துவப் பரிசோதனை எக்ஸ்-கதிர் பரிசோதனை, நுரையீரல் திறன் சோதனைகளுக்கு உட்படுத்துதல், இந்நோய் கண்டோரை நோய்க்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பிப்பதற்கு முன்பே, நோயின் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியவும், அவர்களை நோய் வாய்ப்பு சூழ்நிலையிலிருந்து அப்புறப்படுத்தித் தேவையான சிகிச்சைகள் அளித்து அவர்களுக்குப் பூரண குணம் கொடுக்க உதவுவதன் மூலம்

தொழிலகங்கள் தேவையற்ற தொழிற்சாலை விபத்து நிவாரணப்பணிகளிலிருந்து மீளவும் வகை செய்கின்றது (பக். 46)

3.2.9. 'நீரிழிவு' என்ற நூலில் பத்திகள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. பல தோற்றநிலைப் பத்திகள் கொண்ட கருத்து நிலைப் பத்தியே இந்த நூலில் பொதுவாகக் காணப்படுகின்றது. ஒரு பத்தியைப் படிப்பதன் மூலம் ஆசிரியர் கூற நினைக்கும் கருத்தை அறிய முடிவதில்லை. ஏனெனில் பல பத்திகளில் அந்தக் கருத்து தொடர்பு கொண்டிருக்கும் படியாக அமைக்கப்பெற்றுள்ளது;

கருத்து இணைப்பு சீராகக் காணப்படுகிறது. மையக்கருத்து பல இடங்களில் இறுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ கா) இன்னொன்றும் சொல்கிறார்கள் அதாவது, பெற்ற குழந்தைகள் மெலிந்தவையாக இருப்பது அதன் தாய்க்கு நன்மை செய்கிறது அவை பிறக்கும்போதே மிகவும் பருமனாக இருந்துவிட்டால் அதன் தாயானவள் நீரிழிவுக்கு ஆளாவதற்கான வாய்ப்பு அதிகமாகிவிடுகிறது. எனவே பருமனான பல குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள்தாம் மற்ற எல்லோரைக்காட்டிலும் அதிகமான அளவில் நோய்வாய்ப்படுகிறார்கள் (பக். 36)

3.2.10. 'புகையும் புற்று நோயும்' என்ற நூலில் பல தோற்றநிலைப் பத்திகள் கொண்ட கருத்துநிலைப் பத்தியே உரைக்கட்டில் காணப்படுகின்றன. சிறிய வாக்கியங்களையும் பத்தியாகக் கையாண்டுள்ளார்., இவ்வமைப்பு படிப்பதற்குச் சுமை இல்லாத உணர்வு தருவதாகக் காணப்படுகிறது.

(எ.கா) அதன் பிடியில் சிக்கியவரை அணுஅணுவாக அரித்துக் கொல்லக்கூடிய அசுரத்தன்மை இப்புற்று நோய்க்கு உண்டு.

எத்தகைய மருத்துவம்; எத்தகைய நிலைகளில் செய்து கொண்டால் புற்று நோயின் பிடியின்றும் ஓரளவேனும் தப்பி பிழைக்கலாம் (பக். 11)

பல இடங்களில் ஒப்புமையின் அடிப்படையில் பத்திகள் பிரிக்கப்பட்டுள்ளன.

(எ.கா) ஒரு பிளாஸ்கில் சிகரெட் புகையை அடைத்தார்கள மற்றொரு பிளாஸ்கில் வெளிறிய திரவம் ஒன்றை அடைத்தார்கள் சிகரெட் புகை படிந்த பிளாஸ்கின் நிறம் கருமை படர்ந்து காணப்பட்டது. மேகத்தைப் போன்ற புகை மூட்டம் உள்ளே பரவியிருப்பதைக்

கண்டார்கள்.

இப்படி பிளாஸ்கில் படர்ந்துள்ள கரும்புகை போன்ற புகைதான்; நுரையீரலுக்குள்ளேயும் புகுந்து அங்கே புற்றுநோயை விளைவித்துப் புகையாளிகளை. வாட்டி வதைக்கின்றது என்ற உண்மையும் கண்டார்கள் (ப 47)

கருத்தமைப்பு தொடக்கம் முதல் இறுதி வரையிலும் சீராகக் காணப்படுகிறது. சில இடங்களில் நடைமுறைச் செயல்களோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் பழமொழிகளையும் பயன்படுத்தியுள்ளார்.

(எ கா.) புகைப்பதினாலே நரம்புகள் கிளர்ச்சியடைகின்றன என்பது உண்மையாகவே இருக்கலாம் ஆனால் களைத்த குதிரைக்கு ஓய்வும் உணவும அளித்து மீண்டும் வண்டியிற் பூட்டி ஓட்டிச் செலுத்துவது முறையேயன்றி, சவுக்காலடித்து ஓட்ட முயல்வது எவ்வளவு காலத்திற்குப் பயன் தருவதாயிருக்கும் விரைவில் குதிரை முற்றிலும் தளர்ந்து பின்னர் அடித் தாலும், தூக்கி நிறுத்தினாலும் எழுந்து நிற்கச் சக்தியற்றதாகி முடிவில் செத்துப்போய்விடும் அல்லவா?

வண்டிக்குதிரையின் இந்த உதாரணம் புகைத்து நரம்புகட்குத் தெம்பூட்டும் இயல்பினருக்கும் பொருத்தமானதாகும் (பக். 27)

3.3. தலைப்புப் பயன்பாடு

3.3.1. தலைப்புகள் பொது மக்களின் புரிந்து கொள்ளும் தன்மைக்கேற்ப அமைக்கப்பட்டவை ஆகும். பெரிய தலைப்புகளின் கீழ்வரும் சிறு தலைப்புகள் அவற்றின் கீழே சொல்லப்படும் சில முக்கியக் கருத்துக்களைச் சுட்டும் வகையில் பொதுவாக அமைந்து நிற்கும்.

சர்க்கரை நோயால் சங்கடமா? என்ற நூலில் தலைப்புக்கள் மேற்கூறியவாறு அமைக்கப்பட்டுள்ளன.

(எ கா.) பெருந்தலைப்பு - சிக்கலில் கொடிய நீரிழிவு

சிறு தலைப்புகள் - நீரிழிவு மயக்கம்

நீரிழிவாளர்களின் பசி

நீரிழிவு மயக்கத்தைத் தடுப்பதெப்படி?

நீரிழிவால் தமனிநாளச் சுருக்கம் (ப 44)

சில தலைப்புக்கள் ஆசிரியரின் சிந்தனைக்கு அப்பாற்பட்டுத் தெளிவில்லாமல் அமைந்துள்ளன.

(எ.கா) நீரிழிவின் சிக்கல்கள் (பக். 5)

சிக்கல்களில் கொடிய நீரிழிவு (பக். 6)

3.3.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலில் தலைப்புக்கள் எல்லா இடங்களிலும் சீராகப் பயன்படுத்தப்படவில்லை. சில பிரிவுகளில் தலைப்புக்கள் இன்றிப் பெரும் பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில பிரிவுகள் மட்டுமே சிறிய பத்திகளாகப் பிரிக்கப்பட்டுப் பெருந்தலைப்புக்களுடன் கூடிய உள் தலைப்புக்களுடன் காணப்படுகின்றன. பொதுவாகத் தலைப்புக்களுக்கு ஏற்றவாறு கருத்துக்கள் அமைக்கும் நிலையே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(எ.கா.) கல்லீரல் வேலை செய்யாமை (பக். 140)

உடலில் ஊட்டச்சத்துக் குறைவு (பக். 138)

சில இடங்களில் தலைப்புக்கள் கேள்வியாகவே அமைந்துள்ளன.

(எ.கா) உடல் பருமனைக் குறைப்பது எப்படி? (பக். 155)

உடல் பருமன் என்றால் என்ன? (பக். 156)

சில தலைப்புக்கள் இடைக்குறி பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன.

(எ.கா) வயிறு - குடற்புண் (பக். [illegible])

இரத்த நாளங்கள் இறுகுவது - சுருங்குவது (பக். 112)

3.3.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் பல தலைப்புகள் காணப்படுகின்றன. இந்தத் தலைப்புக்கள் யாவும் சாதாரண பிரிவுத் தலைப்புக் களேயாகும். வாசகர்கள் புரிந்து கொள்வதற்கென்று கருத்துக்களைப் பகுத்துக் கொடுக்கப்பட்ட தலைப்புக்களாக அமையவில்லை. இத்தகைய தலைப்புக்கள் வேகமாகப் படிப்பவருக்குப் பயனளிக்காது.

சில தலைப்புக்கள் சாதாரண வாக்கியமாகவே காணப்படுகின்றன.

(எ.கா.) அவர்கள் கண்ட முடிவுகளாவன (பக். 62)

க்ஷய நோய் பரவிய பரவும் நிலை (பக். 51)

3.3.4. 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் பல தலைப்புக்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. தலைப்புக்கள் தொடர்புள்ள மருத்துவக் கட்டுரைகளுக்கு கேற்பப் பயன்படுத்தப்படுகின்றன. தலைப்புக்கள் பிரிவுத் தலைப்புக்களல்ல. இவை ஆசிரியரால் தனியாகக் கொடுக்கப்பட்டவையாகும். இத்தலைப்புக்கள் உள்ளே உரைக்கட்டுத் தொடருவதைச் சுட்டுகின்றன. நீரிழிவு நோயைப் பற்றிக் கூறும்போது கீழ்வரும் தலைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா.) நீரிழிவு நோயின் அறிகுறிகள்

நீரிழிவு நோயின் தொடர்பு விளைவுகள்

நோய் உள்ளவர்கட்குச் சிகிச்சை

நோய் வரக்கூடியவர்களுக்கு

நோய் வராமல் தடுக்கும் வழிகள்

நீரிழிவு நோயின் தொடர்புத் தொல்லைகள் தவிர்க்கும் வழி சில ஆலோசனைகள்

3.3.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற இந்நூலின் தலைப்பிற்கிணங்கப் பல பிரிவுத் தலைப்புக்களை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். இவை நோய் தொடர்புடைய தலைப்புக்களே; ஆசிரியர் உருவாக்கிய கவர்ச்சித் தலைப் புக்களல்ல. அதுபோலவே ஒவ்வொரு பிரிவுகளில் வரும் பிற தலைப்புக்களும் காணப்படுகின்றன.

(எ.கா.) முறிந்த எலும்புகளைப் பொருத்துதல்

எலும்பு முறிவு வகைகள்

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் முறிவுகள்

வளரும் பருவத்தில் நேரும் முறிவுகள்

சாலை விபத்தால் ஏற்படும் எலும்பு முறிவுகள்

3.3.6. 'சேய்நலம்' என்ற நூலில் தலைப்பு, பெருந்தலைப்புக்கேற்பக் கருத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறு தலைப்புக்கள் கருத்துக்களுக்கேற்ப அமைக்கப்பட்டவையே ஆகும். பல இடங்களில் காணப்படும் சிறு தலைப்புக்கள் தனித்துக் கருத்துக்களையே வெளிப்படுத்துவனவாக அமையவில்லை. இது தொடர்ச்சியாக நூலினைப் படிக்காதவருக்குப் புரிந்து கொள்வதில் கடினம் ஏற்படுத்தும்.

(எ.கா.) தொடங்கும் காலம்

நீடிப்பு

கொடுக்கும் முறை

ஆதாரமற்ற நம்பிக்கைகள்

3.3.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் பெருந்தலைப்பிற்கு அடுத்தபடியாகப் பிரிவுத் தலைப்புக்கள் அமைந்துள்ளன. பிரிவுத் தலைப்புகளுக்குக் கீழ் ஒரு சில இடங்களில் மட்டும் சிறு தலைப்புகள் காணப்படுகின்றன. உரைக்கட்டு முழுவதற்கும் தேவைக்குத் தகுந்தாற்போலச் சிறு தலைப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின் மேலும் சிறப்பாக அமையும்.

3.3.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்னும் நூலில் அமையப்பெற்ற தலைப்புக்கள் கவர்ச்சித் தலைப்புக்களாக அமையவில்லை. நூலில் காணப்பெறும் கருத்துக்களுக்கேற்ப அமைக்கப்பெற்ற தலைப்பு களேயாகும். எனவே இந்தத் தலைப்புக்கள் நூலின் உள்ளே அமைந்துள்ளன. இவை கருத்துக்களை வெளிக்காட்டும் வகையில் காணப்படுகின்றன.

எனினும் சில தலைப்புக்கள் தெளிவற்ற நிலையில் உள்ளன.

(எ கா) நோயினால் விளையும் மாற்றங்கள்
நோய்க்கான அறிகுறிகள்
எக்ஸ் கதிர் படப்பிடிப்பு மாற்றங்கள் *
நோயை அணுகும் முறை

3.3.9. 'நீரிழிவு' என்ற நூலில் கருத்துக்களைப் பல தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கியுள்ளார். இதுபோன்ற தலைப்புக்களைத் தெரிவு செய்து பயன் படுத்துவது படிப்பவருக்கு வசதியாக அமையும். ஒருவர் நூலை முழுவதையும் படித்தறிய வேண்டியதில்லை. தேவையான பகுதிகளை எளிதில் கண்டறியலாம்.

(எ கா) நீரிழிவு நோய் யார் யாருக்கு வருகிறது?
நீரிழிவு நோயின் அடையாளங்கள்

சில தலைப்புக்கள் நூலை மேலோட்டமாகப் பார்ப்பவர்களை உள்ளே என்ன இருக்கிறது என்பதை அறியத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன.

(எ.கா) * இட்லியின் மகத்துவம்
* ஓர் உலகமகா அதிசயம்
* நகத்தினால் கிள்ளி எறிவதை கோடாரிக் கொண்டு வெட்ட வேண்டுமா?

3.3.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலின் உரைக்கட்டு இருபது தலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இத்தலைப்புக்கள் நூலின் கருத்தினைச் சுட்டுவனவாக அமையவில்லை. நூல் தலைப்பு மட்டுமே நோயைக் குறிப்பிடுகிறது. தலைப்புக்கள் மாறுபட்ட நிலையில் உள்ளன. இந்நூலின் தலைப்புக்கள் அனைத்தும் கவர்ச்சித் தலைப்புக்கள் ஆகும். இதுபோன்ற தலைப்புக்களைப் பயன்படுத்துவது பொது மக்களுக்கான நூல்களுக்குரிய சிறப்பான முறையாகும்.

(எ.கா) தேடிப் பெறும் தீமை
இவள் ஒரு மோகினி
எது வேண்டும் சொல் மனமே
நூற்றுக்கு எண்பத்தைந்து
கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவதா
காசை மட்டுமா சாம்பலாக்குகிறோம்
தற்கொலைக்குத் தயாராவதா

3.4. எழுதும் முறை

3.4.1. 'சர்க்கரை நோயால் சங்கடமா' என்ற நூலில் கருத்துக்களைப்

*தெளிவற்ற நிலையைக் குறிக்கும்

பிரித்து வடிவமைத்திருப்பது படிப்பதற்கு எளிமையாகக் காணப்படுகிறது. மேலும் சில தொடர்களில் காணப்படும் முக்கியக் கருத்துக்களைத் தனிமைப் படுத்தி எழுதியுள்ளது சிறப்பான முறையாகும்.

(எ.கா.) முந்தைய நூற்றாண்டுகளில் மருத்துவர்களுக்குச்
சவாலாய் இருந்து, இன்றைய மருத்துவ
ஆராய்ச்சிகளுக்குப் பணிந்து போயிருக்கிறது.
இக்கொடும்பிணி!

பேறுகால நீரிழிவு

இளமைகால நீரிழிவு

பச்சிளங் குழந்தை நீரிழிவு

நீரிழிவு வகைகளுள் சிலவன்றோ இவை!

சர்க்கரை நோயா.. சாவுதானே மிஞ்சும்!

நீரிழிவு நோயா. சீரழிந்துதானே போவார்

என்று இருந்த காலம் மலையேறி, நீரிழிவ நோய்தானே
என்று கூறும் காலகட்டமிது (பக் 6)

தொடர்புடைய செய்திகளை வரிசைப்படுத்தி எழுதலும் ஒரு முககிய அம்சமாகக் காணப்படுகிறது.

(எ.கா.) நீரிழிவு அறிகுறிகள்

மிகை நீர்த்தாகம்

மிகை நீர்போதல்

மிகைப்பசி

போன்றவை முக்கியமான அறிகுறிகள் (பக். 7)

ஆசிரியர் இந்த நூலினைச் சொற்பொழிவு வடிவில் அமைந்துள்ளார். இதனால் நேராகப் பொதுமக்களுடன் தொடர்பு கொள்வது போல இந்நூல் அமைந்துள்ளது. படிப்போர் கேள்விகள் எழுப்புதல் அதற்குப் பதில் அளித்தல் போன்ற முறையைச் சில இடங்களில் கையாண்டுள்ளார்.

(எ.கா.) "நீரிழிவு நோயாளிகள் எவரேனும் கர்ப்பமுறக்கூடாது
என்று நீங்கள் அறிவுரை கூறுவீர்களா டாக்டர்?" எனக்
கணைத்தொடுத்தார் ஒரு சகோதரி

நல்ல கேள்வி நீரிழிவின் கொடிய சிக்கல்களால் இளம்
வயதிலேயே அவதிப்படும் இளம் பெண்கள்
கர்ப்பமுறுவதை [illegible]கூடாது (பக் 60)

3.4.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலில் எழுதும் முறையில் சில புதிய முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியக் கருத்துக்களைத் துணுக்கு களாகக் கூறியிருப்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு

துணுக்கு வடிவில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்துக்களின் தொடக்கத்தில் ' ' என்ற குறியீட்டினை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

(எ கா.) * சவ்வு இல்லாத ஆட்டு இறைச்சியில் (Lean Meat) கொலஸ்டிரால் இல்லை.

* மாட்டுக்கறி (Beaf), பன்றிக்கறி (pork) ஆகியவற்றில் கொலஸ்டிரால் தாராளமாக உள்ளது.

வாசகர்கள் எளிதில் புரிந்துக்கொள்ளும் வண்ணம் வரிசைப்படுத்தி எழுதும் முறையையும் கையாண்டுள்ளார்.

(எ கா) இரத்தக் கொதிப்பால் மட்டுமே வரும் அறிகுறிகள்

* தலைவலி
* தலைச்சுற்றல்
* மயக்கம்
* நரம்புத்தளர்ச்சி
* தூக்கமின்மை
* களைப்பு ஆகியனவாகும்.

இதுபோலவே முக்கியக் கருத்துக்களையும் வரிசைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ.கா.) இவைத்தவிர, மிதமிஞ்சி மது அருந்துவதால்

/ 1 / தசைகளில் வீக்கம்

/ 2 / அடிக்கடி காய்ச்சல்

/ 3 / இரத்த சோகை

/ 4 / கீல்வாதம் ஆகியன ஏற்படுவதுண்டு (ப.24)

மேற்கூறிய அமைப்பு முறை எல்லா இடங்களிலும் சீராகக் கையாளப் படவில்லை. இதனால் சில இடங்கள் மிகவும் தெளிவாகவும் சில இடங்கள் தெளிவின்றியும் காணப்படுகின்றன.

3.4.3 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் கருத்துக்களை வடிவமைப்பதற்கென்று புதிய வழிமுறை ஒன்றும் உரைக்கட்டில் கையாளப் படவில்லை. சில இடங்களில் பெரிய எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

(எ.கா.) 1927இல் பி. ஸி. ஜி முதலில் மக்களின் சருமத்திற்கு அடியில் ஊசி மூலம் செலுத்தப்பட்டது. நல்ல பலன் கிடைத்த போதிலும் வேறு சில தீங்குகள் ஏற்பட்டன. ஆனால் 1927இல் வால் கிரைன் என்பவர் சருமத்திற்கு இடையே செலுத்தும் முறையை உருவாக்கினார். (பக். 95)

3.4.4 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் எழுதும் முறையில் சில முக்கியத் தன்மைகள் காணப்படுகின்றன. சொற்கள் மற்றும் வாக்கியங்கள் நெருக்கமாக அமையவில்லை. ஒவ்வொரு வரிகளுக்கு இடையும் இடைவெளி அதிகமாகவே காணப்படுகிறது. ஒவ்வொரு பக்கத்திலும் குறைவான வரிகளே காணப்படுகின்றன. அதுபோலவே தலைப்புக்கள் காணப்படும் இடத்திலும் இடைவெளி அதிகம் காணப்படுகிறது. இதனால் பார்ப்பதற்குச் சொற்கள் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றன. முக்கியக்கருத்துக்களை வரிசைப் படுத்தி எழுதும் முறையை ஆசிரியர் சிறப்பாகக் கையாண்டுள்ளார். மேலும் 'சில ஆலோசனைகள்' என்ற தலைப்பைத் தனியாகப் பயன்படுத்திச் சில முக்கியக் கருத்துக்களைத் துணுக்குகளாகவும் அமைத்துள்ளார்.

(எ.கா.) சில ஆலோசனைகள் :

1. உடலில் அடியோ, புண்ணோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நகம் வெட்டும் போது கூட மிகவும் கவனத்துடன் இருப்பது நல்லது.
2. அடிக்கடி நோய் வராமல் தவிர்க்க வேண்டும்.

3.4.5. 'எலும்புப் பாதுகாப்பு' என்னும் நூலில் ஆசிரியர் தனிப்பட்ட நுணுக்கங்கள் எதையும் 'எழுதும் முறை'யில் பின்பற்றவில்லை. இருப்பினும் பெரிய எழுத்துக்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு பக்கங்களிலும் குறைவான வாக்கியங்களே அமைத்துள்ளார். இதனால் படிக்கும்போது பக்கங்கள் வேகமாக கடந்து செல்வதால் அதிகநேரம் செலவழிப்பது போன்ற எண்ணம் தோன்றுவதில்லை.

3.4.6. 'சேய்நலம்' என்ற நூலில் நூல் எழுதும் முறை ஆசிரியரால் சிறப்பாக மேற்கொள்ளப் பெறவில்லை. கருத்துக்கள் நெருக்கமாகவும், தொடர்ச்சியாகவும் காணப்படுகின்றன. நூலில் சிறிய எழுத்துக்கள் பயன் படுத்தியிருப்பதும் படிப்பதற்குச் சுமையாகவே உள்ளது. ஆசிரியர் தாம் தெரிந்த கருத்துக்கள் அனைத்தையும் ஒருசேரத் திணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளாரே தவிர வாசகருக்குச் செய்திகளை எளிமைப்படுத்திக் கொடுக்கும் நுணுக்கங்களைக் கையாள முயலவில்லை என்பது புலப்படுகிறது.

(எ.கா.) மூச்சுத் திணறலின் முக்கியமான அறிகுறிகளாவன.

(1) நீலம் பூரித்தல் அல்லது வெளுத்தல்
(2) வேகமாகவும் மேலெழுந்தவாறாகவும் மூச்சு விடுதல்; திடீரென்று மூச்சு நின்றுவிடவும் கூடும்
(3) மூச்சு விடும்போது விலா எலும்புகள் உள்ளிழுக்கப்படுதல் (4) முனகுதல் (5) சப்பி உறிஞ்ச முடியாமை (6) உடல் சில்லிட்டு துவண்டு போதல் . இவ்வறிகுறிகள் பிறந்தவுடனேயே காணப்படலாம் அல்லது பிறந்த சில தினங்களில் சிறுகச் சிறுகத்

தோன்றலாம்; தோன்றியவுடன் விரைவாக முற்றி
மரணம் ஏற்படலாம் (பக். 32)

3.4.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் மருத்துவக் கருத்துக்களை உரையாடல் வழியாக வெளிப்படுத்துகின்ற முறையை ஆசிரியர் கையாண்டுள்ளார். இதுபோன்று அமைவது பொதுமக்கள் நூலைப் படிப்பதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

வரிசைப்படுத்தி எழுதும் முறையையும் தேவையான இடங்களில் கையாண்டுள்ளார். இதுவும் ஓர் உரைக்கட்டு சிறப்புற அமையக் காரணமாகும்.

(எ.கா)

பாட்டி : ஒரு தோல் பையில் நான் சொல்வதை எல்லாம் எடுத்து தயாராக வைத்துக்கொள். கடைசி நிமிடத்தில் தடுமாற வேண்டியதில்லை.

1 சிறிய விரிப்புகள் 4
2. ஈரம் இறங்காத இரப்பர் அல்லது பிளாஸ்டிக் விரிப்புகள் 2
3. அடித்துணி 24
4. பெரிய ஊக்குகள் 4
5. கௌன் 6, சட்டை 6, கம்பளிச்சட்டை 2
6. சிறிய போர்வை 2
7. குளிக்கும் துண்டுகள் 2
8. பஞ்சு
9. எண்ணெய்
10. பௌடர்
11. சோப்பு
12. தலைக்குத் தலையணை தேவையில்லை. துண்டை மடித்து வைத்தால் போதுமானது. (ப.27)

3.4.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் எழுதும் முறையில் குறிப்பிடத்தக்க சிறப்பான முறைகள் கையாளப்படவில்லை. எனினும் சில இடங்களில் சில முக்கிய விளக்கங்களைப் பெட்டி போன்று கட்டம் போட்டு அதற்குள் எழுதியிருப்பது சற்றுத் தெளிவு தரும் வண்ணம் அமைந்துள்ளது.

(எ.கா)

மூச்சுக் கிளைக்குழல்	சார்பு நுரையீரல் பகுதிகள்
வலது மேல் மடல்	இடது மேல்மடலின் மேற்பகுதி
1. உச்சிப்பகுதி	1 & 2 உச்சியின் பகுதி

2. பின்பகுதி	3 முன்பகுதி
3 முன்பகுதி	
வலது இடை மடல்	நாவினை ஒத்த மேல் மடலின் கீழ்ப்பகுதி
4 பக்க சார்பு பகுதி	4 மேல்பகுதி
5 மையச்சார்புபகுதி	5. கீழ்ப்பகுதி
வலது கீழ்மடல்	இடதுகீழ் மடல்
6 உச்சிப்பகுதி	6 உச்சிப்பகுதி
7 மையச்சார்பு கீழ்ப்பகுதி	7 முன் சார்பு கீழ்மடல் கீழ்ப்பகுதி
8 சார்பு கீழ்ப்பகுதி	8 பக்க சார்பு கீழ்ப்பகுதி
9 பக்க சார்பு கீழ்ப்பகுதி	9 பின் சார்பு கீழ்ப்பகுதி
10 பின் சார்பு கீழ்ப்பகுதி (பக். 137)	

3.4.9. 'நீரிழிவு' என்ற நூலில் முக்கியமாகத் தலைப்புகளைத் தெளிவாக வெளிர்நிறத்தில் அமைத்திருப்பது புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பவருக்குப் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது.

(எ கா) வயிற்று நோய்கள்

நோய்வகை

நீளமான தலைப்புகளை நீளமாக எழுதாமல் மடக்கி வெளிர் நிறத்தில் சீராக அமையும்படி வெளி ஓரத்தில் பளிச்சிடும் வகையில் அமைத்துள்ளமை ஒரு நல்ல முறையாகும்.

(எ.கா.) குடும்பத்தினர்

மிதமாக

இருக்க கூடாது

இன்னும் சில நோய்கள்

முக்கியக் கருத்துக்களை வரிசைப்படுத்தி எழுதும் முறை இவரது நூலில் காணப்படுகிறது. இது போன்று எழுதுவது முக்கியக் கருத்துக்களைப் படிப்பவரின் மனதில் நிற்கச் செய்கிறது.

(எ.கா) நீரிழிவு நோயின் அடையாளங்கள்

(1) அடிக்கடி தாகம் எடுக்கும் வாய் உலரும்

(2) அடிக்கடி சிறுநீர் கழியும்

(3) கழிக்கப்பட்ட சிறுநீரில் எறும்பு மொய்க்கும் (ப.1)

வாக்கிய அமைப்பில் சில முக்கிய கருத்துக்கள் கொண்ட தொடர்களை

வேறுபடுத்தி நேர் வரிசையில் இணையாக அமைத்து எழுதியிருப்பதுவும் நல்ல முறையாகும்.

(எ.கா.) மனித உடலில் தோன்றும் நோய்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

ஒன்று - தொற்றுநோய்கள்

மற்றொன்று - உடற்கூறு நோய்கள் (பக். 5)

இணைப்பான்கள், மற்றும் வாக்கிய அடைகள் போன்றவற்றைப் பயன் படுத்தும்போது அவற்றைத் தனிமைப்படுத்தியுள்ளார். சான்றாக, 'அதாவது', 'இருந்தாலும்', 'அதேபோல்', 'முதலாவதாக', 'பொதுவாக', 'ஆனால்' 'எனவே', 'இதுமட்டுமல்ல', 'அதாவது', 'அவற்றுள்', 'ஆகையால்', 'எடுத்துக்காட்டாக', 'சுருக்கமாகச் சொன்னால்' முதலியவற்றைத் தனியாகப் பயன்படுத்தியுள்ளார்.

3.4.10. 'புகையும் புற்றுநோயும்'என்ற நூலில் எழுதும் முறையில் புதிய முறை எதுவும் கையாளப்படவில்லை. இருப்பினும் கருத்துக்களைச் சிறு சிறு பத்திகளாகப் பிரித்து எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா.) மரமரத்து - உணர்விழந்து போன உறுப்புக்களை வெட்டி எறிந்து, நோயாளியின் உயிரைக் காப்பதுதான் அவர்களால் செய்யக் கூடியதாகும். தங்களுடைய கொடிதான புகைக்கும் பழக்கத்தை விடமுடியாத காரணத்தினாலேயே கைகாற் பகுதிகளை இழந்து விட்டவர்கள் பலராவர். (பக். 59)

ஆசிரியர் சில முக்கியமான கருத்துக்களைக் குறிப்பிடும்போது '0' போன்ற குறிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.) * 1930ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 3,848ஆகும்.

0 புகை பிடிக்கும் நண்பர்களிடமிருந்து பிரிந்து வாழ்வது

மிகவும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய இடங்களில் இணைத்தொடர் முறையைக் கையாண்டுள்ளார்.

(எ.கா) மனதைக் கெடுக்கும் எந்தப் போதைப் பொருளுக்கும் உங்களை நீங்கள் அடிமைப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

ஆரோக்கியமான சிந்தனை -

ஆரோக்கியமான உணவு -

ஆரோக்கியமான உடல் - இவை உங்களுக்கு நீண்ட ஆயுளையும் நிம்மதியான வாழ்வையும் அளிக்கும்

என்பது உறுதி !

3.5. கலைச்சொற்கள்

3.5.1. 'சர்க்கரை நோயால் சங்கடமா?' என்ற நூலில் கலைச்சொற்கள் பயன்படுத்தும் முறையில் பல வழிமுறைகளைக் கையாண்டுள்ளார். பொதுவாக வழக்கத்திலுள்ள ஒலிபெயர்ப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ.கா.) கார்போ ஹைட்டிரேட் - Carbohydrate

இன்சுலின் - Insulin

செல் - cell

கீடோன் - Ketone

சில இடங்களில் மூன்று சொற்கள் கொண்ட கலைச்சொல்லின் இடையில் ஒலி பெயர்க்கப்பட்ட சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.) நீரிழிவு கீடோ அதிஅமிலநிலை - Diabetic keto acidosis

மொழிபெயர்ப்புச் சொற்களையும் பல இடங்களில் கையாண்டுள்ளார்.

(எ.கா.) சிறுநீரகச் செயலிழப்பு - Kidney failure

அறிமுகமான உரிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன் படுத்தியுள்ளார்.

(எ.கா.) கணையம் - Pancreas

நீரிழிவு, சர்க்கரை நோய் - Diabetes

மேற்கூறிய முறையில் சொற்கள் அமையாவிடில் அதன் பொருளை விளக்கிக் கூறும் முறையையும் கையாண்டுள்ளார்.

(எ.கா.) மாற்றுப்பார்வை - Squint

மார்பு வலி - Angina

ஆண்களின் பிறப்பு உறுப்பு
முன்தோல் அழற்சி - Balanitis

தாழ் சர்க்கரை நிலை - Hypoglycemia

மிகை நீர்த்தாகம் (Polydipsia), மிகை நீர் போதல் (Poly uria), மிகைப் பசி (Polyphagia) போன்றவற்றில் தாழ், மிகை போன்ற முன்னொட்டுக்களைப் பயன்படுத்தியிருப்பது பொருத்தமாக இல்லை. இதனைத் தவிர்த்து விளக்கிக் கூறும் முறையைப் பயன்படுத்தியிருப்பின் சிறப்பாக அமையும்.

3.5.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலில் கலைச்சொல் பயன்பாட்டைப் பெரும்பாலும் தவிர்த்து அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக வழக்குச் சொற்களுக்கு முதன்மை அளித்துள்ளார். கலைச்சொற்கள்

தேவைப்படும் இடங்களில் தமிழ்ச்சொற்களையே பயன்படுத்தியுள்ளார். தமிழ்ச் சொற்கள் இல்லாதவிடத்து விளக்க முறை மற்றும் ஒலிபெயர்ப்புச் சொற்களையும் கையாண்டுள்ளார்.

(எ.கா.) **வழக்குச்சொற்கள்**

சீல்வாதம் - Gout

காளான் - Fungus

கணையம் - Pancreas

மண்ணீரல் - Spleen

(எ.கா) **ஒலிபெயர்ப்புச் சொற்கள்**

ஆல்ஃபா - Alpha

கார்போ ஹைடிரேட் - Carbohydrate

கொலஸ்ட்ரால் - Cholestral

கடினச்சொற்களை அதிகமாகப் பயன்படுத்தாது பொருளை விளக்கிச் செல்லும் முறை இவரது உரைக்கட்டில் உள்ளது.

(எ கா) வெப்ப நாடுகளில் ஏற்படும்
ஒருவகை சீதபேதி - Amoebiasis

மரபுக் கீற்றுப் பொருள் - Genes

உடல் எடை மிகுதியாக இருப்பது - Obesity

3.5.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் கலைச் சொற்களைச் சீரான முறையில் கையாண்டுள்ளார். முதலில் வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்களுக்கு முதன்மை கொடுத்துள்ளது இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாகும்.

(எ கா) வயிறு - Abdomen

தமனி - Artery

சோகை - Anaemia

கலைச்சொற்கள் பொருத்தமாக அமையாவிடின் விளக்க முறையில் அமைக்கப்பட்ட சொற்களைக் கையாண்டுள்ளார்

(எ.கா.) நரம்புத்தளர்ச்சி - Neuritis

சிறுநீர்ப்பை முன்வாயில் சுரப்பி - Prostrate

நுண்மங்கடத்தி - Vector

ஒலிபெயர்க்கப்பட்ட சொற்களும் இவரது உரைக்கட்டில் காணக் கிடைக்கின்றன.

(எ.கா.) ட்யூபர்குலின் பாசிடிவ் - Tuberculin Positive

அல்புமின் - Albumin

3.5.4. 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் உரைக்கட்டில் கலைச் சொற்கள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் பொதுப் படையாக ஒருவருக்குத் தேவைப்படும் கருத்துக்கள் தெளிவாக அமைந்துள்ளமையே ஆகும்.

ஆசிரியர், பொதுவாக வழக்கிலுள்ள சொற்களையே கையாண்டுள்ளார்; மேலும் ஒலிபெயர்ப்புச் சொற்கள், விளக்கச்சொற்கள் மற்றும் மொழிபெயர்ப்புச் சொற்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

(எ.கா.) வழக்குச்சொற்கள்

தமனி - Artery

மகாதமனி – Aorta

பொன்னுக்கு வீங்கி – Mumps

சிறுநீர் – Urine

விளக்கிக்கூறல்

கை, கால் செயலிழப்பு – Paralysis

முன்சிறுகுடல் – Duodenum

தறிகெட்ட இருதயத் துடிப்புகள் - Arrhythmia

மொழிபெயர்ப்பு

இருதயத்தாக்கு – Heart attack

இருதயத்தளர்வு –Heart failure

ஒலிபெயர்ப்பு

டான்ஸில் – Tonsil

டிப்திரியா – Diptheria

ஆஸ்துமா – Asthuma

பிராங்கைடீஸ் – Bronchitis

கலைச்சொற்கள் பயன்பாட்டில் ஒருமித்த நிலை சிறு இடங்களில் காணப்படவில்லை. சான்றாக ' Heart attack' என்ற சொல்லிற்கு மாரடைப்பு என்று பயன்படுத்தியுள்ளார். சில இடங்களில் மொழிபெயர்ப்புச் சொல்லாக 'இருதயத் தாக்கு' என்றும் பயன்படுத்தியுள்ளார். இதுபோன்று சில இடங்களில் 'ஆஸ்துமா' என்றும் சில இடங்களில் 'ஆஸ்த்துமா' என்றும் பயன் படுத்தியுள்ளார்.

ஒலிபெயர்ப்பு முறையைக் கையாண்டும் இணையான ஆங்கிலச்

சொற்களை அடைப்புக்குறிகளில் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

(எ.கா.) (Artherosclerotic) இரத்த அழுத்தம் என்று
கூறுவார்கள். (Scabies) எனப்படுவது ஒரு
சிரங்கு நோய்.

3.5.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற நூலில் கலைச்சொற்களின் தேவை உரைக்கட்டில் அதிகமாகக் காணப்படினும், சில இடங்களில் மட்டுமே கலைச் சொற்களைக் கையாண்டுள்ளார். ஏனையவை விளக்க முறையில் அமைக்கப் பட்ட சொற்களே ஆகும். நூலின் உரைக்கட்டு மிக எளிமையாக அமைவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். எல்லாக் கலைச்சொற்களுக்கும் அடைப்புக் குறியில் ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(எ.கா.) தமிழ்ச்சொற்கள்

சிரங்கு – Scabies

சிம்புகள் – Splints

வயிரங்கள் – Piths

தொழுநோய் –Leprosy

மொழிபெயர்ப்பு

மூடிய முறிவு – Closed frature

முளை மூட்டு – Pivot joint

திறப்பு முறிவு – Open fracture

குறுக்கு முறிவு – Transverse fracture

ஒலிபெயர்ப்புச் சொற்கள்

அக்கு பங்சர் - Acupuncture

இம்முறை அதிகமாகப் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும் வாக்கியத்தில் ஆங்கிலச் சொற்களை அம்மொழியிலே எழுதியுள்ளார். இதனால் ஆங்கிலம் தெரியாத ஒருவர் இந்த இடங்களைப் புரிந்து கொள்வது கடினமாகும்.

(எ.கா) உயிருக்குக் கேடு விளைவிக்காத கட்டிகள்
பலவகைப்படும். Osteo chondroma,
chondro blastoma, chondromyxiod, fibroma
போன்றவை சில எடுத்துக்காட்டுகள் (பக். 83) இப்படி
உயிருக்குக் கேடு பயக்கும் கட்டிகளில்
குறிப்பிடத்தக்கவற்றுள் Osteosarcoma,
Ewings tumor என்பவை ஏறத்தாழ 12 முதல் 20

வயதிற்குட்பட்டவர்களுக்கே வருகின்றன. ஏனைய multiple myeloma, chandro sarcoma, giant cell tumor போன்ற கட்டிகள் பெரும்பாலும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே தோன்றும் (பக். 85)

3.5.6. 'சேய்நலம்' என்ற நூலில் கலைச்சொற்களின் பயன்பாடு குறைவாக உள்ளது. வழக்கிலுள்ள சொற்களுக்கு முதன்மை கொடுக்கப் பட்டுள்ளது. வழக்குச்சொற்கள் இல்லாவிடில் விளக்கிக் கூறும் முறை கடைப் பிடிக்கப்பட்டுள்ளது. விளக்கிக் கூறும் முறையிலும் சொற்கள் அமையாவிடத்து ஒலிபெயர்ப்பு முறை கையாளப்பெற்றுள்ளது. சொற்கள் அறிமுகப்படுத்தும் இடத்து அடைப்புக்குறிகளில் ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

(எ.கா.) வழக்குச்சொற்கள்

ஈரல் – Liver

மண்ணீரல் – Spleen

வலிப்பு – Paralysis

சீயம்பால் – Cholestrum

விளக்கிக் கூறல்

குடல் ஏற்றம் – Intussusception

எளிய சிம்புகள் – Splints

தசைத்துடிப்பு – Twitchings

இரத்தம் சிந்துதல் – Haemorrhage

ஒலிபெயர்ப்பு

கிளிசரின் – Glycerin

லைபேஸ் – Lipase

அம்மோனியா – Ammonia

மொழிபெயர்ப்பு

உயிர்ப்பகை – Antibiotic

நீடித்த – Chronic

3.5.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் கலைச் சொற்கள் வலிந்து திணிக்கப்படாதவாறு தேவைக்கேற்பப் பயன்படுத்தப் பட்டுள்ளன. சாதாரண வழக்கிலுள்ள சொற்களையே அதிகமும் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். வழக்கிலுள்ள ஒலிபெயர்ப்புச் சொற்களுக்கு முதன்மை அளித்துள்ளார். மேலும் அவற்றிற்கு அடைப்புக்குறியில் ஆங்கிலத்தில் கொடுக்கப்படவில்லை. சான்றாக 'ஹீமோகுளோபின்' என்ற சொல்லிற்கு

ஆங்கிலச்சொல் பயன்படுத்தப்படவில்லை. அதேநேரத்தில் எப்ஸ்டைன் முத்து என்ற சொல்லிற்கு (Epstain pearl) என்று அடைப்புக் குறியில் பயன் படுத்தியுள்ளார்.

(எ.கா.) வழக்குச்சொற்கள்

நுரையீரல் - Lungs

கல்லீரல் - Liver

சிறுநீரகம் - Kidney

தட்டம்மை, மணல்வாரி - Measels

விளக்கிக்கூறல்

இளம்பிள்ளை வாதம் - Polio

மொழிபெயர்ப்பு

ஊக்க அளவு - Booster dose

ஒலிபெயர்ப்பு

டேசோக் நோய் - Tay sachs Disease

சிஃபிலிஸ் - syphilis

மர்மராட்டா நோய் - Marmarata Disease

3.5.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் கலைச் சொற்களை ஆசிரியர் அதிகமாகக் கையாண்டுள்ளார். சாதாரணப் பெயர் களைப் பயன்படுத்தும்போதும் கலைச்சொற்களைப் பயன்படுத்துவது போல் அடைப்புக்குறியில் ஆங்கிலத்தில் கொடுத்துள்ளார். இதனால் உரைக்கட்டு முழுவதும் கலைச்சொற்கள் நிரம்பியதாகக் காணப்படுகின்றது. சான்றாகத் திரு. கெட்டில் (Kettle) திரு. கென்னடி (Kennedy) போன்று பெயர்களில் பயன் படுத்தியிருப்பது தேவையற்றதாகும். மேலும் சொற்றொடர்களுக்கும் ஆங்கிலத்தில் அடைப்புக்குறிக்குள் விளக்கம் கொடுத்திருப்பதும் தேவையற்றதாகும்.

(எ.கா) தொழிற்சாலைகளில் மனித சக்தி வீணாவதை (loss of man power) தடுத்து உற்பத்தியைப் பெருக்கவும் உதவுகின்றது. (பக். 46.)

இறுக்க உணர்வு (feeling of tightness over the chest) (பக். 110)

கலைச்சொற்கள் பயன்படுத்தலில் வழக்குச்சொற்களுக்கு முதன்மை கொடுத்துள்ளார். அடுத்து விளக்கிக்கூறும் முறையைக் கடைப்பிடித்துள்ளார். சில மொழிபெயர்ப்புச் சொற்களும் காணப்படுகின்றன. ஒலிபெயர்ப்புச் சொற்களே பெரும்பாலும் எல்லா இடங்களிலும் வந்துள்ளமை

குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா.) வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்கள்

கல்லீரல் - Liver

கணையம் - Pancreas

மண்ணீரல் - Spleen

விளக்க முறை

ஊன் நீர் - Serum

மூச்சிளைப்பு - Wheeze

மொழிபெயர்ப்பு

பருத்திக்காய்ச்சல் - Cotton fever

தோல் பரிசோதனை - Skin test

திங்கட்கிழமை காய்ச்சல் - Monday fever

ஒலிபெயர்ப்பு

செல்லுலோஸ் - Cellulose

கோபால்ட் - Cobalt

ஃபைப்பிரின் - Fibrin

3.5.9. 'நீரிழிவு' என்ற நூலில் கலைச்சொற்கள் என்ற நிலையில் பெரும்பாலும் வழக்கத்திலுள்ள சொற்களையே பயன்படுத்தியுள்ளார். கலைச்சொற்கள் இல்லையெனில் விளக்கிக்கூறல் முறையைக் கடைப் பிடித்துள்ளார். விளக்கிக் கூறும் சொற்களும் செவ்வனே அமையாவிடத்து ஒலிபெயர்ப்புச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா.) வழக்குச்சொற்கள்

நீரிழிவு - Diabetes

தமனி - Artery

சிரை - Vein

பொருள் விளக்கிக் கூறல்

கண்பார்வை கெடுகிற நோய்கள் - Retinopathy

மூளையில் இரத்தக்குழாய் வெடித்தல்
Cerebral Haemorrhage

ஒலிபெயர்ப்பு

ஆக்ஸிடைசிங் - Oxidising

மெட்டபாலிசம் - Metabolism

அனபாலிசம் - Anabolism

காடாபாலிசம் - Catabolism

கலைலச்சொற்கள் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட இடங்களிலெல்லாம் அடைப்புக்குறியில் ஆங்கிலத்திலும் கொடுத்துள்ளார். சில இடங்களில் ஆங்கிலத்தில் அப்படியே பயன்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(எ.கா.) உணவுச்சத்துக்கள் இப்படி பிராணவாயுவினால் எரிக்கப்படுவதை ஆக்ஸிடைசிங் (Oxidising) என்றும் மெட்டாபாலிசம் என்றும் சொல்கிறார்கள். (பக். 11)

அதாவது தமனிகள் என்பப்படுகின்ற arteries கெட்டிப்படுவதே. இந்த நோயை மருத்துவ பரிபாஷையில் arteriosclerosis என்று சொல்லுகிறார்கள். (பக். 83)

3.5.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலில் கலைச்சொற்களைப் பெருவாரியாகப் பயன்படுத்தாத முறையில் உரைக்கட்டை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மிகச்சாதாரண ஒருவருக்கு இதுபோன்று பயன் படுத்தப்படும் உரைக்கட்டு தங்குதடையின்றிப் படிப்பதற்குச் சீராக அமையும் என்பதில் ஐயமில்லை. கலைச்சொற்கள் தேவைப்படும் இடங்களில் மிகவும் எளிமையாகக் கையாண்டுள்ள முறை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ.கா) இந்த மார்பகப் புற்றுநோய் - நுரையீரல் புற்று - இவைதவிரப் புகைப்பழக்கம் உள்ளவர்களுக்கு வயிற்றிலே வரும் புற்று, வாய்ப்புற்று, ஆசனவாய்ப்புற்று போன்ற பலவகை புற்று நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது (பக். 69)

கலைச்சொற்களைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத நிலையில் அவற்றை ஒலிபெயர்ப்புச் செய்துள்ளார். இதுபோன்று ஒலிபெயர்ப்புச் செய்திருப்பதும் குழப்பமின்றி அவற்றை வேறுபடுத்திக் கூறியிருப்பதும் எளிமையாகவே காணப்படுகிறது.

(எ.கா.) லுக்கேமியா - என்னும் இரத்தப்புற்றுநோய் ஒன்றிலேயே, அக்யூட் லிம்பசிட்டிக் லுக்கேமியா; கிரானிக் மைலாஜினஸ் லுயீககேமியா போன்ற பல பிரிவுகள் உள்ளன.

3.6. உள்ளடக்கம்

3.6.1. 'சர்க்கரை நோயால் சங்கடமா?' என்ற நூலில் நீரிழிவு நோயைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் உள்ளடக்கம் காணப்படுகிறது. நோய் பற்றிய கருத்துக்களை மட்டும் விளக்கிக் கூறும் நூலாக அமைய வில்லை. இந்த நோயிலிருந்து மக்கள் தங்களைக் காத்துக்கொள்ளும் முறை களைக் கூறும் வகையில் இதன் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

சில இடங்கள் கேள்விகள் எழும்வண்ணம் அமைந்துள்ளன. கேள்விகளுக்குப் பதில் இங்கு அமையவில்லை. சான்றாகக் கர்ப்பகால நீரிழிவைப் பற்றிக் கூறும்போது அதன் பின்விளைவுகளைக் கூறவில்லை. இவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவார்களா என்பது பற்றியும் தெளிவாக இல்லை.

3.6.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலின் உள்ளடக்கம் பொதுவாக மருத்துவச் செய்திகளை மட்டுமே கொண்டதாக அமைந்துள்ளது. நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. நோயின் தன்மைகள் அதனின்று விடுபடும் வழிமுறைகள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

3.6.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் உள்ளடக்கம் குறிப்பாக நோயை மட்டும் சார்ந்துள்ளது. இந்த நூலின் தன்மை பொது மக்கள் பயன்படுத்தச் சாதகமான அமைப்பைப் பெறவில்லை. ஒரு பாடநூலாகவே கருதப்படும் அளவிற்குக் கருத்துக்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கூறப்படும் செய்திகள் வேறு எந்தப் பிற செய்திகளோடும் தொடர்பு படுத்தப்படவில்லை. க்ஷய நோய் பற்றிய செய்திகளே காணப்படுகின்றன.

3.6.4. 'நோயற்ற வாழ்வுக்கு' என்னும் நூலில் காணப்பெறும் கட்டுரைத் தலைப்பு ஒரு நோயை மட்டும் சார்ந்ததாக அமையவில்லை. பல நோய்களை விளக்கும் தொகுப்பாகவே காணப்படுகின்றது. ஒவ்வொரு நோயைப் பற்றியும் விரிவான தகவல்கள் இல்லையெனினும் சாதாரண பொது மக்களின் தேவைக்குத் தகுந்தாற்போல் செய்திகளைக் கொண்டு அமைந்துள்ளது. இத் தொகுப்பில் மருத்துவக் குறிப்புகள் மட்டுமல்லாமல் தொடர்பான பல்வேறு தகவல்களும் ஒப்புமைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3.6.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற இந்நூல் 'எலும்பு பாதுகாப்பு' என்ற தலைப்பில் அமைந்திருப்பினும் எலும்பின் வகைகள், எலும்பின் அமைப்பு, எலும்பின் பயன்கள் போன்ற அடிப்படைத் தகவல்களும் விளக்கப்பட்டுள்ளன. இதனால் எலும்பு பாதுகாப்பு பற்றிய செய்திகள் மட்டுமல்லாமல் எலும்பு பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் ஒருவர் தெளிவாக அறியமுடியும்.

3.6.6. 'சேய்நலம்' என்ற நூலில் குழந்தைக்குத் தேவைப்படும் உணவு மற்றும் உணவூட்டும் முறைகளை மையமாகக் கொண்டு உள்ளடக்கம் அமைந்துள்ளது. மேலும் குழந்தைகள் சூழ்நிலைச் சீர்கேடுகளினால் எவ்விதம் பாதிக்கப்படலாம் போன்ற பொதுவான செய்திகளும் காணப்படுகின்றன. மேலும் குழந்தைக்குத் தோன்றும் நோய்கள், நோய்த்தடுப்பு முறைகள் போன்றவையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பொதுவாக இந்த நூல் ' குழந்தை நலம்' பற்றிய கருத்துக்களை முழுமையாக விளக்குவதாகக் காணப்படுகிறது. இவற்றோடு வேறு எந்தக் கருத்

துக்களையும் தொடர்புபடுத்தியோ வேறுபடுத்தியோ எடுத்துக்காட்டாகவோ பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

3.6.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் உள்ளடக்கம் சாதாரண ஒரு மனிதனுக்கு முதலுதவி என்ற வகையில் முதன்மையாகத் தேவைப்படும் கருத்துக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. திருமணங்கள் எப்படி அமையவேண்டும். அதனால் பிறக்கும் குழந்தைகட்கு இருக்கும் சிறப்பு அம்சங்கள், தாய்ப்பராமரிப்பு, குழந்தைப்பராமரிப்பு போன்றவை முக்கியமாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் சாதாரண நாட்டு வழக்கத்தில் கடைப் பிடிக்கும் சம்பிரதாயங்களினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3.6.8. 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் தொழிற் சாலைகளில் மாசு படிவதால் தொழிலாளிகள் எந்தெந்த வகையில் பாதிக்கப் படுகின்றனர் என்பதைச் சித்திரிக்கின்ற வகையில் இந்த நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. முக்கியமாக நான்கு குறிப்பிட்ட தொழில்கள் மேற் கொள்வோருக்கு ஏற்படும் நுரையீரல் நோய்களை இதன் உரைக்கட்டு விளக்குவதாக உள்ளது.

1) சுரங்கத்தில் தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்
2) உலோகத்துகள் சார்பு நுரையீரல் நோய்கள்
3) இராசாயன நொடி சார்பு நுரையீரல் நோய்கள்
4) வேளாண்மைத் தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்

முக்கியமாக மேற்கூறிய நோய்கள் பற்றிய விளக்கங்கள் இந்த நூலில் விரிவாகக் காணப்படுகின்றன. வேறெந்தப் பிற கருத்துக்களும் தொடர்பு படுத்தப்படவில்லை.

3.6.9. 'நீரிழிவு' என்னும் இந்நூல் வெறும் நீரிழிவு நோயைப் பற்றிய தகவல்களைக் கொண்டதாக அமையாமல் பல்வேறு நடப்புக் காரியங்களையும் உள்ளடக்கியதாக ஆக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க முறையாகும்.

நோய் பற்றிய அறிவுரையை வழங்குவது மட்டுமன்றி புதிதாக ஊசி போடுபவர் எவ்வாறு அதனைக் கையாள வேண்டுமென்ற அறிவுரையையும் வழங்குகிறார். இதுபோல ஒன்றிற்கொன்று தொடர்புள்ள அறிவுரைகளும் இவரது நூலில் காணப்படுகின்றன.

> (எ.கா.) புதிதாகத் தாமே ஊசி போட்டுக் கொள்பவர்கள் தம் உடம்புக்குப் பதிலாக ஓர் ஆப்பிள் பழத்தில் அந்த ஊசியைச் செலுத்திப் பழகிக்கொண்டு பிறகு தம் உடலில் செலுத்திக் கொள்ள வேண்டும். (பக். 104)

3.6.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலின் தலைப்பிற்குப்

பொருத்தமாகவே உள்ளடக்கம் அமைந்துள்ளது. இருப்பினும் தலைப்புத் தொடர்புள்ளவற்றை மட்டுமே எழுதுவது என்பது ஆசிரியரின் நோக்கமாக அமையவில்லை. பல நடப்புக் காரியங்களோடு தொடர்புபடுத்திக் கூறியிருப்பதால் அவையும் உள்ளடக்கத்தின் ஒருபகுதியாகவே காணப்படுகின்றன. புகை பிடிப்பதினால் ஏற்படும் விளைவுகள் பிற நாடுகளில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை, பாதிப்பு, விவரங்கள், இதனால் புற்றுநோய் தோன்றுவதற்குரிய வழிகள் போன்றவையே முக்கியமாக ஆசிரியரின் உரைக்கட்டில் காணப்படுகின்றன.

3.7. புரிதிறன்

3.7.1. 'சர்க்கரை நோயால் சங்கடமா? என்னும் நூல் படிப்பவர் எளிதில் புரிந்து கொள்ளும் முறையில் அமைந்துள்ளது. எனினும் கலைச் சொற்களும், சாதாரண சொற்களும் பயன்படுத்தியிருப்பது சற்றுக் கடினமாகவே அமைந்துள்ளது.

(எ.கா.) நாட்பட்ட நீரிழிவு நோயாளிகளிடையே இந்நோய் சிறுநீரகச் செயலிழப்பை ஏற்படுத்திவிடும். (பக். 50)

பெற்றோர் இருவருமே நீரிழிவு நோய் உடையவராயிருப்பின் அவர்களை வாய்ப்புள்ள நீரிழிவாளர்கள் என்று சொல்லுவர் (பக். 29)

நீரிழிவு கீடோ அதிஅமிலநிலை : ஒன்றுமே புரியவில்லையே, டாக்டர் என நீங்கள் கேட்கலாம். (பக் 45)

மத்திம தாழ்சர்க்கரை நிலை இருக்கும் நோயாளிகளைச் சர்க்கரை நீரைக் குடிக்க வைத்தல் வேண்டும் (பக். 41)

3.7.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலின் புரிதிறன் சீராக அமையப் பெறவில்லை. பல இடங்களில் பெரிய பத்திகள் மற்றும் தெளிவற்ற வாக்கியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதால் வாசகர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் இந்நூல் தெளிவாக இல்லை.

3.7.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலின் புரிதிறன் எளிமையாக அமையப்பெறவில்லை. நோய் பற்றிய ஆசிரியரின் தகவல்கள் தேவைக்கு அதிகமாகவே காணப்படுகின்றன. இதனால் சாதாரண ஒருவர் எளிதாகப் புரிந்து கொள்ள இயலாமல் போய்விட ஏதுவாகிறது. வாக்கிய அமைப்புக்களும் பலவிடங்களில் தெளிவின்மையைக் காட்டுகின்றன.

(எ.கா.) நுரையீரலில் உருவாகும் முதல்நிலை நோய் தவியம் புளூரா உறைக்கு அருகில் இருப்பதால், புளூராவும் பாதிக்கப்படலாம். புளூரா அழற்சி ஏற்பட்டால், புளூரா அறையில் திரவம் தோன்றும். இந்தத் திரவம்

கொண்ட புளூரா அழற்சி. சிகிச்சை இல்லாமலேயே சில சமயங்களில் குணமடையும். எப்படி இருந்த போதிலும் வேதியியல் சிகிச்சை உடனே கையாளப்பட வேண்டும். நோய் தீர்ப்பதைவிடத் தடுப்பதே மேல். ஆகவே குழந்தை பிறந்த உடனே பி.ஸி.ஜி. ஊசி போடுவது சாலச்சிறந்ததாகும். (பக். 81)

3.7.4. 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் புரிதிறன் ஒரு சாதாரண வாரப் பத்திரிகையைப் படிப்பது போன்ற தெளிவான தன்மையை இதன் உரைக் கட்டில் கொண்டுள்ளது எனலாம். கருத்துக்கள் குறைவாக இருப்பினும் மிகவும் தெளிவாக உள்ளன. கருத்துக்கள் எந்த நிலையிலும் திணிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சுருங்கக் கூறின் சாதாரணப் பொது மக்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் இதன் தன்மை சிறந்து காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

3.7.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற நூலின் புரிதிறன் ஓரளவு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்கூடப் புரிந்து கொள்ளும்படி மிகத் தெளிவாக அமைந்துள்ளது. மேலும் இந்த நூலில் மருத்துவ அறிவியல் கருத்துக்களே நிரம்பி இருப்பினும் ஓர் இலக்கியம் போலவே காணப்படுகிறது. இருப்பினும், சில இடங்களில் ஆங்கிலக் கலைச்சொற்களை உரிய தமிழ் மொழி பெயர்ப்பின்றி ஆங்கில மொழியிலே பயன்படுத்தியிருப்பது ஆங்கில மொழி பயிலாதவர்கள் புரிந்து கொள்ள இடையூறாக அமையும்.

3.7.6. 'சேய்நலம்' என்ற நூலில் பொது மக்கள் யாவரும் பயன்படுத்தும் வகையில் புரிதிறன் சிறப்பாக அமையவில்லை. இதற்கு முக்கியக் காரணம் கருத்துக்களைப் படிக்கும் வகையில் தெளிவுபடுத்திட எளிமையாக்கி எழுதும் முறையை மேற்கொள்ளாமையே ஆகும்.

3.77. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் புரிதிறன் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. எழுதப் படிக்கத் தெரிந்த எல்லாவகைப் பிரிவு மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் புரிதிறன் காணப்படுகிறது.

3.7.8. ' தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் 'புரிதிறன்' சிறப்பாக அமையும் வகையில் கருத்துக்கள் தெளிவான முறையில் எடுத்துரைக்கப்படவில்லை. மேலும் சொற்கள் மற்றும் வாக்கியத் தொடர்களும் நெருக்கமாக அமைக்கப் பெற்றுள்ளன. இதனால் நூலைப் பார்த்த உடனே படிக்க விரும்பும் வகையில் ஆர்வமூட்டுமாறு அமையவில்லை. பல கூட்டு வாக்கியங்கள் மற்றும் சொற்களின் கடினத்தன்மையுடன் நூலின் புரிதிறனைப் பெருமளவில் குறைக்கின்றன.

3.7.9. 'நீரிழிவு' என்ற நூலின் 'புரிதிறன்' தொடக்கம் முதல் இறுதி வரை செவ்வனே அமைந்துள்ளது. மொழி பயின்றவர் அனைவருக்கும் இது புரியும்

விதத்தில் உள்ளது. இருப்பினும் பல இடங்களில் ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் பயன்படுத்தியிருப்பது தடங்கலை உருவாக்குகின்றது.

(எ.கா.) இந்த நோயை மருத்துவ பரிபாஷையில்
arteriosclerosis என்று சொல்லுகிறார்கள் (ப. 83)

3.7.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலில் காணப்பெறும் உரைக் கட்டின் புரிதிறன் சிறப்பாக உள்ளது. இதன் உரைக்கட்டு ஒரு கதை போன்ற அமைப்பினை உடையதாகக் காணப்படுகிறது. இதனால் நூலினைப் படிக்கத் தொடங்கிய ஒருவர் இறுதி வரையிலும் தொடர்ந்து படிப்பதற்கேற்ற ஆர்வம் அளிப்பதாக உரைக்கட்டு அமைந்துள்ளது. ஒருசில இடத்தில் மட்டுமே வாக்கிய அமைப்பு பெரிதாகக் காணப்படுகிறது.

3.8. உத்திகள்

3.8.1. 'சர்க்கரை நோயால் சங்கடமா?' என்ற நூலில் உரைக்கட்டு செம்மையுறப் பலவகை உத்திகளைக் கையாண்டுள்ளமையை அறியமுடிகிறது.

உரைக்கட்டைச் சொற்பொழிவு வடிவத்தில் அமைத்திருப்பது முதன்மையான உத்தியாகும். இதனால் அவரது கருத்துக்கள் தெளிவாக அமைவதற்கும் நேருக்கு நேர் உரையாடுவது போன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி மக்கள் மனத்தில் கருத்தினை நிலைக்கச் செய்வதற்கும் ஏற்புடையதாகிறது.

ஆசிரியர் நடந்த நிகழ்ச்சிகள், கதைகள், பழமொழிகள் போன்ற வற்றோடு தொடர்புபடுத்திக் கூறியிருப்பது மக்களிடையே அறிமுகமான நிகழ்ச்சிகளோடு புதிய செய்திகளைக் கலந்தாடும் ஒரு சிறந்த உத்தியாகவே கருத முடிகிறது.

கவிதை நடை, அடுக்குத் தொடரமைப்பு, இணைத்தொடரமைப்பு, வரிசைப்படுத்தி எழுதுதல் போன்றவையும் ஆசிரியரால் கருத்து வெளிப் பாட்டிற்கான உத்திகளாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.8.2. 'டாக்டர் பேசுகிறார்' என்ற நூலில் குறிப்பிட்ட சில கருத்துக் களைத் துணுக்குகளாக ஆசிரியர் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்க முறையாகும். இதனால் தேவையான முக்கியக் கருத்துக்கள் தெளிவாகக் காணும்படி அமைந்துள்ளன.

3.8.3. 'க்ஷய நோயும் தடுப்பு முறைகளும்' என்ற நூலில் உரைக்கட்டு தெளிவு பெறும் வகையில் உத்திகளை ஆசிரியர் கையாளவில்லை. கலைச் சொற்களின் தெளிவுக்காக இரண்டு கலைச்சொல் பட்டியல்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இது படிப்பவருக்கு ஐயங்கள் ஏற்படும்போது தெளிவு பெறத் துணையாகிறது.

3.8.4. 'நோயற்ற வாழ்வுக்கு' என்ற நூலில் முக்கியக் கருத்துக்களைச் 'சில ஆலோசனைகள்' என்ற தலைப்பில் தனியாக அமைத்திருப்பது இவரது உரைக்கட்டில் புதிதாகக் காணப்படுகின்ற உத்தியாகும். சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றைத் தேவைக்குத் தகுந்தாற்போல் துல்லியமாகப் பயன்படுத்தியிருப்பதுவும் ஒரு நல்ல உத்தியாகும். பத்தி, வாக்கியங்கள், சொற்கள் முதலியவற்றிற்கு இடையில் அதிக அளவு இடைவெளி கொடுத்துக் கருத்துக்களைத் தெளிவு பெறச் செய்திருப்பதுவும் ஒரு நல்ல உத்தியாகவே காணப்படுகிறது.

3.8.5. 'எலும்பு பாதுகாப்பு' என்ற நூலில் விளக்கப்பட வேண்டியவற்றை முக்கிய இடங்களில் எடுத்துக்காட்டுகள், ஒப்புமைகள் போன்றவற்றைக் கொடுத்து விளக்கிப் புரிய வைப்பது நல்லதோர் உத்தியாகும்.

பத்திகள் சிறியவையாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பெரிய எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதால் ஒரு பக்கத்தில் குறைந்த அளவே வாக்கியங்கள் காணப்படுகின்றன. இந்நிலை எந்திரமயமான இன்றைய வாழ்க்கையில் விரைந்து கருத்துக்களை அறிய விரும்புவோருக்குப் பயன்படுவதாக அமையலாம்.

3.8.6. 'சேய் நலம்' என்னும் இந்நூலில் உத்திகள் எனக் குறிப்பிடும் வகையில் ஆசிரியர் எவ்விதச் சிறப்பு முறைகளையும் பயன்படுத்தவில்லை.

3.8.7. 'மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல்' என்ற நூலில் பொதுமக்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் சில உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

1) ' உரையாடலாக வடிவமைத்திருப்பது' ஆசிரியரின் முதன்மையான உத்தியாகும். இது நூலை எடுத்துப் பார்ப்பவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு வழிவகை செய்யும்.

2) கலைச் சொற்களைக் குறைவாகப் பயன்படுத்தித் தெளிவான நடையைக் கொண்டிருப்பது அடுத்த பயன்தரு உத்தியாகும்.

3) படங்கள், அட்டவணை போன்றவற்றைப் பயன்படுத்தியிருப்பதும் தொடர்ந்து படிக்கின்ற சுமையைக்குறைக்க வழி வகை செய்யும் ஓர் உத்தியாகும்.

4) இயல்பான சம்பவமாகிய திருமணத்தை முதலில் கூறி அதோடு மருத்துவ அறிவியல் கருத்துக்களைத் தொடர்புபடுத்தியிருப்பதும் நல்லதோர் உத்தியாகும்.

3.8.8 'தொழில் சார்பு நுரையீரல் நோய்கள்' என்ற நூலில் சில உத்திகள் காணப்படுகின்றன.

1) சில இடங்களில் சில முக்கியத் தலைப்புக்களைப் பெரிய எழுத்துக்களில் அமைத்திருத்தல்.
2) பாரதியாரின் கவிதைகளின் சில வரிகளை ஒவ்வொரு பெரும் பிரிவுகளின் தொடக்கத்திலும், இறுதியிலும் பயன்படுத்தியிருப்பதை ஓர் உத்தியாகக் கையாண்டுள்ளார். இதனால் பாரதியின் கவிதையில் ஈர்க்கப்பட்ட ஒருவர் உள்ளே தொடர்ந்துவரும் செய்தியையும் கட்டாயம் படிக்க முயலாமலிருக்க மாட்டார்.

3.8.9. 'நீரிழிவு' என்ற நூலில் சில உத்திகள் கையாளப் பெற்றுள்ளன. முதலில் தெரிந்த கருத்துக்களைக் கூறி, பின்பு தெரியாத கருத்துக்களைக் கூறியுள்ளார். முக்கியக் கருத்துக்களை ஒப்புமை மூலமும் எடுத்துக்காட்டு மூலமும் விளக்கியிருப்பது நல்ல உத்தியாகும். இணைத்தொடரமைப்பு, வரிசைப்படுத்தி எழுதல் போன்றவையும் நல்ல உத்திகளாகவே காணப்படுகின்றன.

3.8.10. 'புகையும் புற்றுநோயும்' என்ற நூலில் வாசகர்களைக் கவரும் விதத்தில் தலைப்புக்களைப் பயன்படுத்தியிருப்பது விளக்க நிலையில் ஒரு முதன்மையான உத்தியாகும். ஆசிரியர் கூறுவது மருத்துவ அறிவியல் கருத்துக்களாயினும், படிப்பதற்குக் கதை போன்று உரைக்கட்டை அமைத் திருப்பது நூலைப் படிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டும் குறிப்பிடத்தக்க இரண்டாவது உத்தியாகும். இடையில் உணர்ச்சியூட்டும் கதைகள், பழமொழிகளோடு தொடர்புபடுத்தியிருப்பது தெளிவு ஏற்படுத்துதலின்பால் மேற்கொள்ளப்பட்ட வித்தியாசமான மூன்றாவது உத்தியாகும்.

இயல் நான்கு

4. பொதுமக்களுக்கான மருத்துவ நூல் எழுதுதல் – மேம்படுத்தும் வழிமுறைகள்

4.1. பொதுமக்கள் யார்?

அறிவியலும் மக்களும் ஒன்றோடொன்று இணைந்து வாழ்வதாக இருந்தால் எல்லா மக்களின் பொதுவாழ்க்கை நிலையும் மாறுபட முடியும். ஆனால் அறிவியல், நகரங்களில் வாழும் மக்களுக்கு மிகவும் நெருக்கமாகவும் கிராமப்புற மக்களுக்குத் தூர விலகியதாகவும் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் படித்தவர்களின் எண்ணிக்கை கிராமங்களில் குறைவாக இருப்பதுதான். மேலும், படித்தவர்கள் பல்வேறு காரணங்களுக்காக நகர்ப் புறங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். நகருக்குச் சென்றவர்கள் மீண்டும் கிராமத்தைப் பின்னிட்டுப் பார்ப்பதில்லை. அறிவியல் சாதனங்கள் நகரங்களில் வேகமாக அறிமுகமாகின்றன. இவற்றை வசதிபடைத்தவர்கள் தங்களுக்குச் சாதகமாக விரைந்து பயன்படுத்திக் கொள்கின்றனர்.

கிராம மக்களையும் அன்றாட அறிவியல் யுகத்தில் தொடர்புப்படுத் தினால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். அவர்களும் நோயற்ற வாழ்வு வாழ இதன்வழி உதவலாம். அவர்களிடையே பொருளாதார மேம்பாட்டையும் கொண்டு வரலாம். இந்தத் தொடர்பை ஏற்படுத்தப் பாலமாக அமைவன நூல்கள், பத்திரிக்கைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் போன்றவையே ஆகும்.

எனவே ஒரு நூலாசிரியர் நூல் எழுதும்போது எந்தநிலை மக்களுக்காக எழுதுகிறோம் என்பதை முதன்மையாக நினைவில் கொள்ள வேண்டும். பொதுமக்கள் என்பவர்கள் எவ்வளவு படித்திருப்பினும் அவர்கள் படித்த துறைக்குத் தொடர்பில்லாத புதிய துறையாயிருப்பின் அந்தப் புதிய துறைக்குப் புதியவர்களேயாவர். சான்றாகப் பொறியியல் துறையில் வேலை பார்ப்பவர்கள் மருத்துவத்துறைக்குப் புதியவர்களேயாவர். எனவே, 'பொது மக்கள்' என்பதைக் கற்றவர்கள் முதல் பாமர மக்கள் வரைக்கும் பாகுபாடு செய்ய வேண்டும். கற்றவர்கள் குறிப்பிட்ட துறைக்கு நிகரான ஏனைய துறை மக்க ளாகவும் இருக்கலாம். கல்லூரியில் படித்தவர்கள், மேல்நிலைப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, இடைநிலைப்பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளி போன்ற நிலைகளில் படித்தவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.



நூல் எழுதுதல் முக்கியமாக மூன்று வகைகளில் அடங்கும். அவை,

1) ஆராய்ச்சி நூல் எழுதுதல்
2) பள்ளி மாணவர்களுக்கு எழுதுதல்
3) பொதுமக்களுக்கு எழுதுதல்

என்பனவாகும்.

பொதுமக்களுக்காக ஒருவர் நூல் எழுதும்போது, யாருக்காக? எதற்காக? என்பதை முதலில் தெளிவாக உறுதி செய்துவிட்டு எழுத வேண்டும். இவ்வாறு உறுதி செய்யும்போது நூல்குறித்த சிந்தனையில் தெளிவு ஏற்பட உதவியாகிறது. ஆனால், பெரும்பாலோர் இதுபோன்று செய்வதில்லை. தமக்குத் தெரிந்த கருத்துக்கள் யாவும் நூல் வடிவத்தில் வெளிவரவேண்டும் என்ற ஆர்வத்தால், நோக்கத்தில் ஆழமின்றி எழுதுகிறார்கள். அதனால் அது பிறருக்குப் பயன்படுகின்ற நோக்கம் வெற்றி பெறாமல் போய்விடுகிறது. இத்தகைய நிலையில் நூல் தனது பயன்பாட்டுத் தன்மையில் முழுமை பெறாமல் சிறப்பிழந்து போகிறது. எழுதப்போகும் நூல் சிறப்பாக அமைய ஒரு நூலாசிரியர் அந்த நூல் எழுதுவதற்கு முன் கீழ்வரும் கருத்துக்களை மனத்திற் கொள்ளுதல் பயன்தருவதாக அமையலாம். அவை,

1) சமூகத்தில் உள்ள பல நிலை மக்களையும் தெரிந்து கொள்ளல்.
2) நூலில் எழுதப்பெறும் செய்தியினால் மக்கள் அடையும் நன்மைகளைக் கருத்திற் கொள்ளல்.
3) மக்களின் தேவைகளைக் கண்டறிந்து கொள்ளல்.
4) பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை

ஆகியனவாகும்.

4.2. அறிவியல் உரைக்கட்டு ஓர் அறிமுகம்

கருத்து நிறைவு பெற்ற எல்லாப் புலப்பாட்டையும் 'உரைக்கட்டு' எனலாம். அறிவியற் கருத்துக்கள் இடம்பெறுமாயின் இதனை 'அறிவியற் உரைக்கட்டு' என்று கூறலாம். விடோசன் (1979 : 52) அறிவியற் கருத்தைப் புதைவடிவமாகக் கருதுகிறார். மொழிவாயிலாக வெளிவருமுன் உள்ள நிலையே இப்புதை வடிவமாகும். அறிவியல் கருத்துக்கள் பல்வேறு மொழிகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. விடோசன் இதனைப் புறவடிவமாகக் கருதுகிறார். இது மொழிக்கு மொழி வேறுபடுகின்றது. எனினும் மொழிசாராக் கூறுகளான அறிவியல் படங்கள், அட்டவணைகள், குறியீடுகள் போன்றவை எல்லா மொழிகளுக்கும் பொதுவானவையாகும்.

அறிவியல் உரைக்கட்டு

|

பனுவலாக்கம்

தமிழ் மலையாளம் கன்னடம் தெலுங்கு

மேற்காணும் அடிப்படையில் அறிவியல் உரைக்கட்டு அமைவதைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்.

முழு உரைக்கட்டு ⟶ (நூல் முழுமை)
↓ ↓
உட்பிரிவுகள் ⟶ இயல்கள்
↓ ↓
கிளைகள் ⟶ பத்திகள்
↓ ↓
உரைக்கீற்றுகள் ⟶ வாக்கியங்கள்

டிரம்பிள் (1985 : 2) உரைக்கட்டு பற்றிக் கூறும்போது, வாக்கியங்கள், பத்திகள் போன்றவற்றின் தொகுப்பாலான உரையையே உரைக்கட்டு என்கிறார். இவை கருத்துப் பரிமாற்றத்திலும், மொழி அமைப்பிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் சீராக அமையவேண்டும் என்று விளக்குகிறார்.

4.2.1. அறிவியல் உரைக்கட்டும் வகைகளும் :

4.2.1.1. சொந்த அறிவியல் கண்டுபிடிப்பை மட்டும் வெளியிட ஒருவரால் படைக்கப்படும் உரைக்கட்டு.

இதை அதன் மொழிநடை, கடினத்தன்மை போன்றவற்றின் அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

4.2.1.1.1. 1) ஒரேவகையான இலக்கண அமைப்புக்களைக் கொண்ட அலகுகளாலான உரைக்கட்டு. (இது முக்கியமாகச் செயல்பாட்டுவினை வாக்கியம் கொண்டது).

(எ.கா.) நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது பெயர் உட்படத் தம்மைப் பற்றிய எல்லா விவரங்களையும் மறந்துவிடுவார்கள். இதனால் அவர்களுக்குத் திக்குவாய் அல்லது தெற்றுவாய் (Stammer அல்லது Stuller) தோன்றலாம். இது படைப்புத் திறமையைக் குறைத்துவிடும். சிந்தனையைப் பாழ்படுத்தும். இதுதான் எல்லாவற்றையும் விடக் கொடுமையான விளைவு.(பக். 42)

4.2.1.1.2. பலவகையான இலக்கண அமைப்புக்களைக் கொண்ட அலகுகளின் கலவையிலான உரைக்கட்டு.

(எ.கா) காளான் கலந்த வைக்கோலினால் மாசுபடுத்தப்பட்ட காற்றினைச் சுவாசிப்பதன் மூலம் விளையும் இந்நோய் கண்டவர்கள் இந்நோய் வாய்ப்பு சூழ்நிலையிலிருந்து விடுபட்ட ஒரு வாரத்திற்குப் பிறகும் நோயாளியின் நுரையீரல் காற்றறைகளில் ஒவ்வாமையைத் தூண்டுவிக்கக் கூடிய சுமார் 7 இலட்சம் தெர்மோ பாலிஸ்போரா. பாலின்போரா காளான்களின் சிதல் விதைகள் (Spores) காணப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. (தொ.சா.நு.நோ.ப. 123)

4.2.1.1.3. கடின நடையையும், எளிய சொற்கள் மற்றும் கலைச் சொற்களையும் கொண்ட உரைக்கட்டு.

(எ.கா) கணையம், இன்சுலினைப் போதிய அளவு சுரந்தும்கூட, இன்சுலின் தன் இயல்பான செயல்பாட்டுத் தன்மையை இழந்து விடுவதால் தோன்றும் நீரிழிவு நோய் பெரும்பாலும் மத்திய வயதினர்க்கே, இந்தப் பருவத்துக்குப் பிறகே தோன்றும். இத்தகைய நீரிழிவு நோயினை ''காலங்கடந்து ஏற்படும் நீரிழிவு நோய்'' என்றும் இத்தகைய நீரிழிவுக்கு ஆளாவோர்க்கு இன்சுலின்

ஊசிபோடும் தேவை இல்லாமல், நோயை, மாத்திரை
மருந்துகளாலேயே கட்டுப்படுத்த முடியும் என்பதால்,
இவர்களை ''இன்சுலின் தேவையற்ற
நோயாளிகள் என்றும் கூறுவர்.'' (டா பே. ப. 15)

4.2.1.1.4. எளிய நடை, கடினச் சொற்கள் மற்றும் கலைச்சொற்களைக் கொண்ட உரைக்கட்டு.

(எ.கா.) ஒவ்வொரு அவயமும் அதன் வளர்ச்சியின் காலம்
நீடிப்பு வேகத்தின் கதி இவைகளினால் மிகவும்
வேறுபட்டது. மூளையும் தசைநார்களும் அதனதன்
வளர்ச்சி வேகத்தின் உச்ச நிலையை பிறந்து ஒரு
ஆண்டுக்குள் அடைகின்றன. இந்தத் தீனிக்
கட்டத்தில் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையின்
விளைவு தற்காலிகமாக வளர்ச்சியைத்
தடைப்படுத்துவதோடு மட்டும் நின்று விடுவதில்லை;
பிற்காலத்தில் உணவு சமசீராகவோ மிகையாகவோ
அமைந்த போதிலும் யாக்கை இயல்புக்கேற்ப முழு
வளர்ச்சி பெற முடிவதில்லை. (டா.பே.ப. 21)

4.2.2. பிறரது கண்டுபிடிப்பை மற்றவர் நடையில் வெளியிட ஒருவரால் படைக்கப்படும் உரைக்கட்டு கீழ்வருதாகும்

4.2.2.1. மொழிபெயர்ப்பு உரைக்கட்டு

மொழிபெயர்ப்பு உரைக்கட்டு என்பது பிறரது உரைக்கட்டு வடிவத்தைத் தன் நடையில் கொடுக்காது தனது மொழி நிகரன்களைக் கொண்டு பெயர்ப்பு செய்வதாகும்.

(எ.கா.) இருதய அறைகளினுள் அழுத்தத்தைக் கணக்கிட்டு
பிறவி இருதய நோயினை (ஆரிக்கிள்கள் அல்லது
வெண்டிரிக்கிள்களுக்கு இசைப்பட்ட சவ்வுகள் சரிவர
மூடாமல் கோளாறு செய்வதனை) நிர்ணயம்
செய்யும் பொருட்டு உல்னர் இரத்த சிரையின் மூலம்
வலது ஆரிக்கிளினுள்ளும் வலது
வெண்டிரிக்கிளினுள்ளும் ஒரு ரப்பர் குழாய் (கத்தேட்டர்)
செலுத்தப்படுகிறது சவ்வுகள்
திறந்திருக்கையில் இந்தக் குழாய் வலது
ஆரிக்கிளிலிருந்து இடது ஆரிக்கிளிக்கோ வலது
வெண்டிரிக்கிலிருந்து இடது வெண்டிரிக்கிளுக்கோ
போய்ச் சேர முடியும். (இ.த. ப. 51)

4.2.2.2. தழுவல் உரைக்கட்டு

தழுவல் உரைக்கட்டைப் படைப்பதற்குப் பலவித உத்திகளைக்

கையாளலாம். நூலாசிரியர் மற்றும் நூலைப் பயன்படுத்தும் மக்களை முன் நிறுத்துவதின் மூலம் வேறுபட்ட உத்திகள் கையாளப் பெறுகின்றன. இவ்வுத்திகள் பின்வருவனவாகும். அவை,

1) கலைச்சொற்களை மாற்றுதல்
2) எளிமை அல்லது கடினமாக்கல்
3) இலக்கண அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தல் முதலியனவாகும்.

(எ.கா.) உள்நுழைந்த கிருமிக்கு ஏற்படும் மனிதனின் பிரதி வினையையே நோய் என்கிறோம். ஒரு நோய் சமூகத்தில் திடீரென்று பரவி ஒரே சமயத்தில் பலரைத் தாக்கினால் அதை நாம் கொள்ளை நோய் என்கிறோம். நோயின் தோற்றம், வளர்ச்சி, தடுப்பு, சமூகத்தைப் பாதிக்கும் விதம் இவைகளையே நாம் கொள்ளை நோய் இயல் (Epidemiology) என்கிறோம் நோயைத் தடுக்க இந்த விபரங்கள் மிகவும் அவசியம். க்ஷய நோயைத் தடுக்க பல முறைகளை நாம் கையாள வேண்டும். (க.நோ.ப. 51)

4.2.3. தனது மற்றும் பிறரது அறிவியல் கண்டு பிடிப்புக்களை வெளியிட ஒருவரால் படைக்கப்படும் உரைக்கட்டு

கருத்துக்களைத் தன் நடையிலோ பிறரிடமிருந்து கவர்ந்த நடையிலோ இரண்டும் கலந்த நடையிலோ வெளிப்படுத்துவதாகும். பொதுவாக எல்லா வகை உரைக்கட்டும் இவ்வகையைச் சார்ந்ததாகும். மேற்கூறிய எல்லா வகை உத்திகளும் இந்த வகையிலேயே காணப்படும்.

(எ.கா.) வழக்கமாக இன்சுலின் ஊசி போட்டுக் கொள்கிற ஒரு நோயாளி, அதை ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது நேரங்களில் தவறாமல் போட்டுக் கொள்ள வேண்டும். என்றைக்காவது ஒருநாள் அவர் அந்த ஊசியைப் போட்டுக்கொள்ளாமல் இருந்து விட்டால் அல்லது போட்டுக் கொள்ள வேண்டிய நேரத்தைத் தவற விட்டுவிட்டால் அவருக்கு நீரிழிவு மயக்கம் வந்துவிடும். (நீ.ப .51)

4.3. உரைக்கட்டுத் தெளிவிற்கு வழிவகைகள்

பொதுமக்களுக்கான நூல்கள் எழுதும்போது உரைக்கட்டு சிறப்பாக அமைவதற்கு உரைக்கட்டில் அமையப்பெறும் உட்பிரிவுகள் தெளிவாகவும் சிறப்பாகவும் அமையப் பெறுதல் வேண்டும். அவ்விதம் அமையப்பெறும்

உட்பிரிவுகள் கீழ்வருவனவாகும்.

1) மொழிநடை
2) பத்தி அமைப்பு
3) தலைப்புப் பயன்பாடு
4) எழுதும் முறை
5) கலைச் சொற்கள்
6) உள்ளடக்கம்
7) புரிதிறன்
8) உத்திகள்

4.3.1. மொழிநடை

மொழிநடை என்பது நூலாசிரியர் வடிவமைக்கும் வாக்கியங்கள், பயன்படுத்தும் சொற்கள் முதலியவற்றைச் சார்ந்ததாகும். இவற்றின் அமைப்பு சில சிறப்புத் தன்மைகளைப் பெறுமாயின் கருத்தாடல் மிகவும் தெளிவாக அமையும். அவ்விதம் அமையப் பெறவேண்டுமாயின் மொழிநடை கீழ்வரும் தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1) தெளிவு	(Clearness)
2) எளிமை	(Simplicity)
3) நேர்நடை	(Directness)
4) சுருக்கம்	(Conciseness)
5) துல்லியம்	(Preciousness)
6) சுவைபட எழுதுதல்	(Readability)

4.3.1.1. தெளிவு

வாக்கியம் தெளிவாக அமையப் பெறுவதற்குப் பொருத்தமான சொற்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். சொற்களில் பொருள் மயக்கம் (ambiguity) இருத்தல் கூடாது. கவிதைப் பயன்பாட்டிற்கு உரிய சொற்களைப் பயன்படுத்தல் கூடாது. சொல்லலங்காரம் முற்றிலும் நீக்கப் பெறுதல் வேண்டும்.

(எ.கா.) இன்சுலின் அதிர்ச்சியில் நோயாளிக்கு வழக்கமான அளவுக்குமேல் தாகம் எடுக்காது. நீரிழிவு மயக்கத்தில் நோயாளிக்கு அளவுக்கு மிஞ்சித் தாகம் எடுக்கும். இன்சுலின் அதிர்ச்சியில் நோயாளியின் சுவாசம் மிக விரைவாகவும் ஆழமில்லாமலும் நிகழும். நீரிழிவு மயக்கத்தில் நோயாளி மிக ஆழ்ந்த மூச்சுக்களை

விடுவார். இன்னும் சொல்லப்போனால் அவருக்கு மூச்சு விடுவதே சிறிது சிரமமாக இருக்கும். (நீ. ப. 76)

4.3. 1.2. எளிமை

வாக்கிய அமைப்பு எளிமையாக இருத்தல் வேண்டும். பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவதினால் நீளமான வாக்கியங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை வராமல் தவிர்க்க இயலும். பொருத்தமான சொற்கள் இல்லாத விடத்து அதை விளக்கமாகச் சொல்ல வேண்டியதினால் வாக்கியங்கள் பெரியனவாகவும் தெளிவற்றும் மாறுகின்றன.

கூட்டு வாக்கியங்களில் வரும் துணை வாக்கியங்களை வினைப் பெயராக மாற்றிப் பயன்படுத்துவது நன்று.

(எ.கா.) நிறையச் சாப்பிடாமலேயே உடல் பருமன் ஆனவர்களும் உண்டு அதுபோலவே நிறைய உணவு வகைகளைச் சாப்பிட்டும் உடல் பருமன் ஆகாதவர்களும் உண்டு. இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிப்பது மருத்துவர்களுக்கும் கடினமாகவே இருக்கிறது. (நோ. வா. ப. 34)

4.3.1.4. நேர்நடை

நேர்நடை எனப்படுவது ஆசிரியர் கூறவேண்டிய கருத்துக்களை இடையூறின்றி நேர்படக் கூறுவதலாகும். எழுவாயைச் சரியான இடத்தில் பயன்படுத்தாது போனால் அந்த வாக்கியம் பொருளை உடனடி உணர்த்தாமல் சுற்றி வளைத்துப் பொருள் தருவதாக அமையும். அதனால் வாக்கியத்தில் முதன்மையான கருத்துக்கு முதலிடமும் மற்றவை அதனைத் தொடர்ந்தும் அமையப் பெற வேண்டும்.

பொதுவாக மருத்துவக் கருத்துக்களைக் கூறும்போது செயப்பாட்டு வினை வாக்கிய அமைப்பைப் பயன்படுத்துவது நேர்நடைக்குப் பொருந்தாத தாகும். செயப்பாட்டு வினையில் செயப்பாட்டுப் பொருள் முதலில் வருவதால் முக்கியத்துவம் பெற்றதாகிவிடுகிறது. எனவே செய்வினை வாக்கிய அமைப்பே இதற்குச் சிறந்ததாகும்.

(எ.கா.) சைனோ - அட்ரியல் கணுவில் குறிப்பிட்ட நேரங்களுக்கு ஒருமுறை தானாகவே தூண்டுதல் ஏற்படுவது இதயத்தசைக்கு மட்டுமேயுள்ள விசேஷமான ஒரு தன்மையாகும். (இ.வ. ப. 17)

இதயத்தசைக்கு மட்டுமேயுள்ள ஒரு விசேஷத்தன்மை என்னவென்றால் சைனோ - அட்ரியல் கணுவில் குறிப்பிட்ட நேரங்களுக்கு ஒருமுறை தானாகவே தூண்டுதல் ஏற்படுவதாகும்.

4.3.1.4. சுருக்கம்

வாக்கிய அமைப்பைப் பொறுத்தவரையில் தனி வாக்கிய அமைப்பையே பயன்படுத்தல் நன்று. இதற்குச் சாதகமாக மொழியில் சொற்கள் அமைய வேண்டும். அல்லது இருக்கிற சொற்களைத் துல்லியமாகப் பயன்படுத்திச் சுருங்கக் கூறலாம். இந்நிலை பொருளைச் சுருக்கமாக வெளிப்படுத்தும் தன்மையுடன் அமையும்.

சொற்களைத் தேவையில்லாமல் பயன்படுத்துவதையும், தேவையின்றி இரண்டாம் முறையாகப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

மரபுக்கூற்று (Idioms) மற்றும் மரபுவழிச் சொற்றொடர் (Phrases) போன்றவை இந்த மொழிநடையில் அமையாதிருத்தல் வேண்டும்.

(எ.கா.) இரத்தக் குழாய்கள் ஆரோக்கியமாக இருந்தால் அப்போது அவை மிருதுவாக இருக்கும், வளைந்து கொடுக்கும். இரத்தக்குழாய் விரிந்து சுருங்கும் தன்மையுடையது. ஆனால் இரத்தக்குழாய் தடித்து விட்டால் அது சுருங்காது. விரியாது. வளைந்து கொடுக்காது. இரத்தக்குழாய் தடித்து விட்டால் அதன் சுவர்கள் கனமாகிவிடும். கனமாகிவிடுவதால் இரத்தம் செல்லும் பாதையின் அளவு குறுகிவிடுகிறது இதனால் இந்த குறுகிவிட்ட பாதையில் இரத்தத்தைப் பாய்ச்ச இருதயம் வேகமாகப் பலத்துடன் வேலை செய்கிறது. (உறா. அ. ப. 38)

4.3.1.5. துல்லியம்

எளிமையான வாக்கிய அமைப்பு அமைய வேண்டுமானால் பொருளுக்குத் தகுந்தவாறு துல்லியமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தாவிடில் அந்த வாக்கியத்தில் கருதும் பொருளை உணர்த்த முடியாது. எனவே, மற்றொரு வாக்கியத்தைப் பயன் படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

(எ.கா.) உணவுப் பொருள்கள் வாயிலே மெல்லப்பட்டு வயிற்றிலே பிசையப்பட்டு, உமிழ்நீர், பித்தநீர் போன்ற நீர்ப்பொருள்களால் கரைத்துக் குழம்பு ஆக்கப்பட்டு, நம்முடைய சிறுகுடலைப்போய் அடைகின்றன. அங்கிருந்து அந்தக் குழம்பின் ஒருபகுதி, இரத்தக் குழாய்களுக்குள் ஈர்த்துக் கொள்ளப்படுகிறது. மற்றொரு பகுதி மலமாக வெளியே தள்ளப்படுகிறது. (நீ. ப. 11)

4.3.1.6. சுவைபட எழுதுதல்

உரைக்கட்டு படிப்பதற்கினிமையாகவும் அமையப் பெறல் வேண்டும். அப்போது நூலினைப் படிக்கத் தொடங்கினால் இறுதி வரைக்கும் தொடர்ந்து படிப்பதற்குரிய ஆர்வம் ஏற்படும்.

ஒருவர் மேற்கூறிய விதிகளைக் கடைப்பிடித்தாலும் எழுதிப் பழகப்பழகத்தான் சுவைபட – எழுதும் தன்மையை அமைத்துக் கொள்ள முடியும்.

(எ.கா.) இத்தனையும் தாயின் எண்ணத்தில் இருந்தால்
தொத்தத்தான் வருமா சவலையோ, நோஞ்சான்
நோயோ?

சகோதரி ! கோவையிலே பிறந்து பாவையர்
வரிசையிலே உயர்ந்து நிற்கின்ற என் சகோதரி !
கல்லாப் பெண்களை இவையெல்லாம் கற்க
வைத்தால் சொல்லாமல் போகாவோ அகங்கெடுக்கும்
நோய்களெல்லாம் ! (ஓ.டா.க. ப. 47)

4.3.2. கருத்தமைப்பு பத்தி அமைப்பு

டிரம்பிள் (1985 : 10) உரைக்கட்டில் கருத்துரு நிகழ்வதை விளக்குகிறார். கருத்துரு என்பது குறிப்பிட்ட சிலர் படிப்பதற்காகக் குறிப்பிட்ட சில செயல்களுக்காகத் தேவைப்படும் செய்திகளைத் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்துவதேயாகும். இது உத்தேசமான, (Hypothesis) உண்மையான (Facts) செய்திகளைக் கொண்டதாகும். ஆங்கில நடையில் பொதுவாகத் திருத்திப் பதிக்கப் பெறுவனவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்துவனவும் , கற்பனையாக உள்ளனவும், கவிதையாக வருவனவும் இதில் அடங்கா. சான்றாக,

நோஞ்சான் நோய் முற்றிய பின்போ ....
பலவீனம்
உடல் மெலிவு
தோலுக்குக் கீழேயுள்ள கொழுப்புச் சத்துக்குறைவு
வளர்ச்சிக் குறைவு
வயிற்று வீக்கம்
தோல் சுருக்கம் ....
அத்தகு நோஞ்சான் நிலைக்குக் காரணம் சத்துணவு
இல்லாததே. (ஓ.டா.க. ப.35)

இங்கு ஆசிரியர் நோயைப் பற்றிய உண்மையான செய்திகளை ஒழுங்கு படுத்திக் கூறியிருப்பதைக் காணலாம். கருத்துரு நிகழ்வில் இடம் பெறும் செய்திகளில் இதுவும் ஒருவகையாகும்.

கருத்துரு நிகழ்வில் அறிவியல் உரைக்கட்டு மூன்று வகை அடுக்கமைப்புகளைக் கொண்டதாக அமைகிறது. அவை

1) இலக்கு அடுக்கு அமைப்பு
2) கருத்து அடுக்கு அமைப்பு
3) மொழியலகு அடுக்கு அமைப்பு

ஆகியனவாகும்.

4.3.2.1. இலக்கு அடுக்கு அமைப்பு

ஒரு மொழியில் வாக்கிய அடுக்குகளின் உதவியால் வெளிப்படுத்துவதற்கென அமைந்த ஒருவகை அலகு என இதனைக் கொள்ளலாம். சான்றாக, ஒரு குழந்தைக்குத் தடுப்பூசி போடுவதாக வைத்துக் கொள்வோம். முதல் மாதம் எந்தெந்த ஊசிகள் போட வேண்டும் ; இரண்டாம் மாதம் எந்தெந்த ஊசிகள் போட வேண்டும் ; மூன்றாம் மாதம் எந்தெந்த ஊசிகள் போட வேண்டும் என்பதை வரிசையாகக் கூறுவது இலக்கு அடுக்கமைப்பாகும்.

> (எ கா.) பிறந்த முதல் வாரத்தில் பி.சி.ஜி. யுடன் முதல் இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்தை அளிக்கிறார்கள். பிறந்த ஆறு வாரத்திலிருந்து எட்டு வாரத்திற்குள் முதல் முத்தடுப்பு ஊசியும், இரண்டாவது இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்தும் கொடுத்து விட வேண்டும். ஒருமாத இடைவெளியில் மூன்று முத்தடுப்பு ஊசியும், ஐந்து இளம்பிள்ளை வாதச் சொட்டு மருந்தும் அளிக்க வேண்டும்.
> (ம.தா. ஒ. சொ., ப. 31)

இதுபோன்று அடுக்கும் முறையில் மாற்றங்கள் வருமாயின் கருத்தமைப்பில் குழப்பம் விளைந்துவிடும். எனவே அறிவியல் கருத்துக்களை எழுதுவதில் இலக்கு அடுக்கில் முக்கியக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

4.3.2.2. கருத்து அடுக்கு அமைப்பு

கருத்துக்கள் கோவையாகவும் ஒன்றிற்கொன்று முரண்பாடு இல்லாமல் சீராகவும் அமைய வேண்டும். பின்வரும் கருத்துக்கள் முன் உள்ளவையோடு தொடர்பு உள்ளனவாக இருக்க வேண்டும். எனவே கருத் தடுக்கமைப்பில் சில ஒழுங்கு முறைகளைக் கையாள வேண்டியுள்ளது. அவை பின்வருவனவாகும்.

1) சிறப்புக்களின் அடிப்படையில் அடுக்குதல்
2) ஒப்புத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்
3) வேற்றுமைத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்

4) வேறுபட்ட கருத்துக்களின் ஒற்றுமைத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்

5) எடுத்துக்காட்டு விளக்கும் வகையில் அடுக்குதல்

6) பட்டியல் மற்றும் படங்களைத் தொடர்புபடுத்தி விளக்கும் வகையில் அடுக்குதல்

7) மேற்கூறிய எல்லா வகைகளையும் இணையாக அடுக்குதல்.

4.3.2.1. சிறப்புக்களின் அடிப்படையில் அடுக்குதல்

சிறப்புக்களின் அடிப்படையில் அடுக்குவது என்பது அறிவியல் அல்லது மருத்துவக் கருத்துக்களை வெளியிடும் வாக்கியங்களைத் தரப்படுத்தி முக்கிய மானதை முதலில் தருவதாகும். சிறப்புக் குறைந்தன, பின்தொடரில் அமைக்கப் பட வேண்டும். இவை முதலில், இரண்டாவதாக, இறுதியாகப் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வெளிப்படுத்தப்படும்.

(எ.கா) முதலாவதாக, இன்சுலின் அதிர்ச்சி, ஒருவரைத் திடீரென்று தாக்கி வீழ்த்தும் நீரிழிவு மயக்கம் மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் சுமார் 24 மணி நேரத்தில் தாக்கி வீழ்த்தும்

இரண்டாவதாக இன்சுலின், அதிர்ச்சியின்போது உடம்பு வேர்த்துக் கொட்டும், நீரிழிவு மயக்கத்தின் போது அப்படி வேர்க்காது உடம்பு கொஞ்சம் சூடாகவே இருக்கும் (நீ பக் 34)

4.3.2.2. ஒப்புத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்

கருத்து ஒற்றுமை கொண்ட வாக்கியங்களை அடுத்தடுத்து நிறுத்தி வாக்கிய அலகுகளைப் படைக்கும் செயலை ஒற்றுமை விளக்கும் வகையில் அடுக்குதல் எனலாம். இதனை வாக்கியங்களில் தோன்றும் சில சொற்கள் வெளிப்படுத்தும். சான்றாக, இதேபோல், இதுமாதிரி, இதே முறையில், இதே அடிப்படையில் போன்றவை அவ்வகைச் சொற்கள் ஆகும்.

(எ கா) பசி எடுக்கும்போது நாம் உணவு உட் கொள்கிறோம் உடனே பசி தீர்ந்து விடுகிறது. தீர்நத பசி சிலமணி நேரத்தில் மீண்டும் தோன்றுகிறது அப்போது நாம் மீண்டும் உணவருந்த வேண்டியிருக்கிறது. இல்லையா?

இந்தப் பசியைப் போலவேதான் இன்றைய நிலையில் நீரிழிவு நோயும் நம்மைப் பாதிக்கிறது. இரத்தத்திலே சர்க்கரை அதிகமானால் அதை நீரிழிவு நோய் என்கிறோம் அந்த சர்க்கரையைக் குறைப்பதற்கு

இன்சுலின் என்ற மருந்தை ஊசிமூலம் இரத்தத்திலே செலுத்திக் கொள்கிறோம். உடனே சர்க்கரை குறைகிறது. அப்படிக் குறைந்த சர்க்கரை சில அல்லது பல மணி நேரத்தில் மீண்டும் அதிகமாகிவிடுகிறது. உடனே மறுபடியும் இன்சுலின் மருந்தை உடம்பில் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிறது (நீ. ப. 28)

4.3.2.3. வேற்றுமைத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்

வேற்றுமைத் தன்மை கொண்ட அல்லது முரண்பட்ட இரண்டு மருத்துவக் கருத்துக்களைத் தருகின்ற வாக்கியங்களை அடுத்தடுத்து நிறுத்தி வாக்கிய அடுக்குகளை உருவாக்குவது இம்முறையாகும். இதற்கு மாறாக, இதற்கு எதிரான, இதிலிருந்து வேறுபட்ட என்ற தொடர்கள் / சொற்கள் இவற்றை வெளிப்படுத்தி நிற்கும்.

(எ கா.) ஒருவர் பல நாள்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கிறார். அல்லது பட்டினி கிடக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவர் உடலுக்குத் தேவையான வெப்பத்தையும் சக்தியையும் முழுக்க முழுக்க திசுக்களிலிருந்தே அவர் பெற வேண்டியவராகிறார். அப்படிப் பெறுவதினால் நாளுக்கு நாள் அவரது திசுக்கள் மேலும்மேலும் நாசமாகி கடைசியில் அவர் இறந்து விடுகிறார்.

இதற்கு நேர்மாறாக, ஒருவர் தம் உடலுழைப்பின் தேவைக்கு அதிகமான உணவை நாள்தோறும் உட்கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது உடம்பு தன் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டது போக மீதியுள்ள உணவானது கொழுப்பாக மாறி தோலுக்கும் தசைக்கும் நடுவே உடம்பெங்கிலும் சேமித்து வைக்கப்படுகிறது. (நீ ப.16)

4.3.2.4. வேறுபட்ட கருத்துக்களின் ஒற்றுமைத் தன்மையை வெளியிடும் வகையில் அடுக்குதல்

இயல்பாக வேற்றுமைத் தன்மை கொண்ட கருத்துக்கள், ஆனால் அறிவியல் வல்லுநர்களால் ஒப்புமைப்படுத்தப்பட்ட கருத்துக்களைச் சுட்டும் இரு வாக்கியங்களைத் தொடர்ச்சியாக அடுக்குகின்ற செயலை வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்டி விளக்கும் வகையிலான அடுக்குதல் எனலாம். இவற்றையும் வாக்கிய அடுக்குகளில் தோன்றும் ஒப்புமை நிலை

நாட்டலைச் சுட்டும் கூறுகள் எனலாம். இவற்றை ஒப்புமைப்படுத்தும் பொழுதும், இணைத்துப் பார்க்கும் பொழுதும், அதுபோலப் போன்ற மொழிக் கூறுகள் பயன்படுகின்றன.

(எ.கா.) ஒரு பிளாஸ்கில் சிகரெட் புகையை அடைத்தார்கள் மற்றொரு பிளாஸ்கில் வெளிறிய திரவம் ஒன்றை அடைத்தார்கள் சிகரெட் புகை படிந்த பிளாஸ்கின் நிறம் கருமை படர்ந்து காணப்பட்டது இப்படிப் பிளாஸ்கில் படர்ந்துள்ள கரும்புகை போன்ற புகைதான் நுரையீரலுக்குள்ளேயும் புகுந்து அங்கே புற்றுநோயை விளைவித்துப் புகையாளிகளை வாட்டி வதைக்கின்றது என்ற உண்மையையும் கண்டார்கள் (பு பு., ப.47)

4.3.2.5. எடுத்துக்காட்டு விளக்கும் வகையில் அடுக்குதல்

இது அறிவியல் கருத்து ஒன்றையும் அதற்கான எடுத்துக்காட்டாக விளங்கும் வாக்கியங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தி வாக்கிய அடுக்கு உருவாக்கும் முறை ஆகும். 'சான்றாக' , ' எடுத்துக் காட்டாக' போன்ற மொழிக் கூறுகள் இதனை வெளிப்படுத்தும்.

(எ.கா.) தேவைக்கும் அதிகமான இன்சுலின் உடம்பில் செலுத்திக் கொள்வதினால் மட்டும்தான் இன்சுலின் அதிர்ச்சி ஏற்படுகிறது என்று எண்ண வேண்டாம். *அந்தக் காரணத்தை முன்னிட்டாவது* இரத்தத்திலுள்ள சர்க்கரைச் சத்து தன். குறைந்த பட்ட அளவைக் காட்டிலும் குறைய நேரிட்டாலும் சரியே. அல்லது எந்தக் காரணத்தை முன்னிட்டாவது உடம்பில் நிகழ்கிற இன்சுலின் இயக்கம் அதன் நியாயமான அளவைக்காட்டிலும் அதிகரிக்க நேர்ந்தாலும் சரியே. இன்சுலின் அதிர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் தோன்றிவிடும்.

(எ. கா) ஏதாவது ஓர் அவசர வேலையின் காரணமாய் நோயாளி உணவருந்த வேண்டிய வேளையைத் தவறவிட்டு, நேரம் கழித்து சாப்பிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவருடைய உடம்பில் சர்க்கரைச் சத்து தானாகவே குறைந்து விடும். ஆனால் தான் ஒழுங்காக அந்த வேளையில் உணவருந்தி இருந்தால் எவ்வளவு இன்சுலின் தேவைப்படுமோ அவ்வளவு இன்சுலினை அவர் அதற்கு முன்னமயே வழக்கம்போல் செலுத்தி

விட்டிருப்பார் தான் படடினி கிடக்கப் போவதை முன்னாலயே எதிாபபார்த்திருநதால் தனது இன்சுலின் அளவையும் அவா சற்றுக குறைத்துக கொண்டிருககலாம் ஆனால அது ஓர் எதிர்பாராத படடினியாக அமைந்துவிட்டபடியால் தன் தேவைக்கு மேற்பட்ட இன்சுலினை அவர் தெரியாத்தனமாக எடுதது்க கொள்ள நேர்நதுவிடடது இப்படிபபட்ட சமயங்களில அநத உபரியான இன்சுலின அவருககு இன்சுலின அதிாசசியை தோற்றுவிககக கூடும !
(நீ ப 57)

4.3.2.6. பட்டியல் மற்றும் படங்களைத் தொடர்பு படுத்தி விளக்கும் வகையில் அடுக்குதல்

அறிவியல் கருத்து ஒன்றையும், அதை வெளிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட படங்கள் அட்டவணைகள் முதலியவற்றையும் வெளிப் படுத்தும் வாக்கியங்களையும் அடுக்கி, வாக்கிய அடுக்கு உருவாக்கும் செயலைப் பட்டியலில் தொடர்புபடுத்தும் வகையிலான அடுக்குதல் எனலாம். இம்முறையை வாக்கிய அடுக்குகளில் தோன்றும் மேற்கோள் கருத்தைச்சுட்டும் சொற்கள் வெளிப்படுத்தும். 'இந்த அட்டவணையில்', 'இந்த அட்டவணையின் படி', 'மேற்கண்ட படத்திலிருந்து' போன்றவை இச்சொற்களாகும்.

(எ கா) ஒரு அடடவணை தருகிறேன் இது ஒரு எடுததுககாட்டே தவிர, இதையே உடுமபுபபிடியாக பிடிததுக்கொள்ளக்கூடாது

வயது	ஒரு நாளில கொடுககக வேண்டிய எணணிககை	சராசரி அளவு
முதல் 2 வாரங்களில்	0 – 8	50 – 75 மி.லி
2 மாதங்கள் வரை	5 – 6	100 – 125 மி.லி
4 மாதங்கள் வரை	4 – 5	150 – 175 மி.லி
1 வயது வரை	3 –8	175 – 220 மி.லி

4.3.2.7. மேற்சொன்ன எல்லா வகைகளையும் இணைத்தபடி அடுக்குதல்

மேற்குறிப்பிட்ட வாக்கிய அடுக்கு முறைகளை அடிப்படையாகக் கொண்டு பல வகையான அடுக்குத்தொடர்கள் இருக்கின்றன தொடர்களை வெளிப்படுத்துவதற்குப் பல மொழிக் கூறுகள் உரைக்கட்டில் பயன்படுத்தப்

படுகின்றன. இவை வாக்கியங்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துகின்றன இவ்விணைப்பான்களை அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

1) மொழி அமைபபுச செமமை இணைபபானகள

2) கருத்தமைபபுச் செமமை இணைப்பானகள

4.3.2.7.1. மொழி அமைப்புச் செம்மை இணைப்பான்கள்

மொழி அமைப்புச் செம்மை இரண்டு வழிகளில் அமைகின்றது மொழியின் இலக்கணம் ஒருவகையிலும், சொறகள் மற்றொரு வகையிலும் மொழி அமைப்புச் செம்மை சிறப்புறக் காரணமாக விளங்குகின்றன

4.3.2.7.2. கருத்துச் செம்மை நிலைநாட்டும் இணைப்பான்கள்

கருத்துக்களின் கோவை செம்மையாக அமையுமாறு பல இணைப பான்கள் கையாளப்படுகின்றன இவறறைச செம்மையாகப் பயன் படுத்தினால் கருத்திணைப்புச் சிறப்பாக அமையும் எ கா 'மேலும்', 'ஆனால்', 'இது மட்டுமல்ல', 'எனவே', 'ஆகையால', 'இருப்பினும்', 'இருநதாலும்', 'அதேபோல' என்பவையாகும்

(எ கா) நீரிழிவு நோய எபபடி பபட்டவாகளுககெலலாம
அதிகமாக ஏறபடுகிறது எனபது பறறியும எதனால
ஏறபடுகிறது என்பது பறறியும முனனே
விரிவாகச சொலலபபடடுளளது ஆனால அந்த
நோயின உண்மையான அடிபபடைக காரணம என்ன
எனபதை மருததுவ விஞ்ஞானிகளாலேயே
நிர்ணயமாகக் கணடுபிடிகக முடியவிலலை
இதேபோல், முதியவாகளுககு
உடறகூறறிலே ஏறபடககூடிய சில கோளாறுகள
நீரிழிவு நோயாளிககு ஏன முனனதாகவே எறபடடு
விடுகினறன எனபதும் இனனும் அவாகளால
கண்டுபிடிகக முடியாத ஒரு புதிராகவே இருககிறது
இருநதாலும், மருததுவரால் விதிககப்படுகிற
இனசுலின் மருந்தை உரிய அளவில உரிய நேரததில
உடம்பில செலுத்திக கொண்டு அவருடைய
ஆலோசனையின்படியே தன்னுடைய உணவுப
பழககங்களையும அமைததுக கொணடு நோயாளி
இருநதுவநதால், தன் நோயினால ஏறபடக்கூடிய
எததகைய சிககலகளையும அவரால சமாளிதது

விடமுடியும். இது உறுதி ! அது மட்டுமல்ல, இந்தக்
கட்டிகளும் பிளவைகளும், நோயாளியின்
இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவை
அதிகமாக்குகின்றன

பத்தி அமைப்பு

உரைக்கட்டில் பத்தியே அடிப்படை அளவாகக் கொள்ளப்படுகிறது. பொதுவாக ஒரு பத்தி, வாக்கியங்களைக் கொண்டுள்ளது என்றாலும் எழுதுபவரின் கருத்தை முன்னிட்டுப் பத்தி, ஒரு வாக்கியமாகவும் அமையலாம்.

(எ.கா.) நுரையீரற் புற்றுநோயை உடனே அறிய முடியா
விட்டாலும் பெண்கள் தங்கள் மார்பகங்களைப்
பாதிக்கும் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை
அவர்களால் சுலபமாக கண்டுபிடித்துவிடமுடியும்.
அவர்கள் ஆரம்ப கட்டத்திலேயே நோயின்
அறிகுறியை கண்டறிந்து தகுந்த வைத்தியரை
அணுகி சிகிச்சைப் பெற்றுக்கொண்டால்
பயனடையலாம் (பு. பு நோ., ப 69)

பொதுவாக ஒரு உரைக்கட்டில் மூன்று வகைப் பத்திகளைக் காணலாம். அவை,

1) முகவுரைப் பத்தி
2) உள்ளடக்கப் பத்தி
3) முடிவுரைப் பத்தி

என்பனவாகும்.

முகவுரைப் பத்தி, நோக்கம் பற்றியதாக அமையும். ஆசிரியர் தாம் எழுதும் பொருளை அதுதொடர்புடைய வேறுபொருளின் கருத்துக்களோடு ஒப்பிட்டோ வேறுபடுத்தியோ கூறுவதாகவும் அமையும். இதனைப் புறத் தொடர்புரை எனலாம். ஆசிரியர் தாம் எழுதப் போகும் கருத்துக்கள் பற்றிய பொதுக்குறிப்பாகவும் அமையும். இதனை அகத்தொடர்புரை எனலாம். உள்ளடக்கப் பத்தியின் தலைப்பில் காணும் செய்தியின் விளக்கம், வரையறை, பாகுபாடு போன்றவை இருக்கும். முடிவுரைப் பத்தி தலைப்பில் கூறியவற்றை உள்ளடக்கிய சுருக்கமாக அமையும்.

டிரம்பிள் (1985 : 15) பத்தி பற்றிக் கூறும்போது தோற்ற நிலைப் பத்தி பற்றியும், கருத்து நிலைப் பத்தி பற்றியும் கூறுகிறார். ஒவ்வொரு பத்தியும் ஒரு மையக் கருத்தைக் கொண்டே அமைகிறது. செய்தியின் அளவு, தன்மை, விளக்கத் தேவைப்படும் துணைக்கருத்துக்கள் போன்றவற்றைச் சார்ந்தே பத்தி பிரிக்கப்படுகிறது.

மையக்கருத்தின் துணைக்கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு பத்தியாக அமையும். இதனைத் தோற்ற நிலைப்பத்தி எனலாம். பல தோற்ற நிலைப் பத்திகளின் கூட்டாகவும் கருத்து நிலைப் பத்தி அமையலாம். மேலும், கருத்து நிலைப்பத்தி ஒரு மையக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பல வாக்கியங்களுடன் ஒரு தனிப்பத்தியாக அமையலாம். இது ஒரு தோற்ற நிலையிலான கருத்து நிலைப் பத்தி ஆகும்.

(எ.கா.) குடும்பச் சூழல், உணவு முறைகள், குறிப்பாக உணவில் உப்பு சேர்க்கும் அளவு ஆகியனவும் ஒரே குடும்பத்தில் பலருக்கு இரத்தக் கொதிப்பு நோய் உருவாகக் காரணமாக இருக்கலாம். ஒரே குடும்பத்தில் பலருக்கு இரத்தக் கொதிப்பு இருப்பதற்குப் பாரம்பரியம் என்னும் காரணத்தைவிட இந்த சுற்றுச் சார்பு முக்கிய அங்கம் வகிக்கின்றது. (டா. பே., ப. 49)

(எ.கா) ஈக்கள் மக்களுக்குத் தீங்கு விளைவிப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ளன. அவை நோய்களை வெகு வேகமாகப் பரப்புகின்றன. இவை உணவுப் பொருட்களில் மீது அமர்வதின் மூலமும் வியாதிக் கிருமிகளை ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரப்புகின்றன. ஆகவே, சுகாதார வழிகளைக் கடைபிடித்து ஈக்களை ஒழிக்கும் முறைகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஈக்களை ஒழிப்பதன் மூலம் நாம் பல வகையான நோய்களைப் பரவாமல் தடுக்க முடியும். (ப. ப. நோ. த. மு..ப . 11)

மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களில் இரண்டு வகைப் பத்திகள் காணப் படுகின்றன. முதல் எடுத்துக்காட்டில் வருவது ஒரு தோற்ற நிலைப் பத்தியால் அமைந்த கருத்து நிலைப்பத்தியாகும். இரண்டாவது எடுத்துக்காட்டில் வருவது மூன்று தோற்ற நிலைப் பத்திகள் சேர்ந்த கருத்து நிலைப்பத்தியாகும்.

கருத்துக்களை மொத்தமாகச் சேர்த்து ஒரு பத்தியில் எழுதுவதைவிடத் துணைக் கருத்துக்களைப் பிரித்துத் சிறு பத்திகளாக அமைப்பது படிப்பவருக்கு எளிதில் புரியும்வண்ணம் அமையும். பத்தியில் மையக்கருத்தை முதலில் கூறுவது நன்று. பொதுவாக மருத்துவ நூற்களில் மையக்கருத்தை முதலா வதாகக் கூறுவதையே கடைப்பிடிக்கிறார்கள். துணைக் கருத்துக்களை முதலில் கூறிவிட்டு மையக்கருத்தினை இறுதியில் கூறுவதுண்டு. இது படிப்பவரின் கவனத்தைக் குறைத்துவிடும்.

கருத்து மாறுபாடு இல்லாமல் ஒருங்கிணைந்து நிறைவு பெற்ற பத்தியைச் சீரான பத்தி எனலாம். இந்தப் பத்தியில் ஒரு மையக் கருத்து

இருக்க வேண்டும். ஏனைய கருத்துக்கள் இதனைச் சார்ந்தே அமையும். இது போன்று கருத்துக்கள் பத்தியில் கோவையாக அமையுமாயின் படிப்பவரின் கருத்துப் பரிமாற்றம் எளிதாக அமையும்.

4.3.3.0. தலைப்புப் பயன்பாடு

ஒரு நூலை ஒருவர் புரட்டிப் பார்க்கும்போது அதைப் படிப்பதற்கு ஈர்ப்பது அதில் காணப்படும் உட்தலைப்புக்களே எனலாம். தலைப்புக்கள் உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. எனவே, தலைப்புக்கள் சிறப்பாக அமையப் பெறல் வேண்டும். பொதுவாகத் தலைப்புக்கள் கீழ்வரும் முறைகளில் அமையப் பெறலாம்.

1) உட்பிரிவுகளை மட்டும் தலைப்பாகப் பயன்படுத்துதல்
2) கூறப்படும் கருத்துக்களுக்கேற்பத் தலைப்பை உருவாக்குதல்
3) வசீகரமான முறையில் தொடர்பில்லாமல் தலைப்புக்களை உருவாக்கல்
4) தலைப்புக்களை வெளி ஓரத்தில் சீராக எழுதல் ; நீளமாயின் மடக்கி எழுதல்

4.3.3.1. உட்பிரிவுகளை மட்டும் தலைப்பாகப் பயன்படுத்தல்

ஒரு தலைப்பின் கீழ்வரும் உட்பிரிவுகளை மட்டும் ஏதேனும் மாற்றமின்றி அப்படியே தலைப்பாகப் பயன்படுத்தி அதனை விளக்கிச் செல்லுதல் இதன் பாற்படும். பொதுவாக மருத்துவம் தொடர்பாக ஏதேனும் ஒரு நோயைப் பற்றிக் கூறும் போது நோயின் தன்மைகள் நோயின் வகைகள் போன்றவற்றை எந்தவித மாற்றமுமின்றி விளக்கிக் கூறும் முறை பின்பற்றப்படுகிறது. இவ்வாறு பொது மக்களுக்கு எழுதுவது சிறப்பாக அமையாது.

4.3.3.2. கூறப்படும் கருத்துக்களுக்கேற்பத் தலைப்பு உருவாக்கல்

இந்நிலையில் தலைப்பின் உட்பிரிவுகள் தலைப்பாகப் பயன்படுத்தப் படமாட்டா. கூறப்படும் கருத்துக்களுக்கு ஏற்பத் தலைப்புக்களை மாற்றி அமைப்பதாக இது அமையும். தலைப்பின் உட்பிரிவுகள் இருப்பின் அவை தொடர் செய்திகளாகவே (running matters) காணப்படும். இதனால் படிப்பவர்கள் தேவைப்படும் கருத்துக்களைக் குறிப்பாக அறிந்து படிக்க முடியும். இதுபோன்ற தலைப்புக்களை அமைப்பது பொதுமக்களுக்கென்று எழுதும் நூல்களுக்குச் சிறப்பாகப் பயனைத்தரும்.

(எ.கா.) உடம்புக்கு உதவாத உணவுகள்

இருதயம் எப்படி வேலை செய்கிறது (உற. அ. ப. 17)

4.3.3.3. வசீகரமான முறையில் தொடர்பில்லாமல் தலைப்புக்களை உருவாக்கல்

தலைப்பைப் படிப்பதால் மட்டும் உள்ளே வரும் செய்திகளைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் தலைப்பைப் படித்தால் உள்ளே என்ன சொல்லப் பட்டுள்ளது என்பதை அறியத்தூண்டும். இதுபோன்று தலைப்புக்களைக் கையாளுவது வாசகர்களைக் கவர்வதற்கு நல்ல வழியாக அமைகிறது.

புகையும் புற்று நோயும் பற்றிய நூல் ஒன்றில் கீழ்வரும் தலைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா.) இவள் ஒரு மோகினி

எது வேண்டும் சொல் மனமே

நூற்றுக்கு எண்பத்தைந்து

கண்ணைவிற்று சித்திரம் வாங்குவதா?

காசை மட்டும் சாம்பலாக்குகிறோம்

தற்கொலைக்கு தயாராவதா (பு. பு. நோ.)

4.3.3.4. தலைப்புக்களை வெளி ஓரத்தில் சீராக எழுதுதல், நீளமாயின் மடக்கி எழுதுதல்

தலைப்புக்கள் வெளியோரத்தில் அமையப் பெற வேண்டும். நடுப் பக்கத்திலோ, உட்பக்கத்திலோ அமைதல் கூடாது. தலைப்புக்கள் நீளமாக இருப்பினும் அதனை மடக்கி வெளி ஓரத்தில் எழுதுவதே சிறப்பாகும்.

(எ.கா.) விரைந்த வாழ்க்கை ஆயுளைக் குறைக்கிறது

விரைந்த

வாழ்க்கை

ஆயுளைக்

குறைக்கிறது !

இராணுவ வீரர்களுக்கு ஹார்ட் அட்டாக் !

இராணுவ

வீரர்களுக்கு

ஹார்ட் அட்டாக் !

4.3.4. எழுதும் முறை

'எழுதும் முறை' என்பது கருத்துக்களைப் படிப்பதற்குப் புரியும்

வண்ணம் அமைக்கும் முறையே ஆகும். இவ்வடிவமைப்பு இருநிலைகளில் அமைக்கப்படுகிறது.

1) கருத்துக்களுக்கேற்பச் சொற்களை வடிவமைத்தல்

2) முழு உரைக்கட்டுக்கும் அமைக்கப்படும் வடிவமைப்பு

4.3.4.1. கருத்துக்களுக்கேற்பச் சொற்களை வடிவமைத்தல்

இம்முறை வடிவமைப்பு, சொற்களைக் கூறப்படும் கருத்துக் களுக்கேற்பப் பிரித்து எழுதுவதாகும். அவற்றை இரண்டு வழிகளில் எழுதலாம். அவை :

1) இணைத் தொடரமைப்பு (Parallelism) முறையைக் கையாளுதல்

2) அடுக்கி எழுதுதல் (Listing)

4.3.4.1.1. இணைத் தொடரமைப்பு

இது இலக்கண வரையறைக்குட்பட்ட அமைப்பாகும். இவ்வமைப்பில் சொற்கள் இணையாகச் சீர்மைப்படுத்தி அமைக்கப்படுகின்றன. சான்றாகப் பெயர்ச்சொல்லை மற்றொரு பெயர்ச்சொல்லுக்கு இணையாக எழுதலாம். அதேபோன்று பெயரடை, எச்சத்தொடர் போன்றவையும் இந்த அமைப்பிற்குட் பட்டுவரும். இது போன்ற அமைப்பினால் கருத்துக்களை மேலும் தெளிவுபடக் கூற முடியும்.

(எ.கா.) மனித உடலில் தோன்றும் நோய்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று - தொற்று நோய்கள்

மற்றொன்று - உடற்கூற்று நோய்கள் (நீ. ப. 9)

4.3.4.1.2. வரிசைப்படுத்தி எழுதுதல்

முக்கிய கருத்துக்களைத் தொடர்ச்சியாக எழுதாமல் படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக நேர்வரிசையில் எழுதுவதே வரிசைப்படுத்தி எழுதுதல் எனப்படும். இந்த முறையில் படிப்பவர் முக்கியக் கருத்துக்களை நினைவில் வைத்துக் கொள்ளும் நிலை உள்ளது.

(எ கா.) நீரிழிவு நோயின் அடையாளங்கள்

1) அடிக்கடி தாகம் எடுக்கும். வாய் உலரும்.

2) அடிக்கடி பசி எடுக்கும். பசி தாங்க முடியாத அளவுக்கு இருக்கும்.

3) அடிக்கடி சிறுநீர் கழியும்.

4) கழிக்கப்பட்ட சிறுநீரில் எறும்பு மொய்க்கும்.

5) சுறுசுறுப்பாக இருக்க முடியாது.

6) கண்பார்வை மங்கும்

7) பற்கள் ஆடும். ஈறு தேயும்.

8) முகத்தில் தூக்க கலக்கம் இருக்கும்.

9) எப்போதும் களைப்பு இருந்து கொண்டே இருக்கும்.

10) எந்த வேலையும் செய்து முடிக்கத் தோன்றாது.

(நீ. ப. 1)

4.3.4.2. முழு உரைக்கட்டுக்கும் பொதுவாக அமைக்கப்பெறும் வடிவமைப்பு

பொதுவாக ஆராய்ச்சியாளர்களுக்கென்று நூல் எழுதுகையில் உரைக் கட்டு ஒருவிதமாக அமைகிறது. மாணவர்களுக்கென்று எழுதும்போது இன்னொரு வகை உரைக்கட்டு அமைகிறது. பொதுமக்களுக்காக எழுது கையில் உரைக்கட்டு மேலும் பல வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. அந்த வேறுபாடுகளின் வகைகளைக் கீழ்வருவனவாகப் பிரிக்கலாம். அவை,

1) கட்டுரை வடிவில் எழுதுதல்

2) கடிதம் வடிவில் எழுதுதல்

3) சொற்பொழிவு வடிவில் எழுதுதல்

4) கவிதை வடிவில் எழுதுதல்

5) கேள்வி - பதில் வடிவில் எழுதுதல்

4.3.4.2.1. கட்டுரை வடிவில் எழுதுதல்

பொதுவாக ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து அது தொடர்பான உண்மைகளை அப்படியே எழுதுவதே இதன் சிறப்பாகும். இந்த உரைக்கட்டின் வெளித்தோற்றத்தில் எந்த மாறுபாடுகளும் கிடையாது. உதாரணமாக இதழ்களில் வெளியாகின்றவை கட்டுரை வடிவத்தைச் சார்ந்தவையே ஆகும்.

4.3.4.2.2. கடிதம் வடிவில் எழுதுதல்

இது பொதுமக்களுக்குத் தேவைப்படும் முக்கியக் கருத்துக்களைக் கடிதம் மூலம் தொடர்பு கொள்வது போன்ற முறையில் எழுதுவதாகும். இந்த முறையில் கருத்துக்களை ஒரே கடிதத்தில் இடம்பெறும் வகையில் அடுக்கிக் கொள்ள வேண்டும். இது போன்ற முறை வீட்டில் தங்கியிருக்கும் பெண்கள் விரும்பிப் படிக்கும் வகையில் அமையும்.

சான்றாகக் குழந்தை வளர்ப்புத் தொடர்பாக 'ஒரு டாக்டரின்

கடிதங்கள்' என்று ஓர் ஆசிரியர் பன்னிரண்டு கடிதங்கள் எழுதியுள்ளார். கடிதம் ஒவ்வொன்றும் குழந்தைகட்கு வரும் ஒரு நோயுடன் தொடர்புடையதாக அமைகிறது. இனிய சகோதரிக்கு என்று ஒவ்வொரு கடிதமும் தொடங்குகிறது. சகோதரியின் மன உணர்வுகளுடன் தொடர்பு கொள்வது போலவே காணப் படுகின்ற இந்தக் கடிதம் சகோதரிகளை விழிப்புணர்வுடன் இக்கருத்துக்களை அணுகுதற்கான ஆவலை ஊட்டுகிறது. கடிதத்தின் முடிவும் குடும்பத்தோடு தொடர்பு கொள்வது போன்றே காணப்படுகிறது. இது தொடர்பு நிலை மிகுந்து நெருக்கம் கொண்டதாக அமைகிறது.

4.3.4.2.3. சொற்பொழிவு வடிவில் எழுதுதல்

பொதுமக்களுக்கு மருத்துவம் தொடர்பாகத் தேவைப்படும் அறிவுரைகளைச் சொற்பொழிவு முறையில் தொடர்பு கொள்ளும் விதத்தில் அமையப் பெறுவதாக இவ்வகை உரைக்கட்டு அமையும். கருத்துக்கள் மேடைப் பேச்சில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றனவோ அதுபோலவே இங்கும் எழுதப் படுகின்றன. மேடைப்பேச்சை விரும்பும் ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் படிப்பதற்குரிய ஆர்வத்தை இது அதிகரிக்கும்.

சர்க்கரை நோய் தொடர்பாக 'சர்க்கரை நோயால் சங்கடமா?' என்ற தலைப்பில் 16 சொற்பொழிவுகளை ஓர் ஆசிரியர் எழுதியுள்ளார். சொற் பொழிவாக அமைந்தாலும் ஐயத்திற்குரிய கேள்விகளையும் அவ்வப்போது தெளிவுபடுத்தும் விதத்தில் இது காணப்படுகிறது.

4.3.4.2.4. கவிதை வடிவில் எழுதுதல்

கவிதை வடிவமாகக் கருத்துக்களை வெளிப்படுத்துவதும் பெரும் பாலான மக்கள் ரசித்துப் படிக்கும் வகையில் அமைகிறது. கவிதை வடிவம் மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் அமைய வேண்டும். எளிமையாக அமையாவிடில் புரிதிறன் இராமல் பயனற்றுப் போய்விடும்.

(எ.கா) கடமை புரிவதே - எங்கள்
உடமை என்போம் !
இன்பத்தின் அரும்பன்றோ குழந்தை - பிணித்
துன்பம் அரும்பிட விடுவதோ?
பொன்னென்று புசித்தால் போதுமா? - நோய்
புன்மையினின்று காத்திடல் வேண்டுமே ! (நீ., ப 84)

4.3.4.2.5. கேள்வி பதில் வடிவில் எழுதுதல்

உரையாடல் வடிவில் கேள்வியும் – பதிலுமாக உரைக்கட்டை அமைப்பது மற்றோர் சிறப்பாகும். இதைச் சமுகத்தில் ஒரு கூட்டத்தினர் விரும்பி படிக்க

வாய்ப்புண்டு. உரைக்கட்டின் வடிவங்கள் மாறும்போது படிக்கும் ஆர்வம் அதிகரிக்கும்.

(எ கா.)

பானுமதி : பால் அதிகம் ஊற நான் என்ன செய்ய வேண்டும்? ஏதாவது சிறப்பு உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமா?

பாட்டி : தேவையான சரிவிகித உணவு உட்கொண்டால் போதுமானது. மார்பகம் இறைக்க இறைக்க ஊறும் கிணற்றைப் போன்றதே குழந்தை பசியுடன் பாலுறுஞ்சுவதே சிறந்த தூண்டுகோலாகும் குழந்தையைப் பற்றி நினைத்தாலோ, குழந்தையின் குரல் கேட்டாலோ, தொட்டவுடனோ சில தாய்மார்களுக்குப் பால் வடியும் இதைப்பற்றி வெட்கமோ அருவருப்போ அடையத்தேவையில்லை. (ம.தா.ஒ.சொ , ப 64)

கலைச்சொற்கள்

4.3.5. உரைக்கட்டு தங்கு தடையின்றி அமைவதற்குக் கலைச்சொற்களும் முக்கியப் பங்காற்றுகின்றன. பொதுமக்களுக்கென்று எழுதப்பெறும் நூல்களில் நன்கு அறிமுகமான கலைச் சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். மேல்நாட்டு மருத்துவ முறையைப் பின்பற்றுவதால் கலைச்சொற்களையும் அதற்கேற்றாற்போல் மொழிப் பயன்பாட்டின் தேவைக்கேற்பப் பின்பற்ற வேண்டியுள்ளது. இதனால் பல சொற்கள் திணிக்கப்படுகின்றன. அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. அந்தப் புதிய கலைச்சொற்களை அப்படியே பயன்படுத்தினால் உரைக்கட்டு தெளிவின்றிப் போய்விடும். சீர்மையும் பெறாது. இதனால் சில வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது சிறப்பாக அமையும்.

1 வழக்குச் சொற்களுக்கு முதன்மை வழங்கல்

2. மொழி பெயர்த்தல்

3. சொல் உருவாக்கம்

4. மொழியாக்கம்

5 விளக்க நிலையில் கொடுத்தல்

6 ஒலிபெயர்ப்பு முறையைக் கையாளல்

4.3.5.1. வழக்குச் சொற்களுக்கு முதன்மை வழங்கல்

வழக்குச் சொற்கள் எந்த நிலையில் அமைந்திருப்பினும் அதனைப் புறக் கணித்தல் கூடாது. சான்றாக, வழக்குச் சொற்களாகத் தமிழ்ச் சொற்கள் , ஒலிப்பெயர்க்கப்பட்ட சொற்கள், தமிழாக்கம் செய்தவை ஆகியன காணப் படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் முதன்மை அளித்தல் வேண்டும். இந்தச் சொற்கள் சாதாரண பொதுமக்களிடையே நிலவி வருவதால் உடனடியாகப் புரிந்து கொள்ளும் வகையில் அமையும். புதிய தமிழ்ச் சொற்கள் கிடைக்கும் போது கடன் சொற்களைத் தவிர்க்கலாம்.

(எ.கா.) குளுக்கோஸ்	-	Glucose
டைபாய்ட்	-	Typhoid
மலேரியா	-	Malaria
இன்சுலின்	-	Insulin

4.3.5.2. மொழி பெயர்த்தல்

முதல் முறையில் சொற்கள் சரியாக அமையாவிடில் இம்முறையைக் கடைப்பிடிக்கலாம். பிறமொழியில் பயன்படுத்தும் சொற்களின் கருத்திற் கிணங்கச் சொந்த மொழியில் மொழிபெயர்ப்பு செய்து கருத்தை மாற்றிக் கொள்வதாகும். இதுபோன்ற அமைப்பில் பெருவாரியான சொற்களை மாற்றிக் கொள்ளலாம். இதனால் மொழிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

(எ கா) பிறழ்ச்சி	-	Aberration
சீழெதிரி	-	Antiseptic
ஏற்பி	-	Receptor

4.3.5.3. சொல் உருவாக்கம்

மொழிபெயர்ப்பில் பிறமொழியாளர் கருதும் கருத்திற்கேற்றாற் போல் மொழி மாற்றம் செய்கிறோம். இது நாம் பயன்படுத்தும் தோற்றத்திற்கேற்பக் கருத்திற்கிணங்கச் சொற்களை உருவாக்கிக் கொள்வதாகும். இது ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊன்றுகோலாக அமையும். சொல்வளம் பெருகவும் வாய்ப்புண்டு.

(எ.கா.) பிதுக்கம்	-	Hernia
நீரிழிவு	-	Diabetes
மாரடைப்பு	-	Heart Attack

4.3.5.4. மொழியாக்கம்

சில சொற்களை மேற்கூறிய வழிமுறைகளில் அமைக்க முடியாது போய்

விடும். இப்படிப்பட்ட நிலைகளில் மொழியின் தன்மைக்கேற்ப மொழியாக்கம் செய்து கொள்வது சிறந்தது. சான்றாக, ஆங்கிலத்தில் 'புரோட்டீன்' (Protein) என்ற சொல் 'புரோட்டீன்' என்றும் 'புரதம்' என்றும் பயன் படுத்தப்படுகிறது. 'புரோட்டீன்' என்று பயன்படுத்துவது ஒலிபெயர்க்கப்பட்ட முறையில் அமைந்ததாகும். ஆனால், 'புரதம்' என்றழைப்பது தமிழாக்கம் செய்யப்பட்ட சொல்லாகும். 'புரதம்' என்ற சொல் தமிழ்ச்சொல் போன்றே பயன் பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்று சொற்களை அமைத்துக் கொள்வது மொழி வளர்ச்சிக்குப் பயன்தரும் செயலாகும்.

(எ.கா.) கொலஸ்த்ரியம்	-	Cholestral
லிப்பிடு	-	Lipids
கீலம்	-	Chyle

4.3.5.5. விளக்க நிலையில் கொடுத்தல்

பொதுவாகப் பொதுமக்களுக்கான நூல் எழுதும்போது கடினமான கருத்திற்குரிய சொற்களைத் தவிர்த்தல் வேண்டும். சான்றாக, 'Mild Hypoglycemia' என்ற சொல்லுக்கு 'ஆரம்பதாழ் சர்க்கரை நிலை' என்று ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். இதனைச் சர்க்கரையின் அளவு குறைவாகக் காணப்படும் நோயின் ஆரம்பநிலை என்று பயன்படுத்துவது சிறப்பாக அமையும். அதுபோலவே 'ஏடோபி' என்று கூறுவதைத் தவிர்த்து 'ஒவ்வாமைக் கான மாற்றங்களை உடனுக்குடன் வெளிப்படுத்துபவர்' மற்றும் 'ஒவ்வாமைக் கான மாற்றங்களை வெளிப்படுத்தாதவர்' என்று வழங்கலாம். அடைப்புக் குறிகளில் ஆங்கிலச் சொற்களையோ ஒலி பெயர்க்கப்பட்ட சொற்களையோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

(எ.கா.) முடக்குக் காய்ச்சல்	-	Dengue
நிறக்கோல்	-	Chromosome
குருத்தெலும்பு	-	Cartilage

4.3.5.6. ஒலிபெயர்ப்பு முறை

கடைசியாக ஒலிபெயர்ப்பு முறையைக் கையாண்டு கொள்ளலாம். மிகவும் தேவையான சொற்களுக்கு மட்டுமே இம்முறையைப் பயன்படுத்த வேண்டும். இதனை அதிகமாகக் கடைப்பிடித்தால் தமிழ்ச் சொற்கள் பெருகா. மொழி வளர்ச்சியும் ஏற்படாது.

(எ.கா.) எடீமா	-	Edema
கொயினா	-	Quinine
ரேபீஸ்	-	Rabies
டெட்டனஸ்	-	Tetanus

உள்ளடக்கம்

4.3.6. உள்ளடக்கம் என்பது ஓர் உரைக்கட்டில் காணும் பொருள் பற்றியதாகும். பொதுமக்களுக்கான நூல் எழுதும்போது நூல் தலைப்பிற்கேற்ப மட்டும் கருத்துக்களை அமைத்தல் கூடாது. வெறும் கருத்துக்களின் கோவையாக அமையின் சாதாரண மக்கள் படிக்கும் வகையில் ஆர்வம் ஊட்டுவதாக உள்ளடக்கம் அமையாது. இதனால் நடப்புக் காரியங்கள், கதைகள் போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். அதனை மருத்துவக் கருத்துக்களோடு தொடர்புபடுத்த வேண்டும். எனவே, பொது மக்களுக்கான நூல் எழுதும்பொழுது உள்ளடக்கம் குறிப்பிட்ட கருத்துக்களை மட்டுமே கொண்டிராமல் புதுக்கருத்துக்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(எ.கா.) இளைஞர் ஒருவர். அடிக்கடி சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். சிகரெட்டை விட்டுவிட வழிகள் கேட்டு என்னிடம் வந்தார். வழிகளைச் சொன்னேன் நான் சொன்ன வழிகளை ஏற்று அவர் சிகரெட்டை உடனே விட்டுவிட்டார். ஆனால் சில நாட்கள் கழித்து மீண்டும் அந்தப் பழக்கம் அவரிடம் வந்துவிட்டது. மீண்டும் என்னிடம் வந்தார். சிகரெட் பிடிக்கும் நண்பர்களுடன் பழகுவதைக் கொஞ்சம் நாட்களுக்கு விட்டுவிடும்படிச் சொன்னேன். சிகரெட் பிடிப்பவர்களுடன் அவர் பேசுவதைக்கூட விட்டுவிட்டார் இதனால் அவரால் சிகரெட்டை மீண்டும் விட்டுவிட முடிந்தது. எந்த வழியைக் கையாண்டும் சிகரெட்டை விடமுடியாத ஒருவர் கல்யாணம் செய்து கொண்டார். கல்யாணம் செய்து கொண்டதும் சிகரெட் பிடிப்பதை அடியோடு நிறுத்தி விட்டார். எப்படி? அவர் சிகரெட் பிடிப்பதை அவருடைய புதுமனைவி விரும்பவில்லை. சிகரெட் பிடித்தால் அவர் பக்கத்தில் அவள் வரமுடியாதென்று சொல்லிவிட்டாள் அழகி அவள். அவள் தன் பக்கத்தில் வராவிட்டால் வாழ்க்கை வெறுத்துப் போகாதா? அதனால் அவர், தான் விரும்பும் போதெல்லாம் தன் மனைவி தன் பக்கத்திலே வருவதற்காக அவர் சிகரெட்டை விட்டுவிட்டார். சிகரெட்டா? கிஸ்ஸா? கிஸ்தான் ! (ஹா. அ. ப. 105)

புரிதிறன்

4.3.7. ஆசிரியர் அமைத்துள்ள 'உரைக்கட்டு' தங்குதடையின்றி மக்கள் மனத்தில் வாங்கிக் கொள்ளும் தன்மையே புரிதிறனாகும். இத்தன்மை சிறப்புற

அமைய மேற்கூறிய வழிவகைகள் யாவும் சிறப்புற உதவும் என்பது தெளிவாகும். மேலும், மொழிக்கூறுகள், சொற்கள், கலைச்சொற்கள் போன்றவற்றைத் திறம்பட கையாளும் வகையில் புரிதிறன் மேம்படும். கேட்போர் அறிந்திருக்கும் சொற்களின் தன்மைக்கேற்ப உரைக்கட்டு அமையப் பெற வேண்டும்.

கருத்து தெளிவு பெற்றிருக்க வேண்டும். கருத்துக்கள் கோவையாக அமையப் பெற வேண்டும். சுற்றுச் சூழலுக்கு முதன்மை அளிக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போலக் கருத்துக்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

மேலும் அமையப்பெறும் உரைக்கட்டைத் தொடர்புள்ள மக்கள் பயன் படுத்தும்படிச் செய்து அவர்கள் புரிதிறன் தன்மைக்கேற்ப அமைத்துக் கொள்வது 'புரிதிறனை' சிறப்புற அமையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

உத்திகள்

4.3.8. 'உத்திகள்' என்பது நூலாசிரியர் தமது உரைக்கட்டு சிறப்புற்றுத் தெளிவாக அமையக் கையாளும் வழிவகைகளேயாகும். உத்திகள் நூலில் சிறப்பாக அமையுமாயின் நூலில் அமையப்பெறும் உரைக்கட்டும் படிப்பதற்குச் சுமையாக அமையாது. மேலும் கருத்துக்களை மனத்தில் வாங்கிக் கொள்ள ஓர் உந்துகோலாக அமையும். எனவே, ஓர் உரைக்கட்டு சிறப்பாக அமைய உத்திகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. சான்றாக, இவ்வகை உத்திகள் சொற்களைப் பயன்படுத்துவது முதல், உரைக்கட்டு முழுமை பெறுவது வரை யிலும் பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமாக அமைய வேண்டிய சில உத்தி கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1) சொற்கள், வாக்கியங்கள், பத்திகள் போன்றவற்றைத் தெளிவுபட அமைத்தல் மற்றும் அதற்காகக் கையாளும் வழிமுறைகள், இணைத் தொடரமைப்பு, வரிசைப்படுத்தி எழுதல், குறைவான வரிகள் அமையப் பெறும்படிச் செய்தல் போன்றவையாகும்.

2) பத்தி அமைப்பைப் பொறுத்தவரையில் சிறிய பத்திகளைக் கையாளுதல், கருத்துக்களைச் சிறியனவாகப் பிரித்துக் கோவையாக்கல் போன்றவையாகும்.

3) நூலாசிரியர் புதிதாக மருத்துவ அறிவியல் கருத்துக்களைக் கூறும் போது அவற்றிற்கு மட்டும் சிறப்பு அளித்தல் கூடாது. அதோடு தொடர்புள்ள மக்களால் அறியப்பட்ட முந்தைய கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தெரிந்த கருத்துக்களை முதலில் கூறிப் பின்பு தெரியாத கருத்துக் களைக் கூறுவது நல்ல உத்தியாகும். புதிய கருத்துக்கள் நேராகத் திணிக்கப் பட்டால் புரிதிறனை வெகுவாய்ப் பாதிக்கும்.

4) மக்களின் புரிதிறனை அதிகரிக்கப் பலவகை வடிவங்களை உரைக் கட்டிற்குக்கொடுத்தல், பொதுவாக நாடகம், உரையாடல், கடிதம், சொற் பொழிவு, கவிதை போன்ற வடிவங்களைக் கொடுத்து உரைக்கட்டின் புரிதிறனை அதிகரித்தல்.

இயல் ஐந்து

முடிவுரை

5. 'பொது மக்களுக்கான மருத்துவ நூல்கள் – ஓர் ஆய்வு' என்னும் தலைப்பிலான இவ்வாய்வு முடிவு நிலையில் சில முக்கியக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றது.

5.1. வரலாற்று ஆய்வாக நோக்கும்போது மேனாட்டாரின் வருகை நவீன மருத்துவக் கருத்துக்களின் அறிமுகத்திற்குக் காரணமாகி இருப்பினும் பல கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருவதற்கு இதழ்கள் ஆற்றிய பங்கும் சிறப்பானதென்பது உணர முடிகிறது. இவ்வகையில் செந்தமிழ், தமிழர் நேசன், கலைக் கதிர், விஞ்ஞானச் சுடர் போன்றவை குறிப்பிடத்தக்க இதழ்களாகும். செயலாக்க நிலையில் தமிழாக்க முயற்சி தொடங்குவதற்கு முக்கியக் காரணம் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டிருந்த மருத்துவக் கல்லூரி போன்ற அமைப்பு என்பதும் அறியத் தக்கதாகும். அங்குத் தமிழில் மருத்துவம் பயிற்று விக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்தே மருத்துவப் புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. ஆனால் காலப்போக்கில் அம்முயற்சிகள் நின்றுவிடவே தமிழாக்க முயற்சியும் பின்தங்கியது. தமிழ்நாட்டில் அதுபோன்ற முயற்சியினைத் தொடக்கப் போதுமான ஆதரவும் இல்லை. அன்றைய முயற்சி தொடர்ந்து செயல்பட்டிருக்குமாயின், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் சொல்லாக்கம் செயலாக்கம் பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

5.2. இரண்டாவது, உரைக்கட்டு குறித்த ஆய்வைக் கண்ணோக்கும் போது தமிழ்வாணனின் 'உரைக்கட்டு அமைப்பு' பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் என்னும் வகையில் தனித்துவம் பெற்று முதலிடம் பெறுகின்றது. இவரது உரைக்கட்டில் கடைப்பிடிக்கப்படும் கூறின் இறுதி வரையிலும் ஒன்றுபோலச் சீராக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சான்றாகப் பத்தி அமைப்பு – கருத்தமைப்பு, எழுதும் முறை ஆகியன தொடக்கம் முதல் இறுதி வரையிலும் சீராகக் காணப்படுகின்றன. அதே அமைப்பு ஏனைய அவரது பிற நூல்களிலும் பிரதிபலிப்பது குறிப்பிடத்தக்கதாகும். அடுத்ததாக, இராஜாவின் உரைக்கட்டு அமைப்பைச் சிறப்பாகக் கருதலாம். சீர்மை குறைவுபட அமைந்திருப்பினும் உத்திகள் பல கையாளப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வகையில் சாதாரண நடையிலும் கவிதை நடையைக் குளறுபடியின்றிப் புகுத்தியிருப்பது நன்றாகவே அமைந்துள்ளது.

5.3. மேம்படுத்தும் வழிமுறைகளைக் கண்ணோக்கும்போது உரைக் கட்டு கீழ்வரும் பண்புகளைப் பெறுமாயின் புரிதிறனை அதிகரிக்க வாய்ப்புண்டு என்று அறியப்படுகிறது.

1) தெளிவு, எளிமை, நேர்நடை, சுருக்கம், துல்லியம், படிப்பதற்கினிமை போன்றவை கொண்ட மொழியே சிறந்ததாகும். இதுபோன்றே சொற்களும் அமைய வேண்டும்.

2) பல தோற்ற நிலைப் பத்திகள் கொண்ட கருத்து நிலைப் பத்தி பொது மக்களுக்கான நூல் எழுதலில் சிறப்பாக அமையும். மையக் கருத்தை முதலில் கூறிச் சார்புக் கருத்துக்களைத் தோற்ற நிலைப் பத்திகளாகக் கூறல் வேண்டும்.

3) கருத்துக்களுக்கேற்பத் தலைப்பு உருவாக்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கான நூல் எழுதலில் கவர்ச்சியான தலைப்புகளைப் பயன்படுத்துவது நல்ல அம்சமாக அமையும்.

4) வரிசைப்படுத்தி எழுதுதல் மற்றும் இணைத்தொடர் அமைப்பு முறையைக் கையாளுதல் நன்று.

5) வழக்கத்திலுள்ள தமிழ்ச் சொற்களுக்கு முதன்மை வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் இல்லையெனில் வழக்கத்திலுள்ள பிற சொற்களைப் பயன்படுத்தல் நன்று. அவ்வாறும் அமையாவிடில் சொற்களைத் தமிழாக்கம் செய்து பயன்படுத்தல் நன்று. கலைச்சொற்கள் புரியாத நிலையில் அதனைப் பயன்படுத்ாது விளக்கமாகக் கூறுதல் வேண்டும்.

6) உள்ளடக்கம் தலைப்பை மட்டும் சார்ந்ததாக அமைதல் கூடாது. பல நடப்புக் காரியங்களோடு தொடர்புபடுத்தியதாக அமைய வேண்டும்.

7) தங்கு தடையின்றி நூலினைத் தெளிவாகப் படிப்பதற்கேதுவாக நூலின் புரிந்துகொள்ளும் திறனை அமைத்துக் கொள்ள வேண்டும்.

8) தெரிந்த கருத்துக்களை முதலில் கூறியபின் அதோடு தொடர்புபடுத்திப் புதிய கருத்துக்களைக் கூறுதல் வேண்டும்.

9) நூல் எழுதும்போது ஆசிரியர் எவ்வகை மக்களுக்கு எழுதுகிறார் என்பது நினைவில் கொள்ள வேண்டும்.

துணை நூற்பட்டியல்

இராசமாணிக்கம், சி.	1982	எலும்பு பாதுகாப்பு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
இராஜராஜேஸ்வரி, ஞா.	1990	மருத்துவரின் தாய்க்கு ஒரு சொல் கீர்த்தி வெளியீடு, தஞ்சாவூர்.
கதிரேசன், அ.	1982	மாரடைப்பு நோய் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
கதிரேசன், அ.	1968	க்ஷய நோயும் தடுப்பு முறைகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
கருணாகரன், கி. சண்முகம், சி. பதிப்பர் சிவசண்முகம், கி.	1989	அறிவியல் உருவாக்கத் தமிழ் மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
கிருட்டிணன், க.ரா.1981		சேய் நலம் சரஸ்வதி புத்தகமனை, கோவை.
சண்முகம், செ.	1981	அறிவியல் உரைக்கோவை சில குறிப்புகள் அறிவியல் உருவாக்கத் தமிழ் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
சாமி, வி. எஸ்.	1981	புகையும் புற்றுநோயும் காயத்ரி பப்ளிகேஷன்ஸ், சென்னை.
சிவசண்முகம், சி. தயாளன், வே.	1989	மொழிபெயர்ப்பியல் அன்னம், சிவகங்கை.
சுந்தரம், இராம.	1986	பொதுமக்களுக்கான அறிவியல் நூல் எழுதுதல் — சில குறிப்புக்கள்

		அறிவியல் தமிழ்க் கோவை பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
சுந்தரம், இராம.	1989	அறிவியல் தமிழ் வெளியீடுகள் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
செல்லப்பன், இராதா.	1985	*கலைச் சொல்லாக்கம்* சென்னை.
தமிழ்வாணன்	1975	ஹார்ட் அட்டாக் மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
தமிழ்வாணன்	1977	நீரிழிவு மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
நம்பி, அ.	1983	நோயற்ற வாழ்வுக்கு தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
பத்மநாபன், டி பதிப்பர்	1989	அறிவியல் தமிழ் கலைக்கதிர் வெளியீடு, கோவை.
ராஜன், கே.எஸ்.	1982	தொழில் சார்பு நுரையீரல் நோய்கள் புகழ் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
ராஜா, எஸ்.	1986	சர்க்கரை நோயால் சங்கடமா? நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
ராஜா, எஸ்.	1987	ஒரு டாக்டரின் கடிதங்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
ரெக்ஸ், பி.எம்.	1984	டாக்டர் பேசுகிறார் வானதி பதிப்பகம், சென்னை.
வெங்கடசாமி, ஜி.	1977	பூச்சிகளால் பரவும் நோய்களும் தடுக்கும் முறைகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
ஜெயநேசன்	1983	அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் யாழிபானுக் கல்லூரி,பட்டுக்கோட்டை

ஜோசப், நே.	1983	**கலைச்சொல் பட்டியல் (மருத்துவம்)** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
ஸெலேனின், வி.	1981	**இதயத்தை வலுவாக்கு** மிர் பதிப்பகம், மாஸ்கோ.
Huckin, Thomas Ossen, Leslie,	985	**English for Science and Technology** McGraw-Hill Book Company, Singapore.
Trimble, Louis,	1985	**English for Science and Technology** Cambridge University Press, London
Widdowson, H.G.	1979	**Exploration in Applied Linguistics** Oxford University Press, London

இணைப்பு 1

மருத்துவ நூல்கள் வளர்ச்சிப் போக்குகள்

1865	ஜகநாதம் நாயுடு, எம்.	சரீர வினா விடை, சென்னை.
1867	டனவதர், ய (மொ–ர்)	இரண வைத்தியம், யாழ்ப்பாணம்
1872	ஊபர்	வைத்தியாகரம், நாகர்கோவில்
1872	சப்மன்னெல், வி (மொ–ர்)	மனுஷ அங்காகாதிபாதம், யாழ்ப்பாணம்
1874	ஜெயராம்பிள்ளை (மொ–ர்)	மருத்துவ சாஸ்திர சுருக்கம், வேப்பேரி, சென்னை.
1875	கிறீன், சாமுவேல், பி	வைத்தியம், மாணிப்பாய் அச்சுக்கூடம், இலங்கை
1900	முனிசாமி முதலியார்	மானிடரகசியமென்னும் சரீர சாஸ்திரம், சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை.
1904	வெங்கடரமணஐயர், எஸ்.எஸ்.	தேகதத்துவ சாஸ்திரம், சென்னை.
1090	ஜகநாதம் நாயுடு, எம்.	இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம், ஜெகநாதன் & ஸன்ஸ், சென்னை.
1911	கிருஷ்ணய்யங்கார்,என்.ஆர்.	பிளேக் நோயைப் பற்றிய வரலாறு, நாமக்கல்
1912	அப்பாசாமி, மிலஸ், பால.	ஜீரணம், ரத்தவோட்டம், நேஷனல் இந்தியன் அஸோசியேஷன், சென்னை.
1912	ஈஸ்வரம்பிள்ளை, பி.எஸ்.	தமிழ் மெட்டீரியா மெடிக்கா, திருநெல்வேலி
1915	சீதாராமய்யா, கே.	தமிழ் சரீர சாஸ்திரம், சென்னை.

1918	சொக்கலிங்கம்பிள்ளை, ஏ. & வையாபுரி முதலியார்,அ.மு.	கொசுக்களும் மலேரியா சுரமும், சென்னை.
1920	ராமராவ், யூ	ஆரோக்கியமும் அசௌக்கியமும், யூ. ராமாராவ், சென்னை.
1924	ஸெல்மன், ஏ.சி.	ஆரோக்கியமும் நீடித்த ஆயுசும், புனே.
1926	சிவராமலிங்கம்பிள்ளை, பி.ஸ்	சுகாதார சம்பந்தமான ஏழு கேள்விகளும் அவற்றிற்கான விடைகளும், திருச்செங்கோடு.
1926	சிதம்பரநாத முதலியார், வி (மொ – ர்)	இந்திய நர்ஸ்களுக்கான பாட புஸ்தகம், சென்னை.
1926	தாமோதரம்பிள்ளை, ஏ.ஆர்	சுகவழி, விழுப்புரம்
1927	சுப்பாராவ், ஜி.வி.	நீராகாரத் தெளிவு நீரின் ரகசியம், சோமா சன்ஸ் லிமிடட், சென்னை.
1927	இராஜா, கே. ஏ.	கண்ணோய், கிறிஸிடியன் லிட்டரேச்சர்சொசைட்டி சென்னை.
1927	ரத்தினம் பிள்ளை, ஜி.	முதலுதவி – வீட்டு மருத்துவம், ஜி. குமாரசாமி நாயுடு & சன்ஸ் சென்னை.
1927–28	வேலாயுதம்பிள்ளை, சாமி.	உடல் இயலும் உடல் நிலவழியும், சென்னை.
1928	சிவராமலிங்கம்பிள்ளை, பி.எஸ்.	சுகவழி, கிறிஸ்டியன் லிட்டரச்சர் சொசைட்டி சென்னை.
1928	சுகாதாரக்கமிட்டி	தாய்மார்களின் சம்ரக்ஷணையும் சிசுக்களின் பராமரிப்பும், திருச்செங்கோடு.

1929	இராஜா, கே.ஏ.	ஈ என்னும் கொலைகாரன், கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொசைட்டி சென்னை.
1929	கஸ்தூரிரங்க அய்யங்கார், எஸ்.	கண்வலி, கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொசைட்டி சென்னை.
1929	இராஜா, கே. ஏ.	நவீன நலவியல் நூல், பி.என். சிதம்பர முதலி & பிரதர்ஸ் மதுரை.
1933	முருகேச முதலியார், க.ச.	நஞ்சுநூல், கவர்ன்மெண்ட் பிரஸ் சென்னை.
1936–37	திரவியம், ஏ	ஹோமியோ குடும்ப வைத்தியம், பாளையங்கோட்டை.
1942	ராமமூர்த்தி. வி	ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா, சென்னை.
1947	தூரன். பெ	குழந்தை உள்ளம், கலைமகள் காரியாலயம் சென்னை.
1947	ருக்மணி	உங்கள் குழந்தை, புத்தக நிலையம், ராயவரம் புதுக்கோட்டை.
1948	சுந்தரம்	ஆரோக்கிய உணவு, தியோகா பப்ளிகேஷிங் ஹவுஸ் பெங்களூர்.
1949	ராஜன், தி.சே.சௌ	வீட்டு வைத்தியர், கலைமகள் காரியாலயம் சென்னை.
1949	சின்னத்தம்பி, அ	அயனாந்த தேசநோய்கள், யாழ்ப்பாணம்.
1950	இராசேசுவரி, ஈ.த.	குழலி உள்ளம், சிந்தாதிரிப்பேட்டைஉயர்நிலைப்பள்ளி, சென்னை.

1951	சோமசுந்தரம், ஒ & ஜெயராமகிருட்டிணன், டி	மன நோயும் இன்றைய மருத்துவமும், என்.சி.பி.எச். சென்னை.
1953	திரிபுர சுந்தரி, எஸ்.	குழந்தை வைத்தியம், இன்ப நிலையம் சென்னை.
1956	இராமசுவாமி, எஸ்.எஸ்.	அற்புத மருந்துகள், ஸ்டார் பிரசுரம் சென்னை.
1957	இராமசாமி, எஸ்.எஸ்.	புற்றுநோய், என்.சி.பி.எச். சென்னை.
1957	ஜெசுதா	ஆரோக்கியமாய் வாழ்வது எப்படி? வானதி பதிப்பகம் சென்னை.
1958	இராமசாமி, எஸ்.எஸ்.	சுகப்பிரசவம் என்.சி.பி.எச். சென்னை.
1959	கல்யாணசுந்தரம், எம்.எஸ்.	நவீன வைத்திய சாதனைகள், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் சென்னை.
1960	சீனிவாசன், எஸ்.	சரீர சாத்திரமும் அனாடமியும், ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட் திருவாரூர்.
1962	வானமாமலை, என் தோத்தாத்ரி, எ.எஸ். (மொ – ர்)	உடலியல் மருத்துவ வரலாறு, என்.சி.பி.எச். சென்னை.
1962	குகப்பிரியை	இன்பத் தொல்லை, கலைமகள் காரியாலயம் சென்னை.
1964	கதிரேசன், அ.	நீரழிவு – சயரோகம், தமிழ் வெளியீட்டுக்கழகம் சென்னை.
1965	கதிரேசன், அ.	என்புருக்கி நோய், தமிழ் வெளியீட்டுக்கழகம் சென்னை.

1965	மூர்த்தி, வி. ஆர்.	ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா, (இரண்டாம் பாகம்) .
1966	மணிமேகலை (மொ—ர்)	மகப்பேறும் மாதர் நோயும், த.பா.நி. சென்னை.
1966	சுந்தரம், எஸ்.	பாக்டீரியா, த.பா.நி. சென்னை.
1966	கதிரேசன், அ.	செல்லிலிருந்து சோதனைக் குழாய் வரை, ஹிக்கின் பாதம்ஸ் சென்னை.
1967	குழந்தைநாதன், சு.	டாக்டர் (மருத்துவ இயலுக்கு அறிமுகம்), அழகுப் பதிப்பகம் காரைக்குடி.
1968	பாலகுருசாமி	அணுசக்தி மருந்துகள், ரத்னா பதிப்பகம் சென்னை.
1968	கதிரேசன், அ.	க்ஷய நோயும் தடுப்பு முறைகளும், என்.சி.பி.எச். சென்னை.
1968	கதிரேசன், அ.	உங்கள் குழந்தை, என்.சி.பி.எச். சென்னை.
1969	சின்னத்தம்பி, அ.	மகப்பேறு மருத்துவம், சுன்னாகம்.
1969	ராஜதுரை, ரா.	மருத்துவக்கலை, அன்றும் இன்றும், கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் சென்னை.
1970	லலிதா காமேஸ்வரன்	புற்றுநோய், மதுரை காந்தி நினைவு நிதி
1970	சிதம்பரதாணுபிள்ளை,எஸ்.	மனித உடற்கூறுபாடு, வினா – விடைகள் சித்தமகுட பிரசுரம் சென்னை.
1970	கதிரேசன், அ.	மாரடைப்பு நோய்—தீர்வும் தடுப்பு முறைகளும், என்.சி.பி.எச். சென்னை.

1971	திருஞானம், தி.	குழந்தையும் வளர்ப்பு முறைகளும், என்.சி.பி.எச். சென்னை.
1971	சின்னத்தம்பி, ஆ.	பிரயோக உடற்றொழிலியல், யாழ்ப்பாணம்.
1971	மீனாட்சிசுந்தரம், சு.	புற்றுநோய், தொழில்நுட்பம் – 8
1972	கண்ணப்பன், வீரையன் புஷ்பராஜன் & இராசகோபால்	வாய் – பல் மருத்துவம், கழகம் சென்னை.
1972	சின்னத்தம்பி, ஆ.	நலம் பேணல் விஞ்ஞானம், கொழும்பு.
1972	கதிரேசன், அ.	மூளையை நம்பலாமா? என்.சி.பி.எச். சென்னை.
1971–72	வெங்கடசாமி, ஜி. சரோஜினி, டி. துரைராஜ், எஸ்.கே. & சேது, ஆர் (மொ – ர்)	உடலியங்கியல் பகுதி 1–4, த.பா.நி. சென்னை.
1973	மெங்கல், ஏச்.சி. மற்றும் பலர்	ஆரோக்கிய வழி, தி. ஓரியண்டல் லாங்மன் பப்ளிஷிங் ஹவுஸ் பூனா.
1974	கண்ணப்பன், ஜே.ஜி.	பல் பாதுகாப்புக் கழகம், சென்னை.
1975	கதிரேசன், அ.	உங்கள் இருதயம், என்.சி.பி.எச். சென்னை.
1976	வெங்கடசாமி, ஜி.	தொழில்வழி நோய்கள், என்.சி.பி.எச். சென்னை.
1976	வெங்கடசாமி, ஜி.	வைட்டமின்கள், என்.சி.பி.எச். சென்னை.
1976	கதிரேசன், அ.	மார்பு நோய்கள், த.பா.நி. சென்னை.

1977	கிருட்டிணன், க. ரா.	மருந்துகளும் பயன்களும், கோவை.
1977	வெங்கடசாமி, ஜி. லலிதா காமேஸ்வரன் & கதிரேசன், அ.	இரத்த வாந்தியும் சளியில் இரத்தமும், என்.சி.பி.எச் சென்னை.
1977	வெங்கடசாமி, ஜி. லலிதா காமேஸ்வரன் & கதிரேசன், அ.	பூச்சிகளால் பரவும் நோய்களும் தடுப்பு முறைகளும், என்.சி.பி.எச்., சென்னை.
1977	மணிவண்ணன், எஸ்.எம்.	மருத்துவத்தாதியருக்கு உடற்கூற்றியலும் உடலியங்கியலும், த.பா.நி. சென்னை.
1977	லோகமுத்து கிருஷ்ணன்	நரம்பு மருத்துவம், கழகம் சென்னை.
1978	வெங்கடகிருஷ்ண அய்யங்கார். தி.	உணவும் ஊட்டமும், த.பா.நி., சென்னை.
1978	தியாகராஜன், ஆர்.	உடற்கூறு , (ஆசிரியர் : சாமுவேல் பி.கிறீன்) இந்திய மருத்துவக் கழகம் தமிழ் நாடு அரசு சென்னை.
1978	தம்பி சீனிவாசன்	உங்கள் உணவும் நீங்களும், நேஷனல் புக் டிரஸ்ட் புதுடில்லி.
1978	தம்பையா, எ. எஸ்.	தோல் வியாதிகள், த. பா. நி. சென்னை.
1979	பாலகுருசாமி	ஏழைகளுக்காக எளிய வைத்தியம், ரத்னா பதிப்பகம் சென்னை.
1979	சந்திரா, பா.	குழந்தைப் பருவ நோய்களும் குழந்தை நலப் பாதுகாப்பும், என்.சி.பி.எச். சென்னை.
1979	சந்திரா. பி.	குழந்தை வளர்ப்பு, என்.சி.பி.எச். சென்னை.
1980	நடராஜன், எம்.	தோல் பாதுகாப்புக் கழகம், சென்னை.

1980	சின்னத்தம்பி, அ.	அறுவை வைத்திய நலம் பேணல் கைநூல், யாழ்ப்பாணம்
1980	இரத்தினசண்முகனார்	குழந்தை வளர்ப்பும் குழந்தை மருத்துவமும், அருணோதயம் சென்னை.
1980	கதிரேசன், அ. (மொழி)	மனித உடற்கூறியலும் உடலியங்கியலும், என்.சி.பி.எச் சென்னை.
1980	சுந்தரம், என்.எஸ்.	கண் பாதுகாப்புக் கழகம், சென்னை.
1980	கோபாலகிருஷ்ணன், கல்வி.	தொற்றுநோய்களும் தடுப்பு முறைகளும், என்.சி.பி.எச். சென்னை.
1981	இராமமூர்த்தி, அ.	ஹோமியோபதி, இமயம் பதிப்பகம் நாகப்பட்டினம்.
1981	கண்ணப்பன், ஜே.ஜி.	பல் மருத்துவத் துறையில் அறிவியலின் பங்கு, த.அ.க., சென்னை.
1981	தெய்வநாயகம், செ.நெ.	நுரையீரல் புற்று, த.அ.க., சென்னை.
1981	நடராசன், கே.	பால் உணர்வு மருத்துவம், விசாலாட்சி பதிப்பகம் சென்னை.
1981	மூர்த்தி. ஏ.எஸ். (மொ–ர்)	இதயத்தை வலுவாக்கு, என்.சி.பி.எச். சென்னை.
1981	ரெக்ஸ். பி. எம்.	நுரையீரல் நோய்கள், பூம்புகார் பிரசுரம் சென்னை.
1981	லட்சுமிசுப்ரமணியம், எஸ்.	ஆரோக்கிய ரகசியம், வானதி பதிப்பகம் சென்னை.
1981	ராஜம்மாள், பா தேவதாஸ்	அறிவுத்திறனும் சத்துணவும், த.அ.க., சென்னை,

1981	கிருட்டிணன், க. ரா.	சேய் நலம், சரசுவதி புத்தக மனை கோயம்புத்தூர்.
1982	இரத்தின சண்முகனார்	இரத்த அழுத்தம், இதய நோய்களும் நீக்கும் வழிகளும், அருணோதயம் சென்னை.
1982	*கணபதி ஐயர், ச.கு.*	*சூலை நோயுடன் கூழுக வாழ்வு,* பாரி நிலையம் சென்னை.
1982	கந்தசாமி முதலியார்.ச.	உணவு மருத்துவம், பாரி நிலையம் சென்னை.
1982	கந்தசாமி முதலியார். ச.	அதிக ரத்த அழுத்தம். பாரி நிலையம் சென்னை.
1982	சௌந்திரராஜன், டி.எம்.	நீண்ட ஆயுள் ரகசியம், சங்கீதவாணி சென்னை.
1982	நமச்சிவாயம், துரை.	புகைப்பிடிப்பதும் புற்றுநோயும், அசோகன் பதிப்பகம் சென்னை.
1982	மாதவன், இரா.	கண் மருத்துவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
1982	முபாரக் அலி, கலவை.மு.	முதலுதவி, என்.சி பி.எச். சென்னை
1982	ராஜன், கே.என்.	தொழில் சார்பு நுரையீரல் நோய்கள், என்.சி.பி.எச். சென்னை.
1982	கோபாலகிருஷ்ணன் கல்வி.	சத்துணவுத் திட்டம், என்.சி.பி.எச். சென்னை
1982	குமாரசாமி, இரா.	பாடாண்திணை – ஒரு மூலிகை மருந்தறிவியல் ஆய்வு, தமிழியல்.21, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை

1983	சப்மன் தனெல். வி.மனுஷ சுகரணம், (மொ – ர்)	மானிப்பாய் அச்சுக்கூடம் இலங்கை.
1983	இராஜன், பி. பி. & புஷ்பராஜன். பி.	பல்–ஈறு நோய்கள் தடுப்பு முறைகளும் பாதுகாப்பும், என்.சி.பி.எச். சென்னை.
1983	கதிரேசன், அ.	அனைவருக்குமான உடல் இயங்கியல், என்.சி.பி.எச்., சென்னை.
1983	சுந்தரம், எஸ்.	குடும்பக் கட்டுப்பாடு – ஓர் ஆராய்ச்சி, ஸ்டார் பிரசுரம் சென்னை.
1983	சௌந்திரராஜன், டி.எம்.	சுற்றுப்புறமும் சுகாதாரமும், தமிழரசி பதிப்பகம் சென்னை.
1983	திருமலை நடராஜன்	உணவு முறையால் தீரும் நோய்கள், அபிராமி பப்ளிகேஷன்ஸ் சென்னை.
1983	திருமலை நடராஜன்	சருமநோய்களுக்கான மருத்துவம், அபிராமி பப்ளிகேஷன்ஸ் சென்னை.
